
அகத்தியர்

ஆறெழுத்தந்தாதி
அந்தரங்க தீட்சாவிதி



தாமரை நூலகம்
சென்னை-600 026

அகத்தியர்

ஆறெழுத்தந்தாதி

அந்தரங்க தீட்சாவிதி

பதிப்பாசிரியர்
எஸ். பி. இராமச்சந்திரன்

தொலைபேசி எண் : 480 02 49

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ .காலனி
வடபழனி, சென்னை - 600 026,
website : www.intamm.Com/nool/thamarai
email : thamarai@intamm.com

தாமரை வெளியீடு எண்	:	248
இரண்டாம் பதிப்பு	:	**மே 2015**
மூன்றாம் பதிப்பு		**ஏப்ரல் 2020**

நூலைப் பற்றி

உரிமை பெற்றது

நூலின் பெயர்	:	அகத்தியர் ஆறெழுத்தந்தாதி அந்தரங்க தீட்சாவிதி
பதிப்பாசிரியர்	:	எஸ்.பி. இராமச்சந்திரன்
நூலின் தன்மை	:	சித்த மருத்துவம்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7, என்.ஜி.ஓ.காலனி, வடபழனி, சென்னை - 600 026.
பதிப்பு ஆண்டு	:	**ஏப்ரல் 2020**
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	டெமி 1 X 8
தாளின் தன்மை	:	14.4 வெள்ளைத் தாள்
எழுத்தின் அளவு	:	11 புள்ளி,
மொத்த பக்கங்கள்	:	108
பிரதிகள்	:	1000
பைண்டிங்	:	செக்ஷன்
நூலின் விலை	:	ரூ. **50/-**
கணிப்பொறி	:	கார்த்தி கிராபிக்ஸ், சென்னை- 26
அச்சிட்டோர்	:	கிரியேடிவ் ஆப்செட், சென்னை- 34.

பதிப்புரை

புத்தியும் நீ ! முருகோன் ஆறெழுத்தின் பொருளறியச்
சத்தியும் நீ ! சிவமாய் எங்குமாய்நின்ற சர்வமுகச்
சித்தியும் நீ! அன்பர் பார்க்கின்ற ஞானத் தெளிவுதரு
முத்தியும் நீ! அன்றி வேறில்லை வேதம் முடிந்திடமே! 20

என்று அகத்தியர் பாடுகிறார். பாடலைப் படிக்கும் பொழுது உடல் புல்லரிக்கிறது. முருகா...... வேதங்கள் யாவும் போய்ச் சேர்கின்ற முடிவான இடமே நீதான்! அப்படியென்றால் உன் பெருமையைப் பேசமுடியுமா? நினைக்கத்தான் முடியுமா? புத்தியும் நீ! சத்தியும் நீ!. சித்தியும் நீ! முத்தியும் நீ.........! என்று முடிவாக முடித்துக் கூறுகிறார் அகத்தியர்.

அகத்தியர் பாடிய ஆறெழுத்தந்தாதி என்னும் இந்தச்சிறிய நூல் பக்திச் சுவை பாடும் நூல்களுக் கெல்லாம் ஓர் மணி மகுடம். அதே சமயம் சித்தர் நெறியையும் அகத்திய மாமுனிவர் இச்சிறு நூலில் சிறப்பாகப் பாடியிருக்கிறார்.

ஓங்கார வட்டத்துள் ஆதாரம் ஆறும் விட்டு ஓங்கி ஏறி
ரீங்கார வட்டத்துளே விந்துநாதம் இலணச் சுடர்மேற்
பாங்காம் பரைசிவ மாகி ஒன்றாகிப் பரவெளி நின்று
ஆங்காரத் தாண்டவி யாறெழுத்தாறு முகத் தம்மையே. 53

ஆதாரங்கள் ஆறையும் கடந்து சிவமும் சத்தியும் ஒன்றாகிப் பரவெளியில் நிற்கும் ஆங்காரத்தைந் தாண்டிய ஆறெழுத்துக்களை ஆறுமுகமாகக் கொண்ட அம்மையே என்று பாடுகிறார்.

ஆறெழுத்தந்தாதியோடு- அகத்தியர் அந்தரங்க தீட்சாவிதி என்ற பெருநூலும் இத்தொகுப்பில் சேர்த்து வெளியிடப் பட்டுள்ளது.

அந்தரங்க தீட்சாவிதி நீண்ட நாட்களுக்கு முன்பே கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலிருந்த ஓலைச் சுவடியிலிருந்து எழுதி வைக்கப்பட்டது. சில பாடல்கள் சிதைந்தும் சில முழுவதுமாக இல்லாமலும் இருந்ததால் வெளியிட முடியவில்லை. இப்பொழுது [illegible] முழுமையாக்கப் பட்டு வெளியிடப் படுகிறது.

இந்நூலின் சிறப்பைப் பற்றிக் கூறுவதென்றால் ஆயிரம் நாப் படைத்த ஆதிசேடனாலும் முடியாது என்று வழக்கமாகச் சொல்வதைப்போல் சொல்வதைத் தவிர வேறு வழியில்லை.

சித்தர் நெறி செல்ல விரும்புபவர்க்கு இது விண்ணில் நின்று சுடரும் ஞான தீபம்! வழிகாட்டும் தெய்வச் சுடர். இதில் வைத்தியமும் உண்டு. வாதமும் உண்டு. யோகமும் உண்டு. ஞானமும் உண்டு. மிகத் தெளிவாகவும் படிப்படியாகவும் யோக சாதனை பெறுவதற்கான வழியை இந்த நூலில் அகத்திய மாமுனிவர் கூறியிருக்கிறார்.

அழிவில்லை சரிதையது முதலாம் தீட்சை
அப்பனே கிரிகையது இரண்டாம் தீட்சை
அழிவில்லை யோகமது மூன்றாம் தீட்சை
அப்பனே ஞானமது நாலாம் தீட்சை
சுழிகாணும் நாலுதீட்சை முடிந்தாலப்பா
சிவன் இவனாம் பேதமில்லை சொரூப சித்தி......
உழலாதே யோனியுட ஆசைத் தீயில்
விழுவதை நீமறந்துவிடு உறுதியாக.......

ஞானத்தால் நீயே சிவன் ஆகிவிடு! நீயே சிவன் என்பதை உணர்ந்து கொள். இதைவிடப் பெரிய பேறு உலகத்தில் வேறேதேனும் உண்டோ?

எஸ்.பி. இராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்

91/4

ஆறெழுத்தந்தாதி

கணபதி வணக்கம்

காப்பு

கற்பக மிருக்கத்தன் கந்தமிகு நந்தவனப்
பொற்பக மிருக்கப் பொதிகைமுனி-நற்கரகத்
தண்ணீரை யாதரித்த் வைந்துகரன் காப்பாமெம்
மெண்ணீரை யாறெழுத்திற்கே

முருகன் துதி-கட்டளைக்கலித்துறை

ஆறுமுகமுண்டு பன்னிரு தோளுமுண் டங்கையினி
லேறிய வேலுமுண்டு வெற்றிம யூரமுண் டேவல் செய்ய
மீறிய சிங்கத்துரைவீர வாகுண்டு வேளைக்கிங்கே
கூறிய போது வருவான் குமரகுருபரனே.

நூல்

ஞானாசிரியனும் பிரம்மமும் ஒன்றே

ஆனந்த மாறெழுத் தாலையமா மென தங்க மெலாந்
தானந்த மாதிமுதற்பொருளா கிச்சத்தாங்கமுநீ
மோனந்தமுன் னுளதென்னுள துன்னுள தென்னுளதால்
ஈனந்தம்போ க்கியெனைநீ யதாக்கிய வென்குருவே. 1

என்குருவே கிருபையானந்த மோன மெழிற்சிவனார்
தன்குருவே பரையீராறு கோலஞ் சமைந்த நமைப்
பின்குருவே விந்துநாதம் பரம்பெரும் பேரொளிக்கு
முன்குருவே முருகோ னாறெழுத்தென்னு மூலங்களே. 2

மூலங்களே சிவஞ் சத்திவித்தா யுன்னுமுன் பிறந்த
சீலங்களே பஞ்ச கர்த்தாவும் நின்வழித்தேறி யொரு
காலங்களே யொக்க வேகிக்கருப்புக் கடையினின்ற
கோலங்களே முருகோனா றெழுத்தின் குணக்குன்றமே. 3

குணக் குன்ற மேயன்ப ருள்ளூடுருவிக் குமுகுமென
மணக்குன்ற மேமுரு காவென்தன் கன்மத்தை மாற்றிடுங்
கணக்குன்றமே யெங்கு மாறெழுத்தாயுருக் காட்டிய பொற்
கணக்குன்றமே யண்ட பிண்டமொன்றாய் நின்ற சூத்திரமே. 4

திரமே முருக நின்னா றெழுத்தங் கிதன் சிந்தை பற்றிப்
பரமே யிதென் றுள்ளுணர்ந் தோர்க்கு மன்பர் பழவினைநிட்
டுரமே சிதையும் பிறப் பறுங் கூற்று மொழியு நில
வரமே யெக்காலமுஞ் சாகார்சிவசித்தர் மானிலத்தே. 5

நிலத்தே யிறப்பும் பிறப்பு மறாக்கன்ம நீங்குமிப்பூ
தலத்தே மிதக்கினுமே முருகாவென்றுன் னாறெழுத்தே
பிலத்தே பிடிப்பவர்க் கப்பாநின்னானந்தப் பேரொளிரச்
சலத்தே மிதப்பரல்லாற் பின்னை வேறுதடையிலையே. 6

தடையாது பாசத் துருகாது மாயச் சரமருகி
லுடையாது காய முலையாதுள்ளாவி யுலகிலினிப்
படையாதயன் கைப் பவநீக்கி ஞானப் பரத்துறைவா
முடையா தெங்கெங்குஞ் சிவமாகக் காட்டு நின்னாறெழுத்தே.7

ஆறெழுத் துண்மை யறியார்கள் கன்ம மறுக்க வப்பால்
வேறெழுத்தில்லை வெண்ணீறில்லை மால் சிவ வேடமில்லை
தேறெழுத்தேதயன் கையுங் கருக்குழிச் சேரலும் பின்
மாறெழுத் தந்தகன் றென்புறத்தே யென்றும் வெளவுவரே. 8

வெளவு நின்றாட் கன்பிலாதே நரகத்தை வெளவும் வஞ்சகர்க்
கெவ்வழி மோக்கத்திற் கேதுவென்றா லெழுத்தாறுள் நின்
சவ்வுரவ் வவ்வுணவ் பவ்வுவக்கரந் தன்னி லொன்றைக்
கௌவுவர் கௌவுவர் சொற்பிறந்தாற் கதிகாட்டுமதே. 9

கதிகாட்டு மோ ரெழுத்தே வஜ்ர காயந்தரும்
நிதிகாட்டு மோரேழுத் தோரெழுத்தே யுண்ணிரப்பு மருண்
மதிகாட்டு மோரெழுத் தோரெழுத்தே யெண்ணுள் வைத்தபொற்றாட்
டுதிகாட்டு மேகுக நின்னாறெழுத்துள்ள சூத்திரமே. 10

சூத்திரம் நம்முடற் சக்கர மேருவைச் சுற்றியரை
மாத்திரையிற் சந்த்ர சூர்யர் போய்வரும் வாசிதனைக்
காத்திரவாய மட்டியோத் திருந்து கருமௌனச்
சாத்திரங்கைவரு நின்னாரெழுத்துத் தரிநெஞ்சர்க்கே. 11

நெஞ்சே பொற்பீடம் நந்தேகம் சிவாலயம் நீள்பொறிக
ளஞ்செ யிவைபெறு மாதாரஞ் சத்தியருணிலை விட்
டுஞ் சாதுணர்வு முருகன்றனாறெழுத் துன்னுவர்க்குச்
செஞ்சேவலன் றன்றகைக்குஞ் சரீரமுஞ் சித்து மொன்றே. 12

ஒன்றேமுருக நின்னாறெழுத்தோசை யுலகமெலாம்
நின்றேபல பொருணீயென்று நானென்று நீதிவெவ்வே
றன்றே சமயங்களீராறுமாய் நின்ற வானந்தநீ
யென்றே தெளிந்தவர்க்கே கன்மமாயை யிருளருமே. 13

இருளறுமெங்கு மொளியாய் நிரம்பு மிரவுபகன்
மருளறு மாயுளும் வர்த்திக்குங் கர்த்தன் மட்டற்று யர்ந்த
பொருளறு கோணத்தினுள்ளே யரிய பொருளள நின்
றருளருணாசல வேலை யுனதெழுத் தாறுன்னவே. 14

உன்னரி தாம்முரு கோனாறெழுத்தினை யுச்சரிப்பார்க்
கென்னரிதாம் பொருள் வேறிலையே யிறப்பும் பிறப்பும்
பின்னரிதாம் இவை யேதென்றிப் பேசிற் பிரமனிடந்
தன்னதிகாரமும் தப்பியப்பானின்ற தானவனே. 15

தானவனாதி விநாயகநான்முகன் சங்குசக்ர
வானவருத்ரன் மயேஸ்வரனீசன் வடிவிவையே
யானவனாறு முகத்தன்பர சமயத்தன் முரு
கோனவனின் னெழுத்தாறே பொருளெனக் கொண்டவனே. 16

கொண்டனை கையிற் பொறைவே லன்பின்புறு கொக்கிரண்டாய்க்
கண்டனை மஞ்ஞையுஞ் சேவலுமாய்வரக் காரணத்திற்
பண்டனையாதி பகவனிப்போ தவன் பாலனென
விண்டனை யாறெழுத்தாய் முகமாறுடன் மேவியதே. 17

மேவியவாதி சிவாய சதாசிவ வேலைதனி
லாவியநம் பெருமான் முருகாவென் றுன்னாறெழுத்தே
தாவியவுள்ளம் தாகவெண் ணீற்றைத் தரித்துனையே
கூவிய பேர்கண் முன்னஞ்சே லென்றே வந்து கூடுவையே. 18

கூடுவை யன்பருள் ளாலயமா மெனக் கூடியிருந்
தாடுவைநீ முருகோனா றெழுத்தினை யாரொருவர்
நாடுவர்நீ யவர்கன்மந் துடைத்து நரகரித்து
போடுவைநீ யென்றுகண்டோ ரடைவர் நற்புத்தியிதே. 19

புத்தியும் நீ முருகோனாறெழுத்தின் பொருளறியச்
சத்தியும் நீ சிவமாயெங்கு மாய்நின்ற சர்வமுகச்
சித்தியும் நீ யன்பர் பார்க்கின்ற ஞானத் தெளிவுதரு
முத்தியும் நீ யன்றிவேறில்லை வேத முடிந்திடமே. 20

முடிந்திடம் பேச்சற்ற மோன மெஞ்ஞான முதல்வ நின்னைப்
படிந்திடமே பதிபாசம் பசுவிருட் பற்றற்றதும்
விடிந்திடந் தானென்னு நானென்னு மாயையும் விட்டேட
கடிந்திடத் தப்புறத்தப்புறத் தானந்தம் காணுமதே. 21

ஆறெழுத்தந்தாதி

காணுமென பான்முருகோனாறெழுத்தின் கனியையுண்டே
பூணுமென் பாலையும் புலனுமொன்றாய்ச் சரம்பூரித்து துள்ளாய்த்
தோணுமென் பாலிற்ற சையூடசைவற்ற ஜோதியொத்தா
லாணுமென்பார் பெண்ணுமென்பா லன்றறிவதுவே. 22

அறிவது வேதநின் னாறெழுத் தைந்தெழுத் தாலதிலே
பிறிவது மவ்வெழுத் தண்டபிண்டத்திற் பெருஞ்சித்தியாய்ச்
செரிவது மப்பதநின்றோ ரெழுத்துந்தி காந்தமுட்டி
மறிவதுங் கண்டு தன்னுள்ளே தெளிந்த மௌனங்களே. 23

ஏதானவாறெழுத் துள்ளைந்தெழுத்தென் றெடுத்ததெல்லாம்
சூதாகநானென்றுருப் பண்ணும் வார்த்தையைத்தூக்குதற்கோ
ராதாரமாகி யகம் புறமு மருவுருவா
மோதாவுணர்வு முயிரும தாய்நின்ற தோரெழுத்தே. 24

ஓரேழுத்தாதி நிராமய மைவரு முன்னரியப்
லாரெழுத்தவ் வெழுத்தே யம்மைதேவி பிறங்கவன்பா
லெறெழுத்துஞ் சடைவானவர்தா மவனோடு தம்மைச்
சீரெழுத் தாறுமோர் வேலாயெடுத்த திருவுருவே. 25

திருவுருவாகிய செவ்வேண் முருகநஞ் சிந்தையுள்ளே
யருவுருவாய் நின்ற ஆறெழுத்தாயுன்னை யாண்பெண்ணிதென்
றொருவுருவாய்க் கொள்ளப்போகா தவரவ ருள்ளத்திலே
கருவுரு வெப்படி யப்படியே நின்ற காரணமே. 26

காரண காரிய மிரண்டையுந்தாங்கிக் கடவுண்முன்னாட்
பூரணஞான முகமாய்ப் பிரவேசிப்ப பொங்கழலை
யாரணங் காப்பதெனவே யருவுவருயானந்த
நாரணரூபமுஞ் சங்கரவேடமு நண்ணியதே. 27

நண்ணினவாறு முகமாய் முருகன் நமதுளத்தி
லெண்ணின காரியமெல்லாந் தரும்பொரு ளெல்லையிலாக்
கண்ணின னாறெழுத் தானமெஞ் ஞானக் கருப்புயர்ந்த
மண்ணினும் விண்ணினு யாவுமொன்றாய் நிறைமா மயமே. 28

மாமயமா முருகோனாறெழுத்து மட்டற்ற வரி
வோமயமா மவ்வுமுவ்வுமதாய்ச் சுழித்தோங்கு முச்சிப்
பூமயமாய்ச் சிவமாய்ப் பரையாய்ப் பற் பொறியொடுநி
ராமயமா யெங்குந் தானாயிருந்த ரகசியமே. 29

ரகசிய மாமுரு கோனாறெழுத்தையு நம்பினர்க்குச்
சுக செயமன்றி யவசெய மில்லைத் தொழிற்படுத்துன்
முக செயுந்தம்பன மோகனம் பேதன முன்னளிப்போ
[illegible] முச்சஞ் சங்கார மெட்டிற்கு மாதியதே. 30

ஆதி பரைகங்கை தெய்வானை வள்ளி யரன்முருகன்
ஜோதிமுக மைந்து மாறுமுக மழுச்சூர்க் கதிரவேற்
கோதிலிடப மயில் கொன்றை மாலை குளிர்கடப்ப
வோதிய வஞ்செடுத் தாரெழுத்தாஞ் சுடருற்பனமே. 31

சுடர் சங்கு சக்கரம் வேற்சூன் மழுவிற் சுரிகை குளி
ரடர் தண்டுகுடாரம் விட்டேற்றறிவாள் காக
மிடர் துஞ்சுபாச மெரிபாரை மானோ டீராறுகையும்
படரும்படிப் பொங்கி யாறெழுத்தங்கி பரந்ததுவே. 32

பரந்தணன் செய்கை பல்லாயிரமும் பட்டூடுருவி
நிரந்தரஞ்சிரம் பாதலம் பாத நின்றோர் முகமாய்
துரந்தன்றி யாவையுஞ் சூர்களு மெற்றித் தொம்மெனநடி
தரஞ் சுந்தரஞ் சங்கரஞ் சம்புவாய் நின்ற தாறெழுத்தே. 33

எழுத்தாறு ஒன்றுபட்டேகிக் கருத்துளெழுத்த தொனி
வழுத்தாத மூல முருகன் பொற்றாடனை வைத்துளத்தே
பழுத்தோகை யன்போடிரவு பகலும் பரமுனக்கென்
றழுத்தாத சத்தப் பிறவிக்கடல் விட்டகலரிதே. 34

பிறவிக் கடற்குடற் சக்கரமாவி பெருஞ்சரக்கி
லறவித்த பத்தொன்ப தாறுமச்சாணி யயன்கையினா
லுறவித்த மந்திர மூன்று நங்கூர முன்னஞ் செழுத்துந்
துறவித்த வொட்டன் குகனாறெழுத்தின் சுயகர்த்தனே. 35

கத்தன் பரங்கிரி சீரலை யோகங் காண் பலகுன்
றத்தன் றென்சோலை மலையாவினன்குடி யாறு மென்பர்
வித்தொன்பதாயென் னுளா தாரமாறும் வெவ்வேறுருவாம்
பித்தன் சருவ குருவாஞ் சடாக்ஷரப் பேரொளிக்கே. 36

குருவானவையன் ஷடாக்ஷரத் தாகமங் கூறி முன்னே
அருவான வெட்ட வெழுபாருரையுணர் வற்றவிடம்
பெருவானறிவு தெளிவா யளவற்ற பேரொளியா
யுருவானதீத முருவாம் படிக்கனி வுற்றதுவே. 37

உற்றது மெய்விட மிவ்வண்ண மின்னதென் றோத நினைப்
பற்றது பற்றற்ற தும்மனப் பாவக மானதெங்கே
பெற்றதெவ் வந்தரமோ மூச்சுவிட்டதும் பின்பசையாச்
சொற்றது சொற்றிடத் துண்டுளந்தேக்கித் துணுக்கென்றதே. 38

துணுக்கென்றுபமுன் சரணஞ் சரணென தோற்றியொரு
கணுக் கண்டிலையுடன் பூத்தது காய்த்துக் கனிவடிவாய்த்
திணுக் கென்றுள்ளுநெ முஞ் செக்கரும் பசமையும் திங்களுமா
யணுக்கண் துண்டிலை யென்றே பாவசமானதுவே. 39

பரமானதாதி சிவமாதி சத்தி யுற்பத்தி முத்தி
யுரமான பார்வை யுறு விந்து நாதத் துதி மௌனந்
திரமான் சற்குரு தேசிகநாமந் திடாரித் தனந்
தரமாமகார முகாரமோங் காரித்துச் சத்தித்ததே. 40

சத்தித்தவ ளவன்றானா யவனவ டன்வடிவாய்
முத்தித்த பச்சைமுழுமுதலாய்ச் சண்முகவடிவாய்
அத்தித்தறு சமயந்தொழி லாறுக்கு மாறெழுத்தாய்ச்
சித்தித்தென்னாவி விளையாட லண்டத்தின் செய்கையதே. 41

அண்டத்திலுள் ளதுபிண்டத்திலும் முண்டவ்வாறெழுத்தும்
பண்டித்ததற் சதகோடி மகாசத்தி பண்ணாதற்காய்த்
துண்டத்துடலுயிராய்ப் பகைசெய்த சூத்திரத்தாற்
கண்டித்த நம சிவாய வெனவுருக் காட்டியதே. 42

உருவானமூல மதுவட்ட நாலித முள்ளின்முக்கோ
டருவாம் பிரணவச் சத்தியும் சவ்வுஞ் சருவமயக்
குருவா மதோமுக மவ்வேதியானங் குளிர்ந்தலிங்க
மருவா மவையினவ தானே கணபதி யானதுவே. 43

ஆனமண்ணாறிதழ் நாற்கோணம் பொன்னிற மஞ்சுகுண
மீனமுன்மூல மது துள்ளி னொவ்வாகு மிவையுவந்த
பான மமிர்த முகஞ்சத்தி தேவிசொற் பாரதியா
டானுயர்மந்திர நவ்வாகு நான்முகன் சக்கரமே. 44

கரமாயவைப் பிறைகோணம் வெண்பத்திகள் காண்குணம் நாற்
றரமாயருள வுப்பலங்கார முட்டந்தையதாய்
வரமாயதேவி திருமுகம் வாம மந்திரமே
திரமாயதோ நமநாராய ணாவரிச் செய்கையிதே. 45

அரிவன்னிசெம்மை முக்கோணமு மூன்றிதழாறிரண்டாந்
தரியுண்மைநவ்வுஞ் சிவஞ்சத்தி பார்வதி தானுளதாம்
பரியுண்ணரோத்ர மகோர முகமன்பர் பாவமறத்
தெரியுண்மைமந்திரஞ் சிகார முருத்திரன் சேவடியே. 46

அடியானவாயு கருப்பறுகோண் பதினா றிதழ்மேற்
றிடியானிரண்டு குணம் பொருட் பேர்வவ்வு டேகலிங்கம்
பிடியான சாம்பவி சத்திமுகந் தற்புருடமருட்
டுடியானமந் திரமேவாம் மயேசுரன் றோற்றங்களே. 47

தோற்றிய வானது தூநிறவட்டந் தொடுமிதழ்ரண்
டேற்றியவோர்குண மவ்வாம் பரம்பற்றியே பிரியஞ்
சாற்றிய பங்கின் மனோன்மணி தேவியீ சானமுகம்
போற்றிய வவ்வரி நீயுஞ் சதாசிவ பூரணமே. 48

பூரணமாகிய வான்கா லனலப்புப் பூமியிவை
சாரணமூலமுந் தானாகி யோரிதழ்த் தாமரைமேற்
காரணவவ்வு வென்னுள்ளஞ் சுடர்ப்பிறை காட்சியுமா
யாராண யோகி பராசக்தி தேவிநின் னங்கமதே. 49

ஏயுமிதழ்பத் தொன்றினுநின்ற வெழுத் துருப்பாங்
காயமுட்சக்கர மாறெழுத் தாகுமோர் காத்ரமுயிர்
பாயும் பிரணவமே பரைதோற்றம் பலசித்திற்கொண்
டாயுமுடற்பொரு ளாவியும் வேட்சுழி யானந்தமே. 50

சுளியா தொரு வர்க்குத் தோயாதி தன்பர்க்குத் தோயும் வெட்ட
வெளியானையில்லை மெஞ்ஞானவதீதம் விளங்கிய சொற்
றளியாரெழுத்துள்ள வாதாரமாறொடு தற்பரைவிட்
டளியாதிடத்திற் குருமுருகோன் நின்றததிசயமே. 51

அதிசயமா றெழுத்தாறுஞ் சிவமு மறுமுகமாய்க்
கதிசெயுமூரற் பரைநெற்றிக் கண்ணெனக் காஷியுமாய்
விதிசெயுமா மயில்வேற்சத்தி யாவுங்கை வேற்படையாற்
றுதிசெயுமன்பர் முன்னோங்கார வட்டத்துட் டோன்றியதே. 52

ஓங்கார வட்டத்து ளாதாரமாறும்விட் டோங்கியறி
றீங்காரவட்டத்து ளேவிந்துநாத மிணைச்சுடர் மேற்
பாங்காம் பரைசிவ மாகிஒன்றாகிப் பரவெளிநின்
றாங்காரத் தாண்டவி யாறெழுத்தாறு முகத்தம்மையே. 53

ஆறுமுகத்தம்மை வேலாயி நின்னெழுத் தாறுமுரு
வேறுமுகத்திற் கிலக்கோர் முகமிலை வெவ்வினையைச்
சீறுமுகத்தி குமராயி யன்பர் சிந்தித்துநினைப்
பேறுமளித்தவர்க் குள்ளெழுத் தாந்திரப் பெண்கொடியே. 54

பெண்கொடியே பரமாயி சிவாயி பிரணவத்தி
நண்கொடியே முருகாயி குகாயி நலமுடைய
பண்கொடியே எனுளமே இரவும் பகலும்விடா
தண்கொடி யாதிசடாக்கரி ஈஸ்வரி யம்பிகையே. 55

அம்பிகையைம்பத்தோ ரக்கிரி யச்சரி யன்பர்தமை
தம்பிகைவெவ்வினை சங்கரி சூலி சரமகரந்
தும்பிகை யைந்துடை யான்றொழில் வாசி சுகந்தனெனக்
கும்பிகை யம்பரவல்லி சடாக்கரி குண்டலியே. 56

குண்டலிபாரதி லக்குமி பார்வதி கோமளைப்பூ
மண்டலிசாம்பவி தேவி மனோன்மணி வாகினிப்ர
சண்டலிகாரி யகாரி யுகாரி சடாக்கரிமா
விண்டலியாண்டபெண் ணீண்டுரு வாய்நின்ற மின்னொளியே. 57

மின்னொளியா யண்டபிண்ட சராசர விண்ணு மண்ணுந்
தன்னொளியான சடாக்கரி சாம்பச தாசிவமென்
றுன்னொளி யீஸ்வரன் ருத்திரன் மாலய னோதரிதா
மன்னொளியைவர்க்கு மாதாவுத் தையலு மானவளே. 58

மாதாபிதா குருதெய்வம் பெறுதவ மற்றுமுள்ள
தாதாவலியிட்ட காமிய மோதுஞ் சடாக்கரமென்
னாதாரமென்ற னுடற்பொரு ளாவி யருட்பலநின்
பாதாரவிந்தமுந் தந்தெனைக் காக்கும்பராசத்தியே. 59

பராசத்தி யுத்தமி பாசாங்குசக்தி பரஞ்சுடர்மா
நிராசத்தி நீறணிபூரணி காரணி நின்மலியாம்
வராசத்தி யாதிவடுகாயி யட்டவைரவிநந்
தராசத்தி ருத்ரி சடாக்கரிநிட்களத் தாண்டவியே. 60

தாண்டவி கோரி மகிடாசுரன்சிரந் தட்டழியத்
தீண்டவி பாசு பராக்ரம சூலினி சீறரவம்
பூண்டவிராகி நிராகி பொன்னம்மை என்புன்மையறுத்
தாண்டவி பஞ்சசபைவல்லி யாறெழுத் தனாந்தியே. 61

ஆனந்தி யம்மையரே புவனாயி அகாரசக்தீ
தானந்தி காலவடவாக் கினிசிவ சம்புபர
மானந்தி பேதனமா மயரூபி நிவாதிகமல்
தேனந்தி பூங்குழல் வாலைபுவனை திரிபுரையே. 62

திரிபுரை யாரெழுத்தாங்காரி நங்கலி சிந்தவறுத்
தெரிபுரை யம்பிகைவன்பரைவேற்கொண் டெறிந் துயிரைப்
பரிபுரை யென்னுளமேகோவி லன்பற்றுட் பாயலுமாய்
மரிபுரை யென்னக நின்னகமா க்கொண்ட மாதங்கியே. 63

மாதங்கி யன்பர் பிறவிக்கடலை வடவனலாய்க்
கோதங்கி முன்னைவினையையுங் கூற்றையுங் கோதி யுள்ளத்
தேதங்கிநின்று விளையாடும் பெண்பிள்ளை என்செவிக்கே
போதங் கிலியையும் சௌவும் ஒன்றாய் நின்ற பூரணமே. 64

பூரணமவையெனப் போக்கும் பிறப்பைப் புணர்கிலியுங்
காரணநின்னருட் காட்டிடுஞ் சவ்வெனக் கன்னிகைநின்
னாரணதற்சொரூபம் மவநாக் குவை யாறெழுத்தி
னாரணனான் முகனைம்முக மாம்நின்ற நாயகியே. 65

நாயகி நின்னன்பர் பாதத்தை யர்ச்சிக்கு நற்கடம்புந்
தோயகிலாரமுஞ் சாந்தமுங் கொன்றைத் தொடையலுநின்
சேயகிலாண்டமென் றேத்திய வாதி திருமுடிக்கே
யாயகிலாண்டமுந் தேக்குநின் னாறெழுத் தக்கரியே. 66

ஹரிஓம் நமத்துசிந்தம் மகரம்முதல் அவ்வளவும்
தெரிவான மந்திர மீராறெழுத்து நின்சித்தில்பல
விரிவாகி யண்டபிண்ட சராசர வேதமெவ்வும்
வரிவானதுங் கண்டதவ்வுஞ் சிவாய வசியென்பதே. 67

அவ்வுஞ்சிவாய வசியென்னு மந்திர மஞ்சுடன்மூன்
றொவ்வுஞ் சடாக்கர மும்மண்டலத்திலு மொட்டவுடன்
கவ்வுஞ்சிவஞ்சத்தி யச்சத்தி யாவியைக் காக்குமவ்வுஞ்
சவ்வுஞ் சிவசிவ வென்பாரிருவினை தானறுமே. 68

அறுமாம்பசுவென்னை யையன் குருபரன் றாளடைந்தோர்
மறுதாதர் கர்ப்பஞ் சிசுநசித்தோர்கள் வதைபலவுஞ்
செறுமாம்பரிதி சிவத்துவத் தீயையுந் தின்னுநின்னைப்
பெருமாதவற் கெழுத்தாறுங் குடிலைப் பெருநெருப்பே. 69

நெருப்பு நெருப்புப்பிரணவப் பெண்ணுந்தன்நெஞ்சுவஞ்சர்க்
கிருப்புநெருப்புக் கபாட நின்னன்பர்க் கிரவிவெண்ணெய்க்
கருப்பு நெருப்புறை காணார் மெய்க்கண்ட கனிகயிலைப்
பொருப்புநெருப்பு விருப்புறு ஞானப் பொறிக்கொழுந்தே. 70

கொழுந்தே மரகதக்குன்றே யிரத்னக் கொடிமுடிபூத்
தெழுந்தே ப்ரகாசிப்பை யீரேழுலகெ ண்டிசைபுவனந்
தொழுந்தே வருந்தொழில் வேதம்பல வெழுதோற்றத்தெம்மை
யழுந்தாமுன் பெற்றெடுத்தா ளதிலாறெழுத் தக்கரியே. 71

அரிஓமரகர வவ்வுஞ் சிவாயங்கி யங்கிசமாங்
கிரிஓமையுங் கிலியுஞ் சவ்வுஞ் சவ்வுங்கிலியுமையு
மரிஓஞ் சொரூப வருட்செயும்ரீ யரியுஞ்சிரியும்
திரிஓங் கிலியுஞ் சரவணவாயி சிவகுருவே. 72

குருவாந் திரிபுர பவநமவாயி குமரிமகா
திருவாந் திகழொளி பவ்வவ்வுமான சிவக்கடலே
மருவாம் பரிபுரபவ சிவமானந்த வாரிபெறுங்
கருவாஞ் செயலொழி பவநமவாயி கயற்கண்ணியே. 73

கண்ணீயெனுஞ் சரஹண பவதேவி கமலநரி
நண்ணார்புர மெரித்தோன் மூவரைப்பெற்ற நாயகியே
பெண்ணீரவர் க்குமம்மா மென்றுநின்ற பெருஞ்சுடரே
யண்ணீரெழுத்து க்குந்தாயாகி வந்த வரும்பொருளே. 74

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஒ ஓ. வெனுமைந்தெழுத்தி
இ ஈ ஒ ஓ ஔ நமநாராயணாய வென் றெட்டெழுத்து
உ ஊ எ ஏ ஒ ஓ ஔ வென்பதா மைம்பத்தோரெழுத்தி
எ.ஏ.ஒ.ஓ.ஔவும் மௌவுமதாம் நின்ற தம்பிகையே. 75

அவ்வுமுவ்வு மொவ்வுமவ்வொடு றீங்கொடை யுங்கலியும்
சவ்வும் பரைசிவ மங்குங்கொங்கென்ற சத்தமிரண்டு
மொவ்வுஞ்சரஹண பவவென்ற ஞானத்தொருவனரு
ளொவ்வுமரிகூ விரண்டையுந் தாங்கிநின் றொரெழுத்தே. 76

அரிக்கு முதற்பொருளெப்பொருளும் மண்டபிண்டமுவங்
குரிக்குஞ்சடாக்கரத் தோசையைப் பற்றுங் குணமறிந்துச்
சரிக்குந் தொழும்பர்க்கு ளாதாரமாறுந் தங்குமிருண்
மரிக்கும் பரவெளி யாகுநின்பாதம் வழிப்படுமே. 77

வழிப்படும்வாசலில் வாசியுள் வாசலில் வாங்கியப்பாற்
சுழிப்படுமாறெழுத் தங்கியைக் கோர்த்துச் சுழித்தவல்லா
ரழிப்படுந்தன்றலை மேலயன் கையெழுத் தஞ்செழுத்துங்
கழிப்படும்பின் பெமனோலை யதில்லை கனவினுமே. 78

கனமானமாய மிக்காயம்விட் டாவி கடக்குமுன்னே
மனமானபாவியைத் தன்வச மாக்கி வசியெனுமுற்
பனமானவேணியி லாறெழுத் தேத்தி நின்பாததரி
சனமானயோகி யழியா ரெக்காலமுஞ் சத்தியமே. 79

சத்தியமூலத் திரவியையூன் றிச்சரநிலை மேற்
பத்தியதீயிற் சகத்திரத் தெல்லையும் பாழ்படுத்தி
முத்தியசந்த்ரக் கலையூடுருவி முடிவி லுன்னை
யத்தியஜீவன் சிவமாயக் காட்டுநின் னாறெழுத்தே. 80

ஆறெழுத்தான நின்னானந்த மைம்பத்தோ ரக்கரத்திற்
கீரெழுத் தோரெழுத் தைந்தெழுத்தீரெழுத் தேத்திவல
மாரெழுத் தங்கிவடிவாய்க் கடாசல வாசல்புகுந்
தோரெழுத் துண்ணமிர்தஞ் சிவயோகிக் கிதுற்பனமே. 81

உற்பனமாகிய ஓங்கார வட்டத்தை யூடுருவி
யற்பனமாக்கையி னுள்ளே சிவாமெனு மக்கரத்தைச்
சற்பனபாடைக்குந் தாயாறெழுத்தினுட் டாங்கியன்பா
நிர்பனயோகி தபஸழியா திது நிச்சயமே. 82

நிச்சிநிலாக் கொழுந் தாறெழுத்தங்கியை நின்மலமா
யுச்சியுமூலமு நோக்கிரண்டாலமைத் தோரெழுத்தா
லச்சினைநாட்டிச்சிவாக்கினி மூட்டிநெஞ் சண்டபிண்ட
வச்சிரயோகி யவனே வயிர மகாசித்தனே. 83

சித்தனுஞ்சீவனுந் தேகமும் வாசியுஞ் சேவைசெய்யும்
பத்தனும் பாசமு மாறெழுத்தேத்திப் பதனமதாய்க்
கத்தனுங்கப்பலுங் காற்றுங் கடலுங் கயிறுங்கள்ள
வெத்தனும் பாதையும் பார்த்தோ டுவர்கரை யேறுவரே. 84

ஏறுவதுகண் செவிமூக்கு நாக்குநெஞ் சம்மிரண்டு
கூறுசெய் தந்தரங்கத் தேநமது குருவெனவே
தேறுவதாதியு மந்தமுந் தாங்கிச் சிவநடுவா
யாறுதலம்வரை யாரையும் பார்ப்பதிவ் வாறெழுத்தே. 85

ஆறெழுத் தோரெழுத்தாற் பெறவாசியை யச்சமின்றி
யாறெழுத் தோரெழுத்தாற் கடிவாளமிட்ட டந்தரங்கத்
தாறெழுத் தோரெழுத்தாற் கல்லணையைவைத் தங்கவடி
யாறெழுத் தீரெழுத் தோரெழுத்தேத்திட வானந்தமே. 86

அந்தத்திற் பின்கலை யாதியிலே யிடையாக்கிவர
விந்தத்திற் பாய்ந்த சுழிமுனைபோய்ப் பெருவெள்ளத்துள்
ளாய்ப் பந்தத் தணற்கதிர் பான்மதிநாதப் பரப்புமுப்பா
ழிந்தக்கண் காட்சிக்கப்பா லென்னையாண்ட விறையிருப்பே. 87

இறையிருக்கு மிடமெய்தினுங் கந்தனிடம் புகுந்தான்
மறையிருக்குங் கலைக்கொப்பறு மட்டு மருவலன்றிச்
சிறையிருக்கும்படி யித்தலம் கொஞ்சம் சினுக்கைவிட்டோர்
துறையிருக்கத் துரைசென்றாடக் கன்னி துடக்கறுமோ. 88

தொடக்கறு மின்பமுந் துன்பமுங்காட்டிச் சுமந்தலையும்
விடக்கறு மெய்பொய் விருப்புவெறுப்பெனும் வெட்டவெளி
நடக்கிறபாதை நடக்கறியாம னடக்கு மிந்தச்
சடக்கறுப்பார் மனமற்ற தெல்லாங்கெடு சாத்திரமே. 89

சாத்திரம்வேதம் சமயம்வண்ணாத்தி தண்ணீரில்விட்ட
மூத்திரம்போம்படி போமனனே யந்த மூத்திரமோர்
பாத்திரங்கொள்ளப் பலனுண் டதிலொரு பாழுமில்லை
கோத்திரமுங் குலமுங் குடிபோய்நின்னைக் கூடினர்க்கே. 90

கூடினதாரு கைக்கொண்டவனாரு குருக்க ளெவன்
பாடினமந்திர மாறுமின்னான்கும் பொய்ப்பாரிருணீ
வீடினபோதுமெஞ் ஞானவதீத விலாச வெளி
நாடினதுமங்கு நின்றதும் நீவள்ளி நாயகமே. 91

நாயகநீயென நானேது நானென்ன நம்பலுன்னைத்
தாயகமென்னுந் தரமே திரிசொலுந் தானிறந்தும்
போயகமும் புறமும் போன்றதாம் பரிபூரணத்தே
யாயகிலாதிட மொன்றாகக் காட்சி யறப்பெற்றதே. 92

பெற்றாளும்பொய் பிறப்பித்தானும்பொய் பெண்டீர் பிள்ளையும்பொய்
யுற்றாரும்பொய் யுலகத்தாரும்பொய் நம்முடம்புயிர்பொய்
கற்றார் பிதற்றலும்பொய் சமயாதி கடவுளர்பொய்
முற்றாமுலைவள்ளி பங்கனெங்கோன் மெய்யன் முன்னிற்கவே. 93

முன்னிற்ப தாரவன் முன்னிற்பதாரு முருகனவ
னென்னிற்கும் வெம்பகலோ விருளோ தெய்வம் வேறுளதோ
தன்னிற்குந் தன்னிழல் தன்னிடமானவத் தன்மையைப்போ
றுன்னிற்கு முன்னிழ னானுன்னிடத்தி லொடுக்கங்களே. 94

ஒடுக்கமுந் தோற்றமு முன்னையல்லாதில்லை யுன்னையுன்னாற்
படுக்கவி ரட்சிக்கவும் பாரிருவினைப் பந்தமறு
மிடுக்கமு மின்பமு மில்லாதிடத்தி லிருவருமற்
றடுக்கவு முன்றனைச் சென்றாடுதீர்த்தம் வந்தாடினதே. 95

ஆடின பம்பரமோ கயிறோ வெறிந்தானிடமே
சாடின தாபரமோ வகைபோனதென் றன்னுயிருங்
கூடின தம்மையு மப்பனு முன்றன் படுகுழிவீழ்ந்
தோடின தெவ்விடமவ்விடநீ யென்றுணருவதே. 96

உணராதபோத முறையாதுடற் பொருளாவி யொன்றைப்
புணராதபோகப் பிறையற்ற ஜோதிப் புலன்குழைய
மணராதவாசக மகிழாத வானந்த வள்ளிபங்கன்
கணமாகி லென்னைப் பிரியாச்சிவ னின்றன்கண்வடிவே. 97

வடிவும்பொரு ளருண்முக்குணம் வாக்குமனமுமடி
முடிவுமில்லாத முடிவினைச்சூட்டி முருகனென்றே
படிகந்தனிற் கண்டகாட்சிப் பிரபஞ்சப்பார்வையற்றால்
விடியும்பொழுதி லிரண்டுமொன்றே தெய்வம் வேறில்லையே. 98

இல்லையுண்டென்ப திரண்டுஞ் சொல்லாத விடமதுன்னைக்
கல்லையுஞ்செம்பையு மண்ணையுங்கூட்டிக் கனிவுருத
லொல்லையிற் போன வுயிருடன்கூடி யுதவிசெய்யா
தல்லையிற் சுற்றத்தவராக வன்புற் றரற்றுவதே. 99

அரத்தலு மக்களிப்பு மின்னதென்னவோ ராகமத்தாற்
பரத்தலும் பேசப்படாமையு மெங்கும் பராபரமாய்
திரத்தலு மொன்றுநிரவாதமையு நினைப்பு மறப்
பிரத்தலு மெய்தலு மில்லாததோற்ற நீயெவ்வண்ணமே. 100

எவ்வண்ண மெவ்வுரு வெவ்வுயிர் எவ்வுளமென்றறியாச்
செவ்வண்ண வூமன்க னாவுரையற்ற நின்சேவடியாய்ச்
சவ்வண்ண மென்றரன் சங்கரிகோரத்தைத்தான்கவர்ந்த
தவ்வண்ண மாதிமறைபேச வைய மறிந்ததுவே. 101

வையஞ்சல மஙகிகால்வான் பலவுயிர் வான்முடியோ
டெய்யும்பர முதற்சார்வதெல்லா மெம்பிரான் முருகா
தெய்யென நின்றுநின் றாட்சிலம்போசைத் திருவிளையாட்
டையநின் னங்கம் தென்னங்கமாய் நின்றவானந்தமே. 102

முற்றும்

உ

அகத்தியர்
அந்தரங்க தீட்சாவிதி

சோதியெனும் மனோன்மணியை தியானம் செய்து
சுகமான அந்தரங்க தீக்ஷை பாட
ஆதியெனுங் கணபதியும் வல்லபையுங் காப்பு
அரசான பிரம்மனொடு சரஸ்வதியும் காப்பு
நீதியெனும் மாலுடனே லட்சிமியுங் காப்பு
நின்றிலங்கும் ருத்திரனும் ருத்திரியும் காப்பு
ஓதியதோர் மயேஸ்வரனும் மயேஸ்வரியும் காப்பு
உறுதியுள்ள சதாசிவனும் மனோன்மணியும் காப்பு 1

மணியான ரவி மதியும் சுழினை காப்பு
மகத்தான வேதியர்தம் பாதம் காப்பு
கனியான நால்வேதம் அந்தம் காப்பு
கருணை வளர் சாஸ்திர மோர் ஆறுங்காப்பு
அணியான ஆதார சொரூபங் காப்பு
அருளான அமுர்தரச போதங்காப்பு
தனியான பராபர மாம் சோதிகாப்பு
சதாநந்த பூரணமாம் தாய் காப்பாமே. 2

தாயான சிவயோக மூலங்காப்பு
சகலகலைக் கியான மணிபீடங் காப்பு
மாயாத வாசி மலர் அனந்தங்காப்பு
மணிமந்திர நாத வொளி கீதங்காப்பு
சாயாத அடிமுடியும் நடுவும்காப்பு
சகலமாந் தேவாதி ரிஷிகள் காப்பு
தோயாத வாசியடா மவுனங்காப்பு
தொந்தமாம் அகாரமுடன் உகாரங்காப்பு. 3

உகாரமென்ற நாதமடா சத்தி காப்பு
உறுதியுள்ள அகாரமடா சிவமே காப்பு
சிகாரமென்ற சோதியடா வாலை காப்பு
சிவசிவா மகார மென்ற மௌனங் காப்பு

வகாரமென்ற பஞ்சகண தீக்ஷை காப்பு
மகத்தான சடாக்ஷரமாம் ஆதி காப்பு
நகாரமுதல் யகார வரை ஓங்காரத்தில்
நாடி நின்ற சூக்ஷமடா ஆதி காப்பு. 4

ஆதிகுரு வேதியர்தம் பாதம் போற்றி
அருள்பெருகும் கேசரியைப் பூசை பண்ணி
சோதியெனும் அந்தரங்க தீக்ஷை பாட
சுயஞ்சோதி ஆதியந்த சுழினை காப்பு
நீதியுடன் ஆதார மூலந்தன்னில்
நின்றிலங்கும் பிராணாயம் கண்டோர் காப்பு
ஓதியதோர் கலைமகளும் பூ மகளும் காப்பு
உண்மையுள்ள ஜெய மகனும் காப்பு. 5

சின்மய சொரூப தரிசனை

தானான தன்னுக்குள் மூலங்கண்டு
தவமானசிவ யோகத்தி லிருக்கும்போது
கோனான வேதியரை அடுத்து யானும்
குறியான பூரணத்திற்குறுதி கேட்டேன்
ஊனான பூரணத்திற்குறுதி கேட்க
உண்மையுள்ள அகஸ்தியனே வாவென்றேதான்
தேனான வடமொழியைக் கையிலீந்து
திருவான பூரணத்தின் திறஞ்சொன்னாரே. 6

திறஞ்சொன்ன மகிமையை நான்பெற்றுக் கொண்டு
திருவான வடமொழியை நன்றாய்ப் பார்த்துப்
பரஞ்சேர்ந்த பூரணமா மறிவிலேறிப்
பாடினேன் அந்தரங்க தீக்ஷை மைந்தா
சரமான வாசியினால் ஊதிக் கொண்டு
சந்தோஷ மாகவே நான்கு நூறும்
வரஞ்சேர்ந்த தவமதினால் பாடி நானும்
மகத்தான வேதியர் முன் வைத்தேன்தானே. 7

தானான அந்தரங்க தீக்ஷை நன்றாய்த்
தன்மையுடன் ஆதியந்தம் தயவாய்ப் பார்த்து
தேனான வடமொழியைத் தமிழாற்றானும்
திறமான கரு விபரம் நன்றாயச் சொன்னீர்
ஊனான உலகமதில் உலகோர் கண்டால்
உறுதியுள்ள கைலாயம் இடம் கொள்ளாது
மாணா கேள் அந்தரங்க தீக்ஷை நீயும்
மார்க்க முடன் அந்தி சந்தி பார் என்றாரே. 8

மேருதன்னுக்குள் பொதிகைமலை

பார்என்று சொன்ன மொழிபெற்றுக்கொண்டு
பதிவான பொதிகைதனில் வாசமாகி
நேரான அந்தரங்க தீக்ஷை பார்த்து
நிச்சயமாய் அஷ்டாங்க யோகம் பார்க்கில்
சார்என்ற பொதிகை மலைச்சார்புக்குள்ளே
சார்ந்திருந்த தபோதனர்கள் தாமே கூடி
மேருஎன்ற பொதிகைதனில் முடிமேல் வந்து
என்னுடைய பாதத்தைப் பணிந்திட்டார்கள். 9

பணிந்து மிக அனைவரும் இருகை கூப்பி
பரமகுரு தேசிகரே பரிவாய் நீரும்
கனிந்து மிக அந்தமதில் கருணையாகக்
கடாட்சித்து அந்தரங்க தீக்ஷையை நாங்கள்
அறிந்து அதன் தரிசனத்தைப் பார்ப்போமென்று
அனைவோரும் ஒருமனதாய் அருள் கண் கூர்ந்து
துணிந்து வந்தோம் உம்முடைய பாதந்தன்னில்
சுகமாக அருமைபடத் தாருமென்றாரே. 10

ஆரென்று சொன்ன தபோதனரைப் பார்த்து
ஆறுலக்ஷம் சொன்னதிலே சுருக்கி யின்னூல்
காரென்று சற்குருவாய்ச் சொன்னோம்
காசினியில் தபோதனர்கள் கருணையாக
வாரென்றும் சொன்னதொரு தீக்ஷை மார்க்கம்
வளமான சவுக்கார வழலைப் போக்கு
மேலான காப்பதிலே ஆறு லக்ஷம்
விண்டதிலே சூக்ஷமதாய் இன்னூல் கண்டேன். 11

கண்டதொரு நான்சொன்ன சகல நூலைக்
கடைந்தெடுத்து அந்தரங்க தீக்ஷை பாடி
கொண்டதொரு சூத்திரத்தைக் குரு முன்வைத்தேன்
குருவான என்குருவும் நன்றாய்ப் பார்த்து
விண்டதொரு அந்தரங்கம் ஆதி சூக்ஷம்
விளம்பரிது விளம்பரிது பதனம் பண்ணி
அண்ட கேசர மதிலே தவஞ்செய்யென்று
ஆதிகுரு வேதியரும் சொன்னார் பாரே. 12

ஆதிகேசரி வித்தை

பாரப்பா சொல் மொழிகள் தவறொண்ணாது
பக்தியோடு உத்திரவு பெற்று வந்தால்
நேரப்பா அந்தரங்க பொருளும் சொல்லி
திறமான தீட்சையுட நிலையும் காட்டி

தேறப்பா வென்று மன உறுதி சொல்லி
செய்த தொரு சாஸ்திரமும் ஈவோ மென்று
வேறப்பா மேருவின் முடிவிற் சொன்னேன்.
விளம்பியதோர் அந்தரங்க தீக்ஷை சொல்வேன். 13

சொல்லக்கேள் அந்தரங்க தீக்ஷை மைந்தா
சுகமாக வடமொழியை தமிழ்நான் செய்தேன்
அல்லக்கேள் ஆதி முதல் சொன்ன நூலில்
அரிதரிது இதன் பெருமை யாருங் காணார்
விள்ளக்கேள் அந்தரங்க தீக்ஷை நூலை
மேலான பதவிதனில் பதனம் பண்ணி
உள்ளத்தில் தன்னொளிவு போலே நீயும்
உண்மையுடன் அந்தரங்க பூசைபண்ணே. 14

மேரு தரிசனை திருச்சிற்றம்பலம்

பண்ணப்பா அந்தரங்க பூசை பண்ணி
பதிவான தீக்ஷை விதி அறிந்து கொள்ளு
என்னப்பா புலத்தியனே மறந்திடாதே
இகபர சாதன முழுதும் இதிலே சித்தி
முன்னப்பா சொன்ன சாஸ்திரங்க ளெல்லாம்
முன்பின்னாய்த் தோணாமல் சொல்லி வைத்தேன்
கண்ணப்பா கண்மணியே இந்த நூலில்
காட்டினேன் மேருக்கு தீப மாச்சே. 15

ஆச்சப்பா மேருக்குத் தீபம் போலே
அரகரா அந்தரங்க தீக்ஷை பாரு
நீச்சப்பா கடினமென்று மலைக்க வேண்டாம்
நேர்மையுள்ள முறைபாகம் கைபாகங்கள்
பாச்சப்பா வெகு தெளிவு இந்நூல்போலே
பகராது முன்சொன்ன சாஸ்திரங்கள்
காச்சப்பா இன்னூலைப் பதனம் பண்ணி
கனகமுடன் சிவயோகம் கருவாய்ப் பாரே. 16

கருவான அந்தரங்க தீக்ஷை நூலில்
கருணையுடன் விளம்புகிறேன் கருவாய்க் கேளு
திருவான கற்ப சாதனையினோடு
சொற் பெரிய யோக சாதனையின் போக்கு
உருவான வாசி சாதனையின் நேர்மை
உத்தமனே கற்பமுண்ணும் முறை பாகங்கள்
குருவான வாசி வசப் படுத்தலோடு
ஓர்மையுள்ள அண்ட சுண்ணம் யோகசித்தி தானே. 17

அண்டச்சுண்ணம்

தானான முப்புவின் இலக்கணங்கள்
சர்வசித்தி கற்பமுண்டாம் துன்பப்போக்கும்
தேனான பூரணமுறை காயசித்தி
திருவான ரசகுளிகை திடன்தான்கூறல்
ஊனான வாத முறை கற்ப லேகியம்
உண்மையுள்ள யோக ஜெயம் ஞான வெற்றி
பூணான முப்புவும் முடித்தலோடு
புலத்தியனே திராவகத்தோடு இன்னங்கேளே. 18

இன்னங்கேள் சொல்லுகிறேன் யோக நிலையும்
இன்பமுள்ள அஞ்சனமும் மறைவின் மார்க்கம்
சொன்னதொரு வெகுகோடி தொழில்களெல்லாம்
துரிதமாய் இந்நூலில் காணலாகும்
வண்ண முள்ள மனங் கொண்டு குறிகண்டாக்கால்
அருள் நந்தி பிரகாச நயனந்தன்னில்
எண்ண வொண்ணாத் திரு நடனங் காணலாகும்
ஏகாந்த சக்கரங்கள் தோணுந்தானே. 19

தானென்ற சக்கரத்தின் அக்ஷரந் தன்னை
சாற்றுகிறேன் வேதமுறை சூக்ஷங்கேளு
தானென்ற சூக்ஷமடா விந்து நாதம்
தனையறிந்து நாதமுடன் விந்து சேர்ந்து
கோனென்ற குரு அருளால் அங்குதித்தும்
கொண்டெழுந்த மடபதியின் என்ன சொல்வேன்
ஊனென்ன மடபதிக்கு உறுதியான
உண்மையுள்ள அக்கினியும் வாய்வுங் கூடி
தேனென்ற ஜீவாத்மா பரமாத்மாவாய்
சென்றிருந்து ஆதாரமானார் பாரே. 20

சிதாகாசம்

பாரப்பா ஆதாரம் ஆறாதாரம்
பதிவான ஆதாரம் பரத்துக்குள்ளே
நேரப்பா அக்கினி தான் ஜீவாத்மாவாய்
நிறைந்து நின்றது அதுதான் பரமாத்மாவாய்
பேரப்பா பெருகி நின்ற சடத்துக்குள்ளே
பிலமாக நின்று திரு விளையாட்டாடி
காரப்பா ஆகாயம் சாட்சியாக
கருணையுடன் நின்ற தடா கருவாய்ப் பாரே. 21

ஆதியந்தமறிய

பாரடா நான் சொன்ன ஆறு லக்ஷங் காப்பை
பரிசோதித்து உலகோர்க்காய் மனதிரங்கி
காரடா சுருக்கியே இந்த நூலில்
கருணையுடன் ஆதி அந்தம் உகந்து சொன்னேன்
ஆரடா ஆதியுள்ளே ஆதியந்தம்
அரகரா ஆதியந்தம் ஆண் பெண்ணாச்சு
நேரடா ஆண்பெண்ணாய் பிறந்தாலென்ன
நேர்மையுள்ள அறிவிப்போ சாட்சிதானே. 22

ஆதி பீடம் பிரம்மநிலை

தானேதான் தன் மனமே சாட்சியாக
தன்மையுடன் பூரணமாய் நின்றாயானால்
கோனேதான் தானவனாய் அருளே தங்கும்
கருவான நவக்கிரக சூக்ஷத்தாலே
பூணே நீ பொற் கமல உச்சி மீதில்
பூரணமாய் நின்றிலங்கும் அருளே பெற்றால்
நானேதான் நீ யெனவே நன்மையாக
நாட்ட முடன் வாசியினால் நயந்து பாரே. 23

பாரப்பா நயனவொளி சூக்ஷத்தாலே
பரிவான மூலமதில் ஆறாதாரம்
காரப்பா ஆதார மார்க்க பீடம்
கண்ணிறைந்த முச்சுடராங் கமலபீடம்
நேரப்பா நின்ற தொரு விந்து பீடம்
நின்றிலங்கும் கற்பூர தீப பீடம்
ஆரப்பா அறிவார்கள் ஆதி பீடம்
அந்தரங்க பீடத்தை பூசை பண்ணே. 24

பூசைநெறி யறியாமல் ஆண்பெண் இரண்டும்
பொல்லாத மாய்கை வலை தன்னில் சென்று
ஆசைகொண்டு மோகமதில் அறிவு கெட்டு
அங்கமென்ற சங்கதியை யறியாமற்றான்
பாசமென்ற பல ருசியால் மனதை முந்தி
பரகதியை யறியாமல் மாண்டார் கோடி
ஓசையென்ற சத்தம் உதித் தடங்கும் வீட்டை
உத்தமனே மனக் கண்ணால் நித்தம் பாரே. 25

நித்தியம் நீ புத்தியுடன் பார்த்து மைந்தா
நேர்மையுடன் அந்தி சந்தி பூசை பண்ணே
சுத்த முடன் சொல்லுகிறேன் புலத்தியா கேள்
சோதியென்ற ஆதார மூலம் பார்த்து

புத்தியுடன் அடிமூலம் தன்னில் நீயும்
பதிவாக இன்பமதாய் உருவே செய்தால்
சித்தியுள்ள கணபதி வல்லபையு மைந்தா
சிந்தைதனில் ஒளி விளக்காய் தெரிசிப்பாயே. 26

தெரிசிப்பாய் தினந்தோறும் தியானம் பண்ணி
தீர்க்கமுடன் மானசமாய் பூசை செய்தால்
நெறி சித்தியாகியந்த நெறியிற் குள்ளே
நின்றிலங்கும் கணபதி வல்லபையை மைந்தா
பரிசுத்தமாக நீ தெரிசித்தாக்கால்
பக்தியுடன் சகலசித்தும் கைக்குள்ளாகும்
வருவித்த சித்திகளும் கைக்குள்ளாகும்
மகத்தான அமைப்படக்கம் சொல்லக்கேளு. 27

கேளப்பா அமைப் படக்கம் சொல்லக் கேளு
கிருபையுள்ள கணபதி வல்லபை மைந்தா
ஆளப்பா பிரம்மாவும் சரஸ்வதியுமானார்
அதின் பிறகு திருமாலும் லட்சிமியுமானார்
மேலப்பா ருத்திரனும் ருத்திரியுமானார்
மேன்மையுடன் மயேஸ்வரனும் மயேஸ்வரியும்
காரப்பா சதாசிவனும் மனோன்மணியு மானார்
காரண மெல்லாம் முடிந்து சத்தி சிவமாச்சே. 28

ஆச்சப்பா ஆதி பராபரந்தான் மைந்தா
அனுக்கிரகத்தால் உதித்த கணபதி வல்லபையு மைந்தா
மூச்சப்பா நிறைந்த சத்தி சிவமுமாகி
மூவுலகும் தானாகி முதலுமாகி
பேச்சப்பா நிறைந்த தொரு பஞ்சபூதம்
பேராகிப் பெருமையினால் பஞ்ச பூதம்
பாச்சப்பா பஞ்சகர்த் தாள் அஞ்சு பேரும்
பக்தி கொண்டு ஆதியிலே ஓமென்றாரே. 29

ஓமென்ற பிரணவமே ஆதி வஸ்து
உலக மெல்லாந் தானிறைந்து யோமசத்தி
தானென்ற சத்தியடா எவரும் தானாய்
சதா கோடி மந்திரத்துக்கு உயிராய் நின்று
ஆமென்று ஆடினதும் ஓங்காரம் தான்
அடி முடியாய் நின்றதும் ஓங்காரம் தான்
நாமென்ற ஓங்காரம் தன்னிலே தான்
நாடி நின்ற எழுவகையும் பிறந்தவாறே. 30

வாறான எழுவகையாம் தோற்ற மெல்லாம்
மகத்தான ஓங்கார வடிவ மாச்சு
பேரான வேத மொடு சாத்திரங்கள்
பெருகின்ற மந்திரங்கள் அஷ்ட கன்மம்
நேரான ஜெப தபங்கள் யோக நிஷ்டை
நின்றிலங்கும் கவுன முதல் வசிய மார்க்கம்
கூறான வாதமொடு வயித்திய மெல்லாம்
குருவான ஓங்காரக் குறிதான் கேளே. 31

காணவே ஓங்காரம் பிரதானந்தான்
கருவான ஆதார மூல பீடம்
தோணவே மூல மென்ற ஆதாரத்தில்
துலங்கி நின்ற ஆவியடா வாசியாச்சு
பேணவே ஆவியென்ற வாசி யேறி
பெருகி நின்ற ஆதாரங் கடந்தப்பாலே
பூணவே ரவி மதியும் சுடரில் சென்று
புத்தியுடன் பூரணமாய் தீபம் பாரே. 32

ராஜயோகத்துண்மை அகார தீக்ஷை

பாரப்பா தீப மென்றால் அறிவின் கண்ணு
பக்தி கொண்டு அறிவதனால் புருவ மேவி
சாரப்பா கண்டமதில் அங்கென் றூணி
சதாபோத பூரணமாய் நின்று பார்த்தால்
நேரப்பா நின்றிலங்கும் சோதி போலே
நித்தியமும் சுத்தமுடன் நினைவாய்ப் பார்த்தால்
ஆரப்பா வென்றதொரு ஆறாதாரம்
ஆதி சிவஜோதி மய மாகுந்தானே. 33

சூக்ஷம அண்டம்

தானான ஆதார ஜோதி போலே
சங்கையுடன் தோணுமடா அங்கே பாரு
வானான அண்டமதில் நடுவே பார்த்தால்
வகையாகத் தோணுமடா பஞ்சரூபம்
தேனான வடிவு பஞ்ச ரூபமாகி
சிவ ரூபமான செயலாருங் காணார்
கோனான சிவரூபம் தான் தானென்று
குறித்த மனம் நிறுத்தி நித்தம் பூசை பண்ணே. 34

பண்ணப்பா பூசைவிதி தன்னைக் காணார்
பார்மகனே அமைந்த விதி சித்தமாச்சு
நண்ணப்பா சித்தமுள்ள மதிதான் மைந்தா
நடுவான பீடமடா அண்டத் துச்சி

கண்ணப்பா தானிறைந்த உச்சி மீதில்
        கமலமென்ற ஆயிரத்தெட்டு இதழினுள்ளே
உண்ணப்பா அமுர்தமது கண்விட்டோடும்
        மூர்க்கமுடன் நீ வாம பூசை பண்ணே. 35

பண்ணடா சிவபூசை சத்தி பூசை
        பத்தியுள்ள சித்தமதாய் வாம பூசை
நண்ணடா பூரணமாம் பூசையோடு
        நாமறிந்த சோதியடா யோக பூசை
கண்ணடா தவறாமல் பூசை செய்ய
        கருமானம் சொல்லுகிறேன் கருவாய்க் கேளு
விண்ணடா நிறைந்த மலர் கண்ணே ரூபம்
        வேதாந்த சூக்ஷமதை விரும்பிக் கேளே. 36

விரும்பி மனங்கொண்டு சிவபூசை கேளு
        வேதாந்த சின்மயத்தை மெய்யிற் கொண்டால்
வரும் பிறவிதனை யகற்றும் சிவமே தென்றால்
        வகையுடன் சொல்லுகிறேன் அகாரமாச்சு
அருந்தவமாய் நின்றதொரு அகாரபீடம்
        ஆரறியப் போறார்கள் ஆதி விந்து
திருந்தியதோர் விந்து என்றால் கெங்கை கெங்கை
        திருவான கெங்கையடா அமுரிதானே. 37

தானான அமுரியடா அகாரமாச்சு
        சங்கையுடன் அகாரமதை தானே தானாய்
வாரான கேசரியை தியானம் பண்ணி
        வரிசையுடன் இராப்பகலும் தானே மாற
ஊனான தேகமதில் நின்ற பீடை
        உத்தமனே அப்போதே விலகிப் போச்சு
வீணான பீடையது விலகிப் போனால்
        வேதாந்த தேகமது சித்தியாச்சே. 38

ஆச்சப்பா தேகமது சித்தியானால்
        ஆதி சதா சிவசோதி அங்கே காணும்
மூச்சப்பா தன்னிலை விட்டசை யாதையா
        முத்தியுள்ள சித்தியது கெட்டியாச்சு
பேச்சப்பா தானடங்கும் மவுன மாச்சு
        பேரண்டம் சுத்தி வர கவுனமாச்சு
நீச்சப்பா தானறிந்து கெவுனத்தேகி
        நிஜமான அகாரமதை பூசை பண்ணே. 39

பண்ணப்பா சிவமான அகார தீகைஷ
பக்தி கொண்டு பூரணமாய் செய்த பின்பு
நண்ணப்பா உகாரமென்ற சத்தி தீகைஷ
நன்மையுடன் சொல்லுகிறேன் உண்மை கேளு
விண்ணப்பா கண்ணான மூலத் தீயில்
விளங்கி நின்ற உகார மென்றும் சத்தியென்றும்
உண்ணப்பா நிறைந்த சிவசத்தியோடு
முற்றியுள்ள அகாரமென்ற விந்து சேரே. 40

சேரப்பா அகாரமுடன் உகாரங் கூட்டி
சாமமுடன் உருவேத்தி நின்றாயானால்
தேரப்பா நின்ற திரு வாசியாலே
நிலையான புருவமதில் தீபங் காணும்
காரப்பா தீபமதை கமலக் கண்ணால்
கண்ணறிந்து வாசி யினால் உன்னிப்பாரு
சாரப்பா வாசியானால் உன்னிப் பார்க்க
சதா போதமான சிவயோகி யாமே. 41

வாலை சூட்சம்

ஆமப்பா சிவயோகம் செய்வதற்கு
அப்பனே அகாரமுடன் உகாரஞ் சொன்னேன்
தாமப்பா மகார மென்ற வாலை தன்னை
தாரணியில் ஆரறிவார் சங்கை மார்க்கம்
காமப்பால் கொண்ட சிவகெங்கை யான
கன்னி மனோன் மணியின் நாதமென்றும்
நாமப்பா சொல்லுகிறோம் செந்தே னென்றும்
நாதாந்த நாதமென்னும காரமாமே. 42

ஆமென்ற மகாரமுடன் மைந்தா கேளு
அருள் பெருக அகாரமுடன் உகாரங் கூட்டி
ஓமென்ற பிரணவத்தின் மகிமையாலே
உறுதியுடன் மூன்றெழுத்துஞ் செபித்தா யாகில்
தாமென்ற தன்னிலை பிரம்ம மாகி
தானாகி தானவனாய் தான் தானாவாய்
ஓமென்ற வேதாந்த முத்தியாலே
நடுவெழுத்தும் மூன்றெழுத்துஞ் சித்திதானே. 43

சிகார மென்ற பிரணவ பூரணமறிய

காணவே மூன்றெழுத்தும் கருணையாக
கட்டாக ஜெயித்த பின்பு இன்னுங் கேளு
பேணவே சிகார மென்றால் ஆர்தான் காண்பார்
பேரண்ட பூரணமே ஆகும் ஆகும்

தோணவே பூரணத்தைக் கண்டு கொள்ளு
சுகமான சிவசத்தி வாலையோடே
பூணவேதான் நிறுத்தி ஜெபித்தால் மைந்தா
பூரணமாய் காயசித்தி புனிதமாமே. 44

புனிதமுடன் தானிருந்து பூசை பண்ணி
பொற்கமல வுச்சியின் மேல் மனதை வைத்து
இனிதமுடன் அகார மென்றால் வாசியாச்சு
யோக மென்ற வாசியிலே இன்பம் வைத்து
கருவி கரணமான சிவசத்தி வாலை
கண்ணான பூரணமும் நாலுங் கூட்டி
மணிகரண மானதொரு ஐந்தும் மைந்தா
மகத்தான பஞ்சகண தீட்சையாச்சே. 45

ஆச்சப்பா பஞ்ச கண தீட்சை யாக
அப்பனே வகை விபரம் நன்றாய்க் கேளு
நீச்சப்பா சிவ தீட்சை உதயமாகும்
நிஜமாக மாலையிலே சத்தி தீட்சை
பேச்சப்பா பேசாத வாலை தீட்சை
பேணி மனங் கண்டவுடன் தெண்டம்பண்ணி
மூச்சப்பா நிறைந்த தொரு வாம ரூபி
முற்றிக்கொண்ட பஞ்ச கணம் தான் தானாமே. 46

தானான பஞ்சகணம் தானாய் நின்று
தன்மையுடன் நின்று விளையாடலாச்சு
ஊனாகி நின்று விளையாடுஞ் சித்தி
உலகமதில் அறியாமல் உருண்டு போனார்
வானான வடிவு பஞ்ச ரூபந்தன்னை
மார்க்கமுடன் கண்டு மன மகிழ்ச்சியானால்
கோனான குருபரம் வேறில்லை மைந்தா
குவலயத்தில் நீயுமொரு சித்தனாமே. 47

சித்தர் மயமாவதற்கு மைந்தா கேளு
தீர்க்கமுடன் அகாரமதை ஆண்டு சேவி
முத்திபெற ஜெபித்த பின்பு உகாரந் தன்னை
மூர்க்க முடன் ஆண்டொன்று ஜெபித்துத் தீரு
பத்தியுடன் ஜெபித்த பின்பு மகாரந் தன்னை
பாலகனே ஆண்டொன்று பதிவாய்ச் சேவி
புத்தியுடன் இது மூன்றும் செபித்துத் தீர்த்தால்
பூரணமும் காரணமும் பொருந்தும் பாரே. 48

பாரப்பா பூரணமே அண்டமாச்சு
பதிவான காரணமே பிண்டமாச்சு
நேரப்பா அண்டமொடு பிண்டம் இரண்டும்
நேர் அறிந்து கொண்டவனே சித்தன் சித்தன்
சாரப்பா அந்தரங்க தீக்ஷை நூலை
தண்மையுடன் பூரணமாய்ச் சார்ந்து கொண்டால்
மேரப்பா அண்டபிண்டம் தானாய் நின்று
மேதினியில் பூரணமாய் வாசி யாமே. 49

ஆமப்பா முன் சொன்ன பஞ்சகண தீக்ஷை
அப்பனே பிரித்து நன்றாய்ச் சொல்லாத தாலே
நாமப்பா இணுக்கிணுக்காய் பிரித்துச் சொல்வேன்
காப்புமுதல் கடை வரைக்கும் இன்னூல் பாரு
தாமப்பா ஒவ்வொரு இடத்தில் தானும்
தனைப்பாரும் ரகசியங்கள் சொல்லி வைத்தேன்
நாமப்பா சொன்னதென்ன வென்று கேட்டால்
நாட்டி லுள்ளோர் மாண்டல்லோ நரகஞ் சேர்ந்தார். 50

சேர்ந்ததால் பாவமென்று எண்ணி யானும்
ஜெகத்தோர்க்காய் மன திறங்கி நாத வாழ்வை
கூறினதில் அந்தரங்க தீக்ஷைக் குள்ளே
கூறிவைத்தேன் சகல நூல் சேதியெல்லாம்
பார்ப்பவர்க்கு வெகு தெளிவாய்த் தீக்ஷை மார்க்கம்
பக்தியுடன் பார்ப்பவரே சித்தராவார்
சீரினிமேல் கற்ப சாதனையின் போக்கை
சிறப்புடன் சொல்லுகிறேன் புலத்தியா கேள். 51

புலத்தியனே கேட்பாய் நீ கற்பப் போக்கை
பேர்பிரித்து நாவமுவாதுரைப்பேன்கேளு
சலமதியும் பேரின்பத் தேன் என்றும்
சாற்றினார் மதுர வஸ்து பான மென்றும்
உலகமதில் அம்பிகையின் அமுர்த மென்றும்
உத்தமனே வாருதியாம் இன்ப மென்றும்
கலா மூலக்கரு வென்றும் நாதமென்றம்
காட்டினார் சுக்கிலமாம் என்றுந் தானே. 52

என்னென்றும் விந்து சுரோணிதந்தா னென்றும்
இன்பம் வளர் கோளு பீளு வென்றும்
முன்னமே சூதமென்றும் கெந்தி யென்றும்
முறை முறையாய் வெகு பேர்கள் மொழிந்திட்டார்கள்

வின்னங்கள் இல்லை முன்னே சொன்ன கெங்கை
விதத்தாலே ரச வாதம் வருகும் பாரு
சொன்ன மொழி எள்ளளவுந் தப்போ இல்லை
சூக்ஷ மடா சரக்கெல்லாம் கட்டும் தானே. 53

கட்டுகின்ற சேதி யின்னாள் சொல்லி வைப்பேன்
கற்பமது நாற்பதுக்குள் உண்டால் நன்று
நட்பதனால் நரைத்து வெகு நாட்கள் சென்றால்
நாள் செல்லும் அதினாலே ஒன்றுமில்லை
கொட்டமுடன் அமுரி கற்பம் சொற்ப மென்றும்
கொண்டழிந்தோர் கோடான கோடி பேர்கள்
விட்ட குறை வந்தாலும் ஊத்தை யோனியில்
விசேஷமாய் அடிபட்டோர்க் கென்ன வாய்க்கும். 54

என்னமாய் வாய்க்கு மப்பா சொரூப சித்தி
எக்காலம் மாதர்மையல் கொண்டு வாழ்ந்தால்
நன்னவே குருவினுட உபதேசம் பெற்று
நடுவான யேகாக்ஷரத்தை நயந்து போற்றி
தன்னுக்குள் விந்து நிலை தன்னிலேதான்
சார்ந்து மனதொன்றாகி தனதாய் மைந்தா
முன்னிலையைத் தான் பிடித்து நடுவணையில் நின்று
முற்றியுள்ள அகாரமதை தினமும் போற்றே. 55

போற்ற வென்றால் அகாரமது என்ன சொல்வேன்
புறமாங் கண்மணியே புகலக் கேளு
பார்த்திபனே அகாரமடா விந்து விந்து
பதிவான விந்துவடா சார மாகும்
சாற்றியதோர் சாரமது அப்பு அப்பு
சங்கையில்லை அப்பதுவுந் தண்ணீர் தண்ணீர்
போற்றியே தேகந் தண்ணீர் வெண் சாரையாகும்
தெவிட்டாத சாரையடா அமுரிதானே. 56

அமுரிக்கு பேர் மாத்திரம் சொல்லக் கேளு
அப்பனே சந்திர புஷ்கரணி என்றும்
கரகமதில் ஊசிநீர் ரோம நீ ரென்றும்
கண்மணியே சொல்வார்கள் அநந்த நாமம்
சமுதாவில் முன்னமே சொல்லி வைத்தேன்
சாற்றுகிறேன் அமுரி யேகாக்ஷரத்தை
அமுர்தமாம் ஓராண்டு சரன்தான் காண
அப்பனே வைராக்கிய மார்க்கந் தேறே. 57

தேறவே மாறிமாறி அமுரி கொள்ளு
தினந்தோறும் அந்தி சந்தி விடாமற்றானும்
மாறினால் மிதத்தோடும் சாரை தன்னை
மாறப்பா அடிக்கடிக்கு மாறு மாறு
மீறவே பசி வந்தால் ஒரு போதன்னம்
உட்கொள்ளு சுகமிலா வண்ணமாக
மாறுவது அமுரி சுத்த ஜலமா மப்பா
பார் புகழ அமுர்த மென்ற பேருமாச்சே. 58

ஆச்சப்பா காய கற்பம் உபவாசந்தான்
அப்பனே தேக காந்தி பிரகாசிக்க
நீச்சப்பா தினந்தோறும் மறவாமற்றான்
நினைவாக சரமாறி யுண்டாலப்பா
பேச்சப்பா அடங்கி தேகம் சிவந்து காணும்
பேய் மனமாய் புத்தி சித்தி மாண்மையெல்லாம்
மூச்சுப்போல் அடங்கி வெந்து நீராய்ப் போகும்
உடன் விந்தும் பாழாகும் மாய்கை போகும். 59

போகுமே வாலை ரசம் உண்டால் தானே
பூலோக மெல்லாந்தான் சோதித்தாலும்
போகத்தோர் கிடைப்ப தல்லால் பொருள் அறிந்தோர்
புலத்தியனே கோடிக்கு ஒன்றாய்த் தானும்
ஆகமுடன் கிடைப்பா ரப்பா அதுவும் கஷ்டம்
அப்பனே யோராண்டு வரைக்கும் தானும்
பாகமுடன் இப்பொருளை பத்திரமாக
பார்த்துமே யுட்கொள்ள வேண்டு மப்பா. 60

அப்பாகேள் இந்த கற்பம் அற்பமல்ல
ஆரறிவார் அவனிதனில் ஆருங் காணார்
ஒப்பாக வானமுதம் முப்பதுக்குள்
உட்கொள்ள வேண்டு மப்பா நாற்பதின்பே
தப்பிதங்கள் வாராமல் கன லேறாமல்
தானருந்த வேண்டு மப்பா ஐம்பதுக்குள்
கொப்பெனவே கொண்டாக் கால் போஜனமே
கொண்டிடுவாய் உச்சி யொரு வேளைதானே. 61

ஓராண்டு அமுரி யுண்ண இடை விடாமல்
உத்தமனே கனல் வேகம் அதிகமாகும்
மீராத வன்னியினால் நெருப் புண்டாகும்
மைந்தனே தேகமது வெந்து போகும்

வீரியே உடலெல்லாம் வெடித்துப் போகும்
வேகமது கனல் வேகம் மிகவே காணும்
மீறாது மனம் விம்மி யதிகமாகும்
வேதனைகள் நிரம்ப வரும் வருகுந் தானே. 62

கற்பம் உண்ணும்போது பத்தியம்

வந்தாலும் எந்தெந்த வினைக ளெல்லாம்
வருகு மப்பா ஓராண்டுக் குள்ளே தானே
நொந்தாலும் பராபரத்தை நொந்து கொள்ளு
நொடிக்குள்ளே ஆண்டதிலே வாந்தி யாகும்
மைந்தனே முதலாண்டில் பத்தியந்தான்
கேளப்பா பச்சரிசி பசும் பயறு மாவில்
சிந்தையுடன் வெண் பசுவின் பாலும் விட்டு
சீராக சமைத்து அன்னம் ஒரு பொழுது தானே. 63

ஒருபொழுது அன்னமது சமைத்துத் தானும்
உறுதியுடன் பகல் தனிலே உச்சி வேளை
ஒருபொழுது சாப்பிடவே வேண்டு மப்பா
உத்தமனே அதுவும் அரை வயிறு சாதம்
ஒருபொழுது சாப்பிட்டு முதல் ஆண்டில் தான்
உபாயமதாய் தேறியே வருகும்போது
ஒருபொழுது ராத்திரியில் ஆவின் பால் கொள்
உக்கிரமதை தணிக்கு மப்பா இந்த வண்ணம். 64

இரண்டாம் ஆண்டு அமுரி கற்பம்

இவ்வண்ணம் மறவாமல் ஓராண்டாகில்
இன்பமுடன் இரண்டாண்டில் சொல்லக் கேளு
அவ்விதமாய் அதிகாலை அமுரி யுண்டு
மாலைதனில் சொல்லுகிறேன் மகிழ்ந்து கேளு
அவ்விதமாய் ரவி இருபத்தி ஐந்து நாழி
ஆனபின்பு சொல்லுகிறேன் அன்பாய்க் கேளு
இவ்விதமாய் காலைதனில் வந்த உகாரம்
எடுத்து பத்திரமாய் வைக்க வேண்டும். 65

உகார கற்பம் புளி

வைத்ததொரு உகாரத்தில் அமுரி விட்டு
வகையுடனே யுட்கொள்ள வேண்டு மப்பா
சித்தமது ஒருமித்து காரசாரம்
சிறப்புடனே யுண்டாலே தீக்ஷை யென்றும்

பக்தியுடன் காரமதை யென்ன சொல்வேன்
பார் மகனே மருவினுட வாசம் வீசும்
சித்தியதாம் தேகமது அமுரி காரம்
சிவனுண்ட நஞ்சுக்கு மேலாம் என்னே. 66

என்னஇனி யோக சாதனையைச் சொல்வேன்
என் மகனே புலத்தியனே கவனமாய்க் கேள்
சொன்னதொரு சடாதார பீடம்
அதில் நாத பிரகாசம் பிராணன் தோணும்
அன்னை தலம் கரு ஊராம் நாடு விட்டு
அம் மலையாம் வீட்டினிலே சோனை பாயும்
சின்னமணி சித்தர் கூட்டம் மூலம் மூலம்
சிவ சிங்காதன மேரு சிவமும் சக்தி. 67

சிவம்சக்தி மேரு சிங்காதனத்தின் மேலே
சிறப்புடன் வீற்றிருந்த தன்னுக்குள்ளே
தவமதுவால் சாரமது சேர்ந்த தாலே
தாரணிகள் தான்புகழும் சாரத்தாலே
தவவீடாய் வந்ததொரு ஈரத்தாலே
அளவில்லா சரக் கெல்லாம் நீறும் நீறும்
உபயோக உந்தியின் கீழ் கனிதானொன்று
உப்பதுவாம் உவர்வதுவாம் புளியு மதுவே. 68

கோரக்கர் மூலி கெஞ்சா அல்ல என்பதற்கு சாக்ஷி

புளியுமது நவ நீத மிதுதான் கேளு
புகழான கற்பம் உண்டோர்க் கெய்தும் வாதம்
அறியாது கோரக்கர் மூலிதானும்
அப்பனே கெஞ்சா வென்று உண்டு செத்தார்
புளியதுவோ கோரக்கர் மூலியாகும்
புகழாக உண்டோர்கள் சித்தரானார்
வெளியாக லிங்கத்திற் கீழே தானும்
எப்பொழுதும் சவுக்காரம் பொங்கும் பாரே. 69

பொங்கு மந்த மூலிக்கு பாறை யென்றும்
புலத்தியனே பேரல்லால் வேறொன் றுண்டோ
அங்கமது எண் சாணின் மலத்தின் கூடு
அகாரமது தீக்ஷையினால் சாட்சி வீடாம்
தங்கமது மாது பெண்ணாள் காரத்தாலே
தங்கமது உடலெல்லாம் ஆகுமப்பா
அங்க தங்க மாதினுட காரத்தாட்டு
அப்பனே சொல்லுதற்கு என் நாவில்லை. 70

இரண்டாண்டு கற்பம் சேவிக்க

இல்லையப்பா சொல்லுதற்கு வாய்தா னேது
ஈஸ்வரியின் பாதமே கெதியாய் நம்பி
தொல்லை இந்தபடி ஞானயோகந்தன்னில்
கும்பித்தால் சாரமது ஓர் ஆண்டு உண்டு
அல்லப்பா தேகத்தின் கசடு தானும்
அப்பனே ஈராண்டில் போகுஞ் சொன்னேன்
கல்லுடம்பாம் உறக்க மற்று சிவ யோகத்தால்
கனவாச மூலத்தில் கருதி நிற்கும். 71

நிற்குமந்த காலத்தில் இவன் பேர் கேளு
நிரந்தரம் சிவராஜ யோக வானாம்
நற்புறமாய் காயத்தின் கசடாம் நீர்கள்
எல்லாந்தான் ஒழிந்து போம் கற்பப் போக்கால்
இக்கருவால் நமன் ஒழிவான் வாசியாலே
வெகுகாலம் யோகமது செய்து தானும்
நிர்க்குணத்தில் தானேறி பெறவே முத்தி
நீயறிவாய் சத்தி பொக்கிஷத்தை தானும். 72

பொக்கிஷத்தை திறந்து புதைப் பொருளைத் தானும்
பிரபலமாய் வெளியிட்டேன் அது தான் மைந்தா
பொக்கிஷத்தில் காதற்ற ஊசி தன்னை
பிரியமாய் அறிகின்ற மகான்கள் வேணும்
பொக்கிஷத்தில் கை காட்டு குறி போல்தானும்
பொன் கண்ட புரிநாத செயலைச் சொன்னேன்
சக்தி நாத சித்த கற்ப மூலம்
கக்கினதால் நாயினுங் கடையான் பாரே. 73

பாரப்பா சாரமென்ற அமுர்தந் தன்னில்
பக்குவமாய் காரமது அதினாலே பூட்டி
நேரப்பா இரண்டாண்டில் கொள்ளச் சொன்னேன்
நேர்மையாய் கொண்டாலோ உவராங் காரம்
காரப்பா இருபத்தைந்து கடிகை மேலே
காரமதை கொள்ளப்பா அந்த வேளை
சாரப்பா சாரமதை கொள்வாய் நீயும்
சார்புடனே இவ்வண்ணம் கொள்ளும் போது. 74

கொண்டு வரும்போதி லப்பா தேகந்தானும்
கூறுகிறேன் பானுபோல் ஒளியே வீசும்
அண்டருட தயவிலேதான் இரண்டாண்டில் தான்
அப்பனே முதற் பிறையான் காந்தன் தானும்

நன்றாக பசுமைபோல் வருகு மப்பா
நான் சொன்னேன் இரண்டாண்டில் மஞ்சள் நிறமாகும் பாரே
விண்டாலோ மூன்றில் பொன் வண்டு ரூபம்
விளம்புகிறேன் தங்க நிறம் நாலிலாமே. 75

முப்பூ செய்முறை

நிறஞ் சொன்னேன் திங்கள் ஐந்தில் காரம் வாங்கி
நின் அமுர்தம் விட்டதிலே பிசைந்து நன்றாய்
திரமுடனே கொடு ரவியில் இரு சாமந்தான்
தீர்க்கமுடன் ரவிபட வைத்தா யானால்
வளமுடன் உவர் படிந்த பிசைந்த மண்ணை
அப்பனே உண்டு வா திங்கள் ஐந்தில்
சிரமமது இல்லையப்பா ஆறாம் திங்கள்
சிறப்புடனே ஏழெட்டும் பத்து மட்டும். 76

பத்து திங்கள் மட்டும் இந்தபடியே செய்தால்
பாலகனே பூர்க்கு மப்பா இதுதான் முப்பூ
புத்தியில்லா பாவிகள்தான் பூ நீர் வாங்கி
பூமி தண்ணீரால் கலக்கி வெளியில் வைத்து
சித்தமதுதான் கலங்கி முப்பூ வென்றும்
சிறந்த சரக்கத்தனையும் சுட்டுப் பார்த்து
பித்தமது தான் பிடித்து நோயால் மாய்ந்து
பிணமாகிச் சுடுகாடு போவார் தானே. 77

தானென்ற இரண்டாண்டில் நோய்கள் கொஞ்சம்
தான் வருகும் பெரிதல்ல வந்தால் கேளு
தானென்ற காரத்தை யூட்ட வூட்ட
தான் தணிந்து போகுமடா இதற்கு வேறே
கோனென்ற ஜெகத்திலே மருந்து மில்லை
கூறினேன் இரண்டாண்டில் பூரணமே யானால்
வானென்ற ஐங்கோல மாச்சுதப்பா
வரைகிறேன் கெற்பம் போய் கற்ப மாச்சே. 78

கற்ப சாதனை இரண்டாண்டு முடிந்தபின் நிலை

கற்பமினி வாசி தாரணையைச் சொல்வேன்
காலமடா இரண்டாண்டில் போனால் கேளு
உற்பனமாய் காலனில்லை மாண்டானப்பா
உகாந்த வரை பூமியிலே யிருக்கலாகும்
அற்புதமாய் சொல்லுகிறேன் உலகீரேழும்
அஷ்ட தீவு தீவாந்திர தேவரெல்லாம்
அற்புதமாய் தான் மகிழ ஏகாந்தத்தில்
சுகமுடனே பூரம் நாடி யிருக்கலாமே. 79

இருக்கலாம் யாவர்களும் ஏவல் செய்ய
இவ்வுலகும் எவ்வுலகும் என்றும் போற்ற
இருக்கலாம் கயிலை வாழ் ஈசன் பாதம்
பெற்றிடலாம் ஈசருடன் பேசலாகும்
நெருக்கமுடன் ஆயிரத்தெட்டு அண்டம் தன்னை
நிமிஷத்தில் சுற்றி வந்து நிலைக்க லாகும்
முணுக்கலாம் இவ்விரண்டே தீக்ஷைபோதும்
மூன்றுமே முடித்தாலே யீசனொப்பாம். 80

அமுர்தம் உண்ணும்போது உணவு வித்

ஈசனிவன் பரனிவனே யுலகுக் கெல்லாம்
இவ்வண்ணம் மாலை புளி காலை யமுர்தம்
பாசமுடன் இரண்டாண்டில் கொள்ளும் போது
பாரப்பா ஒரு கால போஜனமே கொள்ளு
ஆசையுடனே மதிதனிலே ஆவின் பால் கொள்ளு
அப்பனே சத்தியுட தீக்ஷை யொன்றும்
பூசையென முடிந்தாலோ இவர்க்கு வந்த
புகழுரைப்பேன் புலத்தியனே நன்றாய்க் கேளே. 81

கற்பம் சித்தியானதற்குக் குறி

நன்றாய்க்கேள் முக்காலத் தியானம் உண்டாம்
நால்வேத சாஸ்திரத்தின் கருத்துந் தோணும்
என்றாலும் பன்னிரெண்டு ஸ்தலமும் காணும்
ஈசனுட சித்தி பெற்று எனைப் போல் வாழ்வான்
அன்றல்லோ ஐங்கோலம் உலகி லெய்தும்
அப்பவல்லோ சிவன் ரூபம் இவன் தானாகும்
இவ்விதமாய் சத்தியொடு தீக்ஷையென்றால்
இவன் கைப்பு முறிந்து தங்க மாகுந்தான். 82

ஆகுமப்பா ஆயினுட மார்க்கத்தாலே
அப்பனே மதி அமுர்தம் கொண்டதாலே
சாகுதலும் போச்சப்பா உடல் வேறாச்சு
சாற்றுகிறேன் வேடுவன் அம்பு தொடுத்து
ஈடு பேறதனைப் போலே தீக்ஷை
ஏகாந்த மாயப்பா இருந்த வண்ணம்
பாடுபெற ஆச்சுதப்பா பாரு பாரு
பகருவேன் இனி வேதை மூன்றா மாண்டில். 83

கற்பத்தால் வினைகள் அறும்

மூன்றான ஆண்டினில் பின்னால் சொல்வேன்
முக்கிய மிந்த கற்ப மென்றால் அற்பமல்ல
உன் தேகம் சித்தியாய் ஆவதற்கு
உத்தமனே நீயறிந்து அமுர்தந் தானும்

சுன்னமென்று உண்டேன் காண் சரீரம் தன்னை
சுத்தி செய்து இரண்டு சென்று முதலோர் தீக்ஷை
காண நன்றாய் பெற்றாலோ அனேக வினைகள்
கனலிலே வெந்து மிக நீறாய் போகும். 84

போகும் நல்வினை தீவினை யிரண்டும்
போக்கோடே காயசித்தி யாலே தானும்
போகுமே பறந்தப்பா கோடி கர்மம்
பொல்லாத பாழ்வினைகள் பொடியாய்ப் போகும்
ஆகுமே மூலசத்தி வாய்க்கு மப்பா
அப்பனே முதல் தீக்ஷை புளியு மாலை யாச்சு
யோகமது தான் சொல்வேன் இரண்டா மாண்டில்
உற்பனமாய் அபானத்தில் மூலமூட்டே. 85

வாசி யோகம்

மூட்டியே முறையாகச் செய்து பதமாய்
உட்கொண்டு காலைதனில் சொல்லக் கேளு
மாட்டிடாய் வாசியினால் சுழியிலேறி
பாரப்பா ஜாமமதுவும் நாலு ஜாமம்
கோடியிலே யிருக்கு மப்பா வழியினத்தை
கண்டு கொண்டு திரிகாலம் வாசிகொண்டு
நாட்டமுடன் ஊதி யருள் பெருவாயப்பா
நான் சொன்னேன் புலத்தியனே உனக்காய்த் தானே. 86

தீட்சை விளக்கம்

தானே தான் தினமொருக்கால் காலைதன்னில்
தாரகத்தில் மனம் நாட்டி புளியைத் தெளிவாய்
மாணா கேள் உண்டுவா ஆண்டு மட்டும்
மகிமை யிந்தப்படி நீயும் காலை யுண்டு
தேனெனவே மாலை விட்டு இந்த விதமாய்
திங்கள் பத்தும் கடந்தாலோ ஆண்டு மூன்று
சோலையது பாயு மப்போ தீக்ஷை வேண்டாம்
சொல்லுகிறேன் முதல் தீக்ஷை சிவமாம் தீக்ஷை. 87

சிவத்தினுட தீக்ஷை யொன்று சத்தி தீக்ஷை
சொல்லுகிறேன் இரண்டப்பா ஆக மூன்றும்
தவமார் சத்தியிவள் கண்ணில் காண்பாள்
தாரணியில் புழுவுந் தூண்டில் தன்னில்
பருவமுடன் தான் கோர்த்து சலத்தில் போட்டு
கெண்டதனை யிழுப்பது போல் மைந்தா இரு
தலமுடனே வாசியினால் சுழுனை மேவி
தன்மையுடன் யோகத்தில் இருப்பாய் நீயே. 88

யோக மப்பா அகாரமென்ற தீகைஷ முதற் கொண்டு
ஐயிரண்டு திங்கள் வரை அமுரி யுண்டால்
மோகமது தான் ஒழிந்து மாய்கை விட்டு
முன்னிருந்த வினை யொழிந்து தேகந்தானும்
பாகமுடன் சுத்தியதாம் அக்காலத்தில்
பாரப்பா இரு வினையாம் கர்ம பாவம்
ஏகமாய் வந்தாலோ சொல்லக் கேளு
என்னாளும் விடாமலே அமுரி கணையை. 89

கணை தொடுத்துச் சுடச்சுடவே வினைகளெல்லாம்
கண்காணா தோடு மடா கற்பத்தாலே
வினையில்லை அமுரியுட கற்பத்தாலும்
விளம்புகிறேன் பிரமாதி கற்பமாகும்
முனையான சிவதீகைஷ பதினொன்றுந் தான்
முடித்தாலோ காயசித்தி யோகசித்தி
கனிந்து பார் வாதமது சித்தியாகும்
காணப்பா சித்தியது செய்கும் போது. 90

கற்பம் உண்ணும்போது பத்தியமிருக்க

செய்துமே வருகின்ற போது தானும்
சிறப்புடன் பத்தியந்தான் சொல்லக் கேளு
மெய்யான ஆவின் பாலன்னம் கொள்ளு
மேன்மையாய் கறிவகைகள் மூலஞ் சேர்ந்தால்
செய்கின்ற தீகைஷக்கு வேகமில்லை
செங்கதிர் போல் தேகமாம் வெண்மை யில்லை
மெய்யாக புளிதனிலே பழுதுண்டாகி
மேன்மையாங் காரமெல்லாம் புழுக்கள் தானே. 91

புழுக்களது ஜெனித்துமே புளியைக் கொல்லும்
புளிப்பாழு உவர்ப்பாழு துவர்ப்பும் பாழு
களிப்பாழு கருவி கற்பங் காயம் பாழு
காரமதும் சாரமதும் சகலம் பாழு
அழியாமல் எப்பொழுதும் சொல்லக் கேளு
ஆவின்பால் அன்னமது கொள்ளவேணும்
வெளிப் பாழாய்ப் போகாமல் அக்காலத்தில்
வேதாந்த புளி யுண்டால் உறுதியாச்சே. 92

உறுதியாய் கற்ப முண்ணும் முறை பாகங்கள்
உத்தமனே சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
அருந்தவத்தால் ஆனதொரு அமுர்தந் தன்னில்
அப்பனே சொல்லுகிறேன் நாதங் கூட்டி

பருவமுடன் மூன்றாண்டில் காலை மாலை
பருகியப்பா ராஜாங்க யோகஞ் செய்வாய்
திறமாக அன்னமுடன் ஆவின் பாலும்
தேகத்தில் கனல் வேகம் இல்லா வண்ணம். 93

இல்லாத வண்ணமாய் முன்னே தானும்
இன்பமுடன் மூணே மூக்கால் கற்பஞ் சாதி
நல்விதமாய் பின்னன்னம் உண்டு அப்பா
நலமுடனே வாசியப்பா வசஞ் செய்வாய்
சொல்லுகிறேன் காலைதனில் அப்பா கேளு
சுகமுடன் மதிதனிலே அகாரங் கூட்டில்
பொல்லாங்கு தாராது இதுகள் தானும்
புகழ் முந்தி ஜென்மத்தில் விட்ட குறையாலே. 94

விட்டதொரு குறையாலே இச்சென்மத்தில்
விருப்பமுடன் எய்தினது ஒன்றுதானும்
கொட்ட மது தானடக்கி துதியே செய்து
ஓங்கார மூலச் சுழிதனில் நீ நின்று
பட்ட சட தீமைதனை நினைத்து நீயும்
பாணத்தால் பழக்கமது செய்யச் செய்ய
சட்டமுடன் ஞானசித்தி களிப்புண்டாச்சு
சாற்றுகிறேன் ஊன் இருந்தால் உயரும் யோகம். 95

கற்பத்தின் அளவு

யோகமது நிலைத்திடும் நீயிந்த வண்ணம்
ஓகோகோ சுழிதனிலே நாட்டமாய் நில்
பாகமது காலைதன்னில் சொல்லக் கேளு
பகருகிறேன் புன்னைக் காயளவு கொண்டு
வேகமுடன் மாலைதனில் அதிலே ஒன்று
இப்படியே சத்தி தீக்ஷை மூன்றாம் ஆண்டில்
சோகமது தான் தவிர்த்துக் கொள்ளும் போது
சொல்லுகிறேன் தேனருவி பாயும் பாயும். 96

அருவியது பாய்கின்ற காலந் தன்னில்
அண்டத்தில் வாசிதனை பாயச் செய்து
திறமுடனே கண்டத்தில் தாரை யூதி
திருப்தியாய் மண்டலங்கள் மூன்றுந் தன்னை
சரசமுடன் வலமாகச் சுத்தி நீயும்
சாற்றுகிறேன் சிவசக்தி தனைப் பூசித்து
பிற்சென்ற சராசரத்தை தாண்டி யப்பால்
பிரிமுடன் குண்டலியின் வாசி தன்னை. 97

வாசியை நீ கும்பித்து ஸ்தம்பம் செய்து
அப்பனே நிர்பந்தமாகத் தானும்
ஆசையுடன் மூலச் சுழி தனிலிருந்து
அப்பனே ஊதி மேல் நோக்கி நீயும்
பாசமுடன் இரண்டப்பா வினாடிதானும்
பரிந்துமே தலைசுத்தி கை நொடிப்பாய்
காச்சிந்த யோகமது ஓராண்டப்பா
கருணையுடன் நாட்டு நாள் ஒரு மாதந்தான். 98

ஒன்று முதல் பத்து வரை ஓராண்டப்பா
உறுதியுடன் இப்படியே பழக்கம் பண்ண
அன்புடனே வாசியாம் பிராண வாயு
அலரி யெழுந்து அக்கினியில் சென்று தானும்
நன்றாக அண்டரண்ட மளாவித் தானும்
நாசிதனில் பனிரெண்டு அங்குலந்தான் பாயும்
அண்டர்தன் தயவினால் இந்த யோகம்
அப்பனே தச திங்களாக வேண்டும். 99

வேண்டினால வாசியது ஆதாரத்தில்
விரும்பியே நிற்குமடா பூசிப்பாய் நீ
மூன்றாண்டில் பூசித்தால் மூலநாடி
ஊதிரண்டில் ஒன்றசைவாய் மிகவே தானும்
பானு நவத் துவாரமது ஓடா வண்ணம்
பாரப்பா மனம் புத்தி சித்தம் ஒன்றாய்
தானாக வாசியது ஏறித் தானும்
திறமுடனே அண்டத்தில் மூவேளை. 100

மூவேளை சாதனையும் செய்து நீயும்
முக்கியமாய் மூதண்டம் பாயவே தான்
பார் புகழ் வங்கென்று மூலத்தூதி
பார் மகனே வாசிதனைப் பார் பிரித்து
சீரோங்கச் சிங்கென்று ஓதி நீயும்
சிவ சிவாஎன்று நீ சுடரில் ஏற்றி
ஏறியே இருத்தி மேல் நோக்கும் போது
இன்பமுடன் சுழிதனிலே கதவு தானும். 101

கதவுமே திறக்குமப்பா திறந்தால் கேளு
கனல் கனகப் பரஞ்சுடரே காணும் காணும்
பதவியப்பா கிடைக்கின்ற மார்க்கஞ் சொன்னேன்
பார் மகனே சித்திரையும் மதியில் கொள்ள
விதமுடனே அமுரியது கொண்டால் கேளு
வேகமது மீறியே கனலாய்க் கூடும்
மனமடங்கி யோக சித்தி தச மாசத்தில்
மாச்சர்ய மாகுமப்பா இன்னுங் கேளு. 102

இன்னுங்கேள் சொல்லுகிறேன் ஐந்தாண்டாகில்
இன்பமுடன் தேக மது வலுவதாகி
முன்னாளில் செயல் படிக்கு அமுரி மாறில்
முக்கியமாய் சுத்தமதாய் அமுர்த மாகும்
சொன்ன தொரு கற்பாதி கற்பத்தாலே
சுகமாக மல ஜலமும் மாறினாக்கால்
அன்னவனின் செயல்படிக்கு ஞானவானாம்
அந்தரங்கத்தைக் கண்டோன் ஞானியாமே. 103

கண்டாலே பாழ் வினையும் போகுமப்பா
கருணையுடன் முப்பாழும் கடந்தானந்தம்
நன்றாக வருகுமப்பா பிரகாசத்தில்
நாட்டமுடன் திறை கடந்து அண்ட மேறி
கொண்டாட்ட மாகவே விளக்கு மேற்றி
கூறுகிறேன் தத்துவங்கள் தொண்ணூற்றாறும்
சண்டனென்ற அமுரியினால் நீறினாக்கால்
சாற்றுகிறேன் முப்பாழும் நீறிப்போமே. 104

கற்பம் கொள்ளும்போது விதிகள்

போனாலும் கற்பங்கள் கொள்ளும் போது
புலத்தியனே கன நடையும் மழையும் காற்றும்
ஊணான மனிதர் சஞ்சார மாய்கை
உத்தமனே சோம்பலும் தூக்கத்தோடு
மாணாகேள் பிதற்றலும் கோபத்தோடு
மாற்று பிணி கஞ்சாவும் மதுவினோடு
கோனான கறிவகை சுவையினோடு
கூறிவந்த இதுகள் எல்லாம் தள்ளு தள்ளே. 105

தள்ளிவிட்டுக் கற்பத்திற்கு உறுதி சொல்வேன்
தரணி மேல் பச்சரிசி பயறோடப்பா
விள்ளுகிறேன் பால்விட்டு சமைத்துத் தானும்
விருப்பமுடன் கருவேம்பு அமுரி யுப்பும்
சள்ளையில்லை மிளகுடனே மூன்றுஞ் சேர்த்து
சாற்றுகிறேன் தூளாக்கி அமுதில் தூவி
எள்ளளவும் பாராமல் ஒரு பொழுது தானும்
ஈஸ்வரியாம் தீக்ஷையிலே மூன்று ஆண்டு. 106

அண்டச் சுண்ணத்தின் விபரம்

மூன்றான ஆண்டிலே உண்டு வா நீ
உத்தமனே இனி அண்டச் சுண்ணம் சொல்வேன்
ஆண்டு ஈராண்டில் அந்தி சந்தி தீக்ஷை செய்த
அப்பனே மீந்த தோர் கார மெல்லாம்

மூண்ட தொரு சமாதிதனில் அடக்கம் செய்து
முக்கியமாய் பழம் புளியே அண்ட மாச்சு
நான் சொல்வேன் அந்த அண்டம் சுன்னமாக
நாதத்தில் மதி சேர்த்துக் கரைத்திடாயே. 107

கரைத்துமே சட்டியிலே விட்டு மைந்தா
கருணையுடன் மேல் சீலை செய்து
திறமுடனே மூன்று நாள் வைத்து வைக்க
தீர்க்கமுடன் நாலா நாள் தெளிந்த நீரை
அரைகிறேன் குப்பிதனில் அடைத்துக் கொண்டு
அப்பனே முன்சொன்ன அண்டம் வாங்கி
முரைத்துமே அயக்காம்பால் மாவாயாக்கி
முற்றுமே வந்தபின் சொல்லக் கேளே. 108

சொல்லக் கேள் வடித்த அண்டச் சூரணத்தை
சுகம் பெறவே சீலையிலே கிளியாய்க் கட்டி
நல்லக் கேள் ஒரு படியாய் அமுர்தம் தானும்
நலமுடனே பாண்டத்தில் விட்டு மைந்தா
நன்றாக கிளியதனை அதிலே பாச்சு
நலமுடனே மேல் மூடி ஜலந்தான் சுண்ட
சொ :லுவேன் எரித்தான பின் எடுத்து
துரித முடன் கல்வத்தில் போட்டிடாயே. 109

போட்ட பின் முன் குப்பி அடைத்து வைத்த
புகழான பழம் புளி நீர் விட்டுத் தானும்
ஆட்டுவாய் இரு ஜாமம் வற்ற வற்ற
அப்பனே நீர் வார்த்து அரைத்துத் தானும்
நாட்டமுடன் மெழுகு பதமாகும் போது
நலமுடனே தான் வழித்து பில்லை தட்டி
வாட்டிடுவாய் கதிர் முகத்தில் காய்ந்ததானால்
விளம்புகிறேன் ஓட்டில் வைத்து ஓடு மூடே. 110

மூடியே சீலை மண் ஏழுஞ் செய்து
முழுப் புடத்தில் போட்டிடுவாய் முக்கியமாக
சூடதற்கு ஆறின பின் எடுத்துப் பாரு
அண்டமென்ற சுண்ணத்தின் ஒளிவுதானும்
கோடி மதிக் கொக்கு மப்பா புலத்தியா கேள்
குறிப்புடனே யிதையல்லோ சித்த ரெல்லாம்
பாடினார் நூல்களிலே யனந்த மார்க்கம்
பாரப்பா மறைத்த தெல்லாம் இதுதான் பாரே. 111

பாரப்பா இச்சுன்னம் காரம் மெத்த
பகருகிறேன் சுக்கிலத்தின் சுரோணிதத்தால்
நேரப்பா வாச்சதுதான் சொல்லக் கேளு
நேர்மையுடன் காரமதில் சாரம் விட்டு
தேருதற்கு பணவிடைதான் சுண்ணமிட்டு
செய் பாகத்துடன் பிசைந்து லேகியம் போல்
காரப்பா மூன்றாண்டுக் கப்பால்
மகிமையுடன் சுத்த திங்கள் பத்துங் கொண்டால். 112

கொண்டாலே தேகம் வஜ்ஜிர காயமாகும்
குடிலமென்ற சட்டைகளும் கழன்று போகும்
நன்றான தேகமது பானு போலாம்
நான் சொன்ன வாசிதனை தூக்கி விட்டு
சென்றூதி பிராணாயம் உள்ளடங்க
ஜெகத்தோர்க்கு கற்பத்தின் வித்தை காட்டி
பண்டு போல் ஆதாரம் காணுதற்கு
பாரப்பா யோகங்கள் அறிவித்தேனே. 113

அறிவித்தேன் மூன்றாண்டும் ஆச்சுதப்பா
அப்பனே சிவத்தோடு நாலுமாச்சு
குறிப்புடனே சிவதீக்ஷை முதலில் ஒன்று
கூறினேன் பின் மூன்றும் சத்தி தீக்ஷை
விறுதாகக் கூறினேன் நாலா மாண்டில்
விபரமுடன் அறியும் விதம் சொல்லக் கேளு
பரனாகும் ஆதார வீடு தோறும்
பக்குவமாய் பஞ்ச கர்த்தாள் பேசுவாரே. 114

பேசருங் காலத்தில் அமுர்த மூரும்
பெருமையுடன் அவர் பாதம் பணிவாயப்பா
கூறி யவர் யுனக்கோ பர மறிவிப்பார்
கூறுகிறேன் இத்தனையும் எதினாலென்றால்
ஆசையுடன் கொண்ட கார சாரத்தாலே
அப்பனே மவுனத்தால் வாசி கொண்டு
பாசமுடன் சரமாறி யேற்றிய தாலே
பாரப்பா இத்தனையும் எய்துங் காணே. 115

காணவே கல்லுப்பு வாறு தானும்
கருதியே யறியாமல் உலகிலுள்ளோர்
ஆணவங்கள் மிகப் பேசி யிறந்து போனார்
அப்பனே கல்லுப்பைத் தேடினோர்கள்
வேணபேர் உண்டப்பா இறந்திட்டார்கள்
விளம்புகிறேன் வெள்ளை கல்லுப்புத் தானும்
பூணப்பா வெகு மதியாய் ஆய்ந்தாலுந் தான்
புத்தியுடன் உள்ளமதில் உண்டு பாரே. 116

உண்டு பார் கல்லுப்பும் வெள்ளைக் கல்லுப்பும்
உத்தமனே யிந்துப்பு இதுகளெல்லாம்
நன்றான தீகைஷயது செய்து நின்ற
நலம்பெற்ற அமுர்தத்தைக் காய்ச்சினாக்கால்
உண்டான உப்புக்கு இந்நாமங்கள்
உறுதியுடன் கூறியிருக்க வுலகந் தன்னில்
சண்டாளர் வெவ்வேறு உப்பெடுத்து
சாற்றுவார் கல்லுப்பு என்றுதானே. 117

தானென்ற வெள்ளைக் கல் உப்பு என்றும்
சாற்றுவார் இந்துப்புஎன்று தானும்
கோனென்ற உப்புக்கு முப்பு வென்றும்
கூறினார் எதினாலே யென்று கேட்டால்
பானென்ற மூன்றாந் தீகைஷக் காகும்
பல தொழிலுக்கு உதவுவ தால் முப்பு வென்றும்
தேனான சித்தர்கள் கூட்டங் கூடி
திருவான நாமங்கள் கொடுத் திட்டாரே. 118

இட்டதால் புலத்தியனே யுனக்காய்ச் சொன்னேன்
இனி வாசி வசப்படும் வயணஞ் சொல்வேன்
சட்டமுடன் சூழ்ந்த உலகத்தோர்கள்
தான் புகழும் சோதியது பிரகாசிக்கும்
இடகலையும் பின்கலையும் சுழினையாலே
ஏக பராபரப் பொருளின் நாதத்தாலே
விட்டகுறை துரியா தீதத் தலந்தான் மேவி
விளம்புகிறேன் கலையொத்து வலஞ் செய் சுத்தி. 119

சுத்தி யிட பாரிசமாய் நடனஞ் செய்ய
சுகமுடனே கருவூர் வளநாட்டில் தானும்
பற்றுதலாந் தந்தையினா லுதித்த தவத்தால்
பாரப்பா அமுரியுந்தான் சரீரந்தன்னில்
அற்புதமாம் அமுரியுட விந்து கூறு
அப்பனே தசதிங்கள் அதுவும் உண்டு
முற்றுதலாய் பாலமுர்த போஜனமுஞ் செய்
முக்கியமாய் சுவாச மென்ற கலையைத் தானும். 120

கலைதனையே ஆதாரந் தன்னில் மாட்டி
கருணையுடன் அங்கங்குத் தொழுது தானும்
சில துறையைக் கொண்டப்பா துருவ மேவி
சீர் பத்து வாயுதனை அமுரியாலே
பலனாகத் தான் கட்டி யொருமிக்கச் செய்
பாரப்பா வருநீரும் அதுவே யாகும்
நல ஜெயநீர் அதுவாகும் அதுவுந் தானும்
கண்மையுடன் மனோ வேகமாய் வருகு மப்பா. 121

வருகின்ற அமுர்த மதை யுண்ட பின்னே
அப்பனே யமுதுண்டு சுழியை நாடி
அருந்தவத்தின் வாசியினால் அங்கென்றுந்தான்
அகார முதலக்ஷரமும் துடியே யாக
ஒருமித்து முடி சுத்தி வினாடி பாரு
உறுதியாய் சுழி முனையின் தாரை தன்னில்
பரமி தன்று அனுக் கிரகம் புரிவாரப்பா
பக்குவமாய் ஓர் தினந் தானாகிலுந் தான். 122

ஓர் தினந்தான் ஆகிலுந்தான் பிரியாமற்றான்
உத்தமியாள் பதம் பணிந்து தொழுது போற்றி
பாரு நீர் சொல்லுகிறேன் புளியு முறவாய்
பார்த்திபனே ரவி மூலந்தனிலே தானும்
சார் கடலின் வேகமதாய் வருகும் பாரு
சாற்றுகிறேன் இதுவேதான் பிரம்மாதி கற்பம்
ஆர் புவனந்தனில் கருவா மிதுகள் தன்னை
அறியாமல் போனார்கள் மேலுங் கேளே. 123

மேன்மையுடன் தேக சித்தி பெறுவாரில்லை
ஞாலத்தின் அனைவோர்கள் இக்கற்பத்தை
அறியார்கள் அறிந்தவர்கள் ஆகிலுந்தான்

பாலமுர்தம் போல் மனிதன் உற்பனத்தால்
பல நூலின் வழிகண்டால் தோணும் வஸ்து
தாலத்தின் சித்தர்களும் காணாமல்தான்
தன்மை யற்று சவமாகிப் போனார் தானே. 124

போனதினால் அவர் கண்டு மரித்தாரப்பா
புகழான உதகமும் அறியா நாய்கள்
ஆனதினால் இவர்களெல்லாம் ஞானியாக
ஆவாரோ யுலகத்தில் பரதேசிகள்
ஊனமுடன் உயர் ஜீவன் வளர்த்தாலும்
உடலது போய் சுக்காகி யேகினார்கள்
பானத்தால் வாய்வு பத்தும் வசமதாக்கி
பாரப்பா சுவாசத்தை அசையா வண்ணம். 125

அசையாமல் மூலத்தில் கும்பித்தப்பா
அப்பனே சிங்கெனவே மவுனந் தன்னில்
அசையாமல் அருள் பெற்று யோகஞ் செய்து
அனுக்கிரகம் பெற்றுமே யிருளு மற்று
அசையாத முத்திதனில் சேர்ந்து நீயும்
அப்பனே மோக்ஷத்துள் கண்டு தானும்
அசைந்தாடும் ரவி மதியும் சிவத்தின் ரூபம்
ஆதலால் குரு மந்திரம் அங்குதானே. 126

மந்திர ரகசியம்

அங்கென்ற அக்ஷரத்தை சொல்லக் கேளு
அப்பனே சுழியினுட முதலெழுத்தாம்
சங்கையுடன் அதினாலே கடையெழுத்தை
சாங்கமுடன் அறியலாம் அப்பனே சொன்னேன்
எங்கும் சுக ஜீவனமாய் பெரியோர்தானும்
என் மகனே ஒருபோது அமுர்தம் கொண்டு
லிங்கமது தானறிந்து பசி யொழிந்து
உலகத்தில் கருவாளி யாகித்தானே. 127

மடைவாயில் பக்ஷிநடை அறிய

ஆகியே தன்னுக்குள் ஸ்தல வாசத்தில்
அற்புதமாம் இடைகலையின் சுழினையாலே
பாடுபெற்று யோக மதில் ஏறித் தானும்
பாரப்பா தீக்ஷை பத்தும் மேலாம் தவமாம்
யோகியே ஜெகந்தனிலே மடவாய் தன்னில்
உயிர்பறவை பட்சிபோல் சொல்லக் கேளு
ஆடு மதி ரவி செயலைக் கொண்டு தானும்
அப்பனே யோராண்டில் புலனை வென்றால். 128

வென்றார்கள் ஐம்புலனை அப்பா கேளு
விருத்தாந்தம் வாய்வுடனே அனல் சேராது
தன்னுடலும் இறந்துபோம் அதுகள் சேர்ந்தால்
நளினமுடன் இறவாது தேகந் தானும்
சென்றவர்கள் பெற்ற பேர் ஞானியாகும்
துறவறமும் இல்லறமும் இதுவேயாகும்
என்றைக்கும் பிறவார் மூன்றெழுத்தைக் கண்டார்
எப்போதும் மறவாமல் மவுனந்தானே. 129

மௌனமது விடாமல் அருள்பெற்று அடைவர்
மகிமையுடன் யோகமது செய்வதற்கு
சுகுணமாய் செகத்தோர்க்கும் உனக்குத்தானும்
சாற்றினேன் இம்மார்க்கம் புலத்தியனே அப்பா
உபமானம் நற்பிறவி யாகத்தானே
உலகுதனில் தானிருந்து ஞான மொழியை
தவமதுவால் கற்பனையாய் கண்டறிந்து
காலமது போகாமல் கற்பந் தன்னை. 130

கற்பத்தின் உட்கருத்தை கருத்தினாலே
கனமுடனே தானறிந்து தரணி தன்னில்
தற்பரத்தின் யோகியாய் வாழ்வா யப்பா
தன்மையுடன் அண்ட பற்பம் உண்டு வந்தால்

உற்பனமாய் ஆக்கைதன்னில் உள்ள நோய்கள்
உண்மையுடன் தான் பறக்கும் நாலா மாண்டில்
சொற்பதமாய் ஊழ்வினை வந்தெய் திட்டாலும்
சொற் பெரிய கர்மவினை வந்திட்டாலும். 131

வந்தாலும் நமனதுவாய் அண்ட பற்பம்
வகையுடனே கொண்டிட்டால் பறக்கும் நோய்கள்
விந்தையுடன் அணுவேனும் சளையாமற்றான்
விருப்பமுடன் கற்பமது சாதித்தப்பா
சந்தயமாய் நால் ஆண்டு கடந்து தானால்
சாற்றுவேன் ஊழ்வினைகள் வந்து சேரும்
எந்த நோய் வந்தாலும் அஞ்சாமற்றான்
என்னாத்தாள் பாதமது பணிய வேணும். 132

பணிந்துமே அண்ட பற்பம் உண்டு வந்தால்
பறக்குமடா வினைக ளெல்லாம் பனியைப் போலே
கனிந்து நான் இனியொன்று சொல்வேன் கேளு
கருணையுடன் மதி பிசகாது உண்டால் மைந்தா
வினைநோயும் அகலுமென்று எனது குருவும்
பிரியத்தால் தானுரைத்தார் புகழ்ந்து சொன்னேன்
அடிமுடியும் மயிர்ப் பாலந் தன்னிலே தான்
அப்பனே பழம் பொருள் ஒளித்த வாறே. 133

ஜனகர் மறைத்த பொருள்

தெளிந்தவர் கனவுபோல் கண்ட காஷி
தீரமுடன் கற்பத்தால் அறிவாய் மைந்தா
அழியாமல் சிரஞ்சீவி பதந்தான் பெற்ற
அருள் ஜனகர் மறைத்து வைத்த பொருளப்பா
தெளிவாக மறைவின்றிச் சொல்லிவிட்டேன்
தெள்ளறிவுப் புலத்தியனே யுனக்காய்த் தானும்
சலியாமல் உலக மெல்லாம் அலைந்த மார்க்கம்
சாற்றினது ஏதென்றால் சொல்லக் கேளு. 134

சொல்லக் கேள் மாளாமல் இருப்பதற்கு
சுகமாக இவ்வளவும் வெளியாய்ச் சொன்னேன்
சொல்லக் கேள் அமுரியுண்டு மோக்ஷம் பெற்றால்
சுகம் பெற்ற நமனல்லோ மாண்டு போவான்
சொல்லக் கேள் சொர்க்கமது நாத விந்தால்
சுகமாகத் தான் கிடைக்கும் இன்னுங் கேளு
நல்ல சஞ்சீவி யுண்ட பலத்தினாலே
நலமுடனே பிராணாயம் சித்தியாகும். 135

சித்தியடா பிராணாயம் சித்தியானால்
சிறப்புடனே சொல்லக்கேள் ரேசித்தப்பா
பக்தியுடன் பூரகத்தில் கும்பகத்தில்
பாய்ந்தாலே வாசியது நிலைக்கும் பாரு
புத்தியுடன் ஐந்து பஞ்ச பூதந்தானும்
புகழுடன் தானறிந்தால் அநித்தியம் போகும்
சித்தியாய் அஞ்சு வசப் படுதல் தானும்
சொல்லுகிறேன் ஓராண்டில் வசமதாமே. 136

வசமெந்த விதமாகும் என்று கேட்டால்
வன்மையுடன் மானிடனாய்ப் பிறந்தாலப்பா
மசக்கின்ற பெண்சாயல் விலக்க வேணும்
மகிமையுடன் நீக்கினால் பேரின்பத்தில்
வசமுடனே தான் சொக்கி புலத்தியனே ஐயா
வண்மையுடன் தேகமது அழியா வண்ணம்
குசுமியாய் சித்திபெற்றதுங் கனவானாவாய்
குறிப்புடனே யோக பூஜை செய்ய வேண்டும். 137

யோக சித்தி

வேண்டுமென்றால் யோகசித்தி இனிமேல் சொல்வேன்
விருப்பமுடன் தான்கேளு கவனித்தப்பா
பூண்டு நீ வாசிதனை யூதி மைந்தா
புகழுடனே தம்பித்துச் சொல்லக் கேளு
வேண்டி நீ கருவிகளைச் சுட்டு நன்றாய்
விரும்பியே கும்பித்துப் பூரகமே நாடி
பூண்டப்பா தம்பித்துக் கும்பகந்தான் தேடி
புகழுடனே மூன்றாண்டு சென்று தானும். 138

சென்றுமே யோகமதில் தானே நின்று
சிறப்புடனே தாரைதனில் வாசி யூதி
நன்றாகக் கணபதியை தொழுது தானும்
நங்கென்று வினாடியே ஊதி நன்றாய்
சிண்டுபோல் மங்கென்றுஞ் சாதியப்பா
சிறப்புடனே சிங்கென்று மூலத் தேத்தி
அன்றல்லோ வங்கென்றும் பரத்தைப் போற்றி
அப்பனே யங்கென்றும் வாசி மேலே. 139

வாசி மேலேறிப் பிரகாசமாக
ஆதித்தன் போலேதான் ஓமென்றேதான்
வீசியே மூலத்தில் ஒட்டியப்பா
விளம்புகிறேன் அவ்வாசல் தன்னைக் கட்டி

கூசியே அவ்வும் உவ்வு மொன்றாய்க் கூட்டி
குணமுடனே நாசிதனில் மூச்சொ ட்டாமல்
தேசிக நின்பத மேவிச் சொல்லக் கேளு
திறத்தினால் ஊசிமுனை வாராமற்றான். 140

வாராமல் ஆதார மூலந் தன்னில்
வழுத்துவேன் நாதாவைத் தொழுது தானும்
பாராமல் பிராணாய தீபம் ஏற்றி
பாரப்பா கெங்கைதனில் ஜைனம் செய்து
ஆதாரம் தனில் கெவனம் பாயா வாசி
அரனருளால் ஆசா பாசம் அறுத்துத் தானும்
பூறாக வாசி பரி மீதிலேறி
புருவநடு வீதியிலே நேசிப்பாரே. 141

விதியிருந்தால் வருமென்பதற்கு சாக்ஷி

ரேசித்துப் பாய்ந்துமே கடிகை யொன்றுக்கு
ஓர்விதமாய் சுழியில் நிற்பாய் திங்களொன்று
வாசியினால் இப்படியே நாட்டுவாய் நீ
அப்பனே யோராண்டு வரை வந்தாக்கால்
நாசமாய் முப்பாழும் நீறிப் போகும்
நானிலத்தில் சகல சித்தர் சொல்லி வைத்த
ஆசை பரி பாஷைகளும் தோணாமல்தான்
அவனுடைய விதியிருந்தால் வருகுமென்றே. 142

சிவம் சக்தி ஜெயநீர்

வருகு மென்று சொல்லி சொல்லி நரகம் போனார்
வாய்த்த விந்து நாதமே யேம மப்பா
பருகின்ற மேகமே யமுரி புளியாம்
பாரப்பா சிவம் சத்தி சேர்ந்து தானும்
உருக்கமுடன் திரவம் கடுஞ் செய நீராகும்
உண்மையாய் எட்டெட்டுச் சரக்கும் நீறும்
தரணி தனில் நவலோக மாற்றும் ஏறும்
தன்மையுள்ள அம்பிகையின் கமலநாடி. 143

நாடு நீ அவர் சத்தால் மூலம் பாய்ந்தால்
நானிலத்தில் வாதம் உன்னுள் அமையும் பாரு
ஆடுகின்ற பதியினால் ரவியும் தோற்றும்
அப்பனே யிருவினையும் சுட்டு நீதான்
ஓடிவரும் பிறப்பிறப்பும் ஒழித்து விட்டு
உண்மையாந் தொண்ணுத்தாறு கருவிதன்னை
சாடுவாய் அன்பினால் நீறாயாக்கி
சாற்றுகிறேன் வாயு தனைக் கும்பிப்பாயே. 144

கும்ப லக்ஷண மறிய

குமம்பிப்பாய் மூலத்தில் வாசி தன்னை
கூறுகிறேன் நாசி வழி வாரா வண்ணம்
நம்பிப் பார் சாங்க யோகஞ் செய்வாய்
நானிலத்தில் பஞ்சாக்ஷர அமுரிநஞ்சை
சம்பிரமாய் வயிராக்கியத் துடனே கொண்டு
சாற்றுகிறேன் தேக மெண் சாண் தன்னைச் சுட்டு
பம்பரம் போல் ஆதார ஸ்தலத்தில் நின்று
பாரப்பா பானத்தை மாறத் தேகம். 145

தேகமது தங்கமாம் ஸ்திரந் தானப்பா
திறத்தினால் தன்னைத் தானறிந்து தானும்
பாகமுடன் ஜடந்தன்னைச் சுத்தி செய்து
பாரப்பா அம்பிகையின் பாதந் தன்னை
தேகமதில் அவ்வும் உவ்வா யறிவாய் நீயும்
தேனைப்போல் சொல்லுகிறேன் இன்னங் கேளு
ஆகமத்தில் தியானத்தின் புகழை யப்பா
அறிவதற்குத் தசதீக்ஷை காட்டினேனே. 146

காட்டினதால் கருவூரார் நாடுதன்னில்
கருணையுடன் நிலைத் திரு நீ என்றுமப்பா
ஆட்டப்பா அஷ்டாக்ஷர மென்ன வென்றால்
அன்பனே அமுரி புளியாகு மப்பா
இஷ்டமுட னிதுவுண்டு சித்தியாட
இயற்றுகிறேன் வங்சிங் என்றெழுத்தைத் தானும்
நாட்டமுடன் வங்கென்று யழுத்தித் தானும்
நலமுடனே வாசி யிழு எங்குந்தானே. 147

ஏக தீக்ஷை

எங்கும் பிரகாசமா யிருத்திப் பாரு
ஏகாந்தம் ஒரு தீக்ஷை முடிந்து தானால்
சங்கையின்றி அஞ்சி மூன்று இரண்டு தன்னை
சார்புடனே அறியலாம் இன்னுங் கேளு
பங்கமென்ற விதியை வெல்லு மதியினாலே
பார்மகனே மதியாலே விதியை வெல்லு
சிங்கம் போல் பதியறிய ஞானப் பாதை
சிறப்புடனே யிதுவப்பா அறிந்து கொள்ளே. 148

அறிந்து கொள்ளு மல ஜலமும் கழிந்ததானால்
அப்போ வல்லோ இந்திரியமும் பாழாமப்பா
பிறகிந்த மதி கண்டு உனதெழுத்தைக் கண்டால்
பிலமறவே தான் போக்கு புலத்தியா நீ

அறிவிப்பேன் இன்னுங் கேள் பூதலத்தில்
ஐம்பொறிகள் புலனை வென்ற மகான்களெல்லாம்
திறமுடனே வெளிதனிலே விடாமற்றானும்
தீர்க்கமுடன் பூசித்ததென்ன வப்பா. 149

அப்பா கேள் வாத சித்தி பெற்ற தென்ன
அன்புடனே சொல்லுகிறேன் புலத்தியா கேள்
ஒப்பாக மதி ரவியைப் பணிந்ததாலே
உறுதியுடன் தன்னுக்குள் உவர் அகற்றி
தப்பிதங்க ளில்லாமல் வாழ்ந் திருந்தார்
தண்மையுடன் காரமென்ற பூநீர் தானும்
உப்பாக காயத்தில் இருக்க வப்பா
உண்மையுடன் சாரத்தைக் கொண்டுதானே. 150

பூநீரின் உண்மை

கொண்டுமே சவுக்காரம் கட்டாமற்றான்
குணம் பேயாய் உலகத்தில் பூநீர் தேடி
அண்டத்தில் அலைந் தலைந்து மாண்டா ரப்பா
அப்பனே யிதுவன்றோ பூநீர் காரம்
நன்றாக யிது வல்லோ புளியாம் பூநீர்
நன்கார வீரமது வெடியுப்புந் தான்
கொண்ட பொருள் அடிமுடியும் இதுதானப்பா
கூறுகிறேன் சுருதிமுடி பொருளைக் கேளே. 151

தாம்பூரக் கட்டு

பொருளப்பா யிப் பொருளே சுருதி அந்தத்தில்
புகழுடனே சொல்லு கின்ற பொருளாமப்பா
அருந்தவத்தால் ஒருவருமே யறியாமற் றான்
அப்பனே சூட்சமாய் முடிக்க வேண்டும்
திறமுடனே அகார மென்ற தீட்சை யொன்று
தீர்க்கமுடன் சத்தி யென்ற தீட்சை ரெண்டும்
சிறப்புடனே முடிந்தபின்பு தாம்பூரத்தை
சீராக உருக்கியே சொல்லக் கேளே. 152

கற்பசித்தி யானதற்கு சாக்ஷி (தாம்பூரம் கட்டும்)

சொல்லக்கேள் சுத்த கெங்கை தனிலே சாய்க்க
சுயம்பாகி ரவி போலே ஒளியாம் செம்பு
நன்றாய்க் கேள் இப்பரீக்ஷைக் காண்ப தப்பா
நானிலத்தில் எளிதல்ல நான்தான் சொன்னேன்
உல்லாச தன் தேகம் ஊறலற்று விட்டால்
உறுதியாய் தாம்பூர மூரல் போமென்று
எல்லைதனில் என் குருவும் எனக்கு உரைத்தார்
ஆதலால் புலத்தியனே உனக்காய்ச் சொன்னேன். 153

சொல்லுகிறேன் இனிச் சர்வ சித்தி கேளு
சூக்ஷமாய் செம்பதுவுங் கட்டித்தப்பா
விள்ளக் கேள் மூலகரு சேர்ந்தால் கட்டி
இறுகியே வலுவாகி ஜோதியாகி
மெள்ளக் கேள் பத்து வயதாகு மப்பா
மேலும் நாத விந்தாலே சரக் கெல்லாந் தான்
அல்லலின்றிக் கட்டுமடா சொல்லக் கேளு
அப்பனே நவ பாஷாண முதற் கொண்டு தானே. 154

முதற் கொண்டு பரிச வேதை யாகு மப்பா
முதல் நமசிவய மென்ற ஐந்தும் விந்து
விதம் ஐயும் கிலியும் சவ்வும் நாதமாகும்
விருப்பமுடன் கொண்டுமே வாசி யூதி
பதமுடன் அங் உங் என்றதொரு எழுத்திரண்டும்
பாரப்பா சமரச மாகப் பத்தும்
இதமுடனே சாதித்தால் பிரம்ம லபியும்
அகன்றுபோ மென் றெந்தன் குருதான் சொல்ல. 155

வித்தில்லாமல் மரமில்லை

சொல்லவே புலத்தியனே யுனக்குச் சொன்னேன்
சொன்ன பத்தெழுத்தும் தச தீட்சை யாச்சு
அல்லவதில் ஓங்காரம் ஒரு தீட்சை யாச்சு
ஆக பதினோர் தீட்சை சொன்னேன் அப்பா
விள்ளுகிறேன் வித்தில்லா பூமி யுண்டோ
விந்து நாத மில்லா விட்டால் வாசி யுண்டோ
நல்லக் கேள் சித்தி யில்லாச் சித்து முண்டோ
நல்லக் சிவனில்லா ட்டால் தேவ ருண்டோ. 156

உண்டோதான் கருத்திவ்வாறு கண்டு கொள்ளு
உத்தமனே கதிர் மதியும் பிறகு தானும்
நன்றாக ஏவலது செய்ய லாச்சு
நாட்டுகிறேன் அப்பு உப்பு வெடி யுப்பாகும்
கண்டு மிதை யறிந்தோர் செய்வார் செய்வார்
காணப்பா இப்பொருள் தான் உனக்குச் சொன்னேன்
இன்னூல் போல் ஒரு நூலும் சொல்லா தப்பா
இயற்றுகிறேன் மதி தன்னைக் கொண்டு தானும். 157

கொண்டுமே தேகமது சுத்தி செய்வாய்
கூறுகிறேன் வரும் வழலை யப்போதன்று
உண்டப்பா வினையிருந்தால் இந்தக் கூட்டை
உறுதியுடன் அபான நீர் கொண்டு சாடி

நன்றாக யிந்த கர்மம் வீட்டைத் தானும்
தான் சித்தி வீடாக ஆண்டு தானும்
நின்றப்பா சாரத்தைக் கொண்டு தேற்று
நினைவுடனே அலை கடலை உண்டால் கேளே. 158

உண்டால் கேள் மல ஜலத்தை போக்குமப்பா
உண்மையுடன் மல கந்தி தோன்றுந் தோன்றி
செண்டாம் உலையின் வாய் மெழுகு போலே
தேகமது இருக்கு மப்பா அக்காலத்தில்
குளரு மலமன மதுவும் ஒருமித்தால் கேள்
கூறுகிறேன் ஜடசுத்தி யாகு மாகும்
தெண்டமா யிருக்காமல் மலக் கூட்டைத்தான்
திருப்தியாய் தந்தை யவன் காட்டி னானே. 159

ஆனதால் நானுனக்கு சொல்லுகின்ற
அன்பான பிரமாதி கற்பம் உண்டு
சேரணையா வஜ்ஜிர வீட்டுக் கப்பா
சொல்லுகிறேன் அதையுண்டு மலத்தைப் போக்கி
வீணான கச டெல்லாம் முழுதும் நீக்கி
விளம்புகிறேன் தேக சுத்தி சுகமாய்ச் செய்து
காணென்ற சுக துக்கம் துலைந்து தானும்
கூறுகிறேன் அந்த ஒரு ஆண்டு சென்று. 160

மாலையில் உண்ணும் புளி செய்முறை அளவு

சென்றுமே யிரண்டான ஆண்டில் தானும்
செப்புகிறேன் ஐந்தான மாதந் தன்னில்
நன்றான காலைதனில் வரும் காரத்தில்
நவிலுகிறேன் பானம் விட்டு ரவியில் வைத்து
பண்டான மெழுகு போலான புளியை
பாரப்பா மாலைதனில் சொல்லக் கேளு
நன்றான புன்னக் காயளவு கொள்ளு
நன்றாக தினம் சுண்டக்காய் தான் கொள்ளே. 161

தாம்பூரக் களிம்பு அறுதல்

கொண்டான மூன்றான ஆண்டில் கேளு
கூறுகிறேன் புளி விந்து சேர்ந்து தானும்
நன்றாக முடிக்கும் விதம் சொல்லக் கேளு
நற் செம்பை யுருக்கியே மூன்றா மாண்டில்
அண்டர் பிரான் தயவினால் வரும் பானத்தில்
அப்பனே உருக்கி சாய்த்திட்டால் கேள்
உண்டை போல் மணியாகும் அதைத்தான் பின்னும்
உருக்கி நன்றாய் தான் பார்க்க ஊறா லற்றே. 162

நாக வங்கம் முதலிய உலோகங்கள் மணி

ஊரலற்று இருக்குமப்பா இன்னுங் கேளு
உறுதியுடன் நாக வங்கம் எல்லாம் அப்பா
பார்த்துமே பானத்தில் உருக்கிச் சாய்க்க
பகருகிறேன் குவடு மணிபோலே யாகும்
காரத்தைச் சேர்த்துக் கொண்டு வருநாள் தன்னில்
கருணையுடன் உலையதனில் அதனைக் காச்சி
வீரமுள்ள சாரத்தில் தோய்த்துத் தானும்
விருப்பமுடன் மூசைதனில் வைத்து மூடே.. 163

நாக வங்க வேதை

மூடியே சீலை மண் செய்து தானும்
முக்கியமாய் உலையில் வைத்து ஊதினாக்கால்
ஆடியே உருகி நன்றாய் செம்பே யாகும்
அப்பனே வங்க நாக மதுவும் செம்பாம்
நாடிநீ பணவிடை தான் வகைக்கு தூக்கி
கன குகையில் இட்டுமே உருக்கினாக்கால்
கூடியே உருகி நன்றா யிருக்கும் பாரு
குங்குமப்பூ வர்ணமதுக்கு அதிகம்தானே. 164

நாக வங்க குரு வேதை

அதிகமாங் குரு வதனை நவ லோகத்தில்
அப்பனே நீயீய்ந்தால் வேதை யாகும்
சதி மோச மில்லாமல் வெளியாய்ச் சொன்னேன்
சாற்றுகிறேன் இனி முப்பூ இலக்கணங்கள்
அதி விந்தால் காரமது வெளியாய்ப் போகும்
அக்கார சாரத்தால் தேகம் சித்தி
விதமுடனே சாரத்தைக் கொண்டு தானும்
விருப்பமுடன் சரமாறி யேற்றில் தானே. 165

ஏற்றினால் தச தீக்ஷை முடியும் பாரு
ஏகாந்த நாத விந்து தன்னைத் தானும்
போற்றிய தோர் வாலை பெண் ரூப மாகும்
புகலுகிறேன் எனது குரு எனக்குத் தானும்
சாற்றினதால் புலத்தியனே விந்து நாதம்
சார்புடனே விளம்பினேன் உனக்கு நாதம்
தேற்றிய தோர் பூநீரே நாத மாகும்
தெகுட்டாத வீரம் வெள்ளைக் கல்லுப்புத் தானும். 166

வெள்ளைக் கல்லுப் பதுவே விந்து வாகும்
விளம்புகிறேன் கார சார மிரண்டி னாலே
கொள்ளையாய் சொரூப சித்தி பெறவே யாகும்
கூறுகிறேன் அமுரியே அப்பு வாகும்

சள்ளை யில்லா அப்பதுவே உப்பு வாகும்
சாற்றுகிறேன் உப்பதுவும் சிவமது வாகும்
நல் புளியே நாதமாம் நாதம் சித்தி
நாடினேன் இதுகளையும் உன்னுக் குள்ளே. 167

உள்ளுக்குள் அறிந்து கற்பம் முடித்திட்டாக்கால்
முப்பு சுண்ணம் முடியுமாம் அப்பால் கேளு
சற்சிவத்தில் சத்தியது இருக்கும் பாரு
காட்டுகிறேன் சத்திதனில் சிவ மிருக்கும்
பண்ணுகிறேன் நாதமாங் கனகம் தானும்
பாரப்பா உனக்குள்ளே இருக்கு தப்பா
சண்டனையும் ஜெயிப்பதற்கு சாரமாண்டு
சரமாறி யேற்றியே சொல்லக் கேளு. 168

சொல்லக்கேள் சாரமென்ற சத்திதன்னை
சுகமுடனே கைவசமே யாக்கினாக் கால்
அல்லலாம் இரு வினையு மற்றுத் தானும்
அடியோடே நாசமாய்ப் போகும் பாரு
நல்லாய் கேள் காரமது வந்தவாறு
நற்சித்தம் நூலந்தம் சொல்லும் சொல்லும்
விள்ளுகிறேன் இதை யறிந்த மகான்கள் தானும்
விள்ளுகிறேன் மாயவே மாட்டார் தானே. 169

மாயாமல் இருந்தாலோ நன்றாய்ப் பாரு
மகிமையுள்ள புலத்தியனே சுக்கிலத்தை
மாயாமல் உடலுக்குள் இருத்தாமல் தான்
மாய்கின்றார் உலகத்தோர் வீணாய் தானே
மாயாமல் இருக்கவென்றால் இருப்பதுண்டு
மகிமைதனை தெரிந்து நீ கொள்வா யப்பா
பாயவே உண்ட நீர் உன்னுக்குள்ளே
பாய்ந்திட்டால் சண்டனில்லை சாக்காடில்லை. 170

இல்லையப்பா அரனுடைய தெரிசனந்தான்
இன்பமுடன் கண்டோர்க்கு கலியிராது
நல்லாகத் தான் சொன்ன பொருளைத் தானும்
நானிலத்தில் பெரியோர்கள் அறிவா ரப்பா
சொல்லக்கேள் சகல சித்தர் சொல்லி வைத்த
சுகமான பரி பாஷை ஆய்ந்து தானும்
அல்லலற ரகசியத்தை வெளியில் விட்டேன்
அப்பனே தத்துவங்கள் தொண்ணூத்தாறே. 171

தொண்ணூத்தாறு தத்துவமும் சுடாவிட்டாலோ
சொற் பெரிய ஞானமதை அறியாமற்றான்
திண்மையாய் பிறப்புகளும் ஒழியா வண்ணம்
தேகமது மாய்கைதனில் அழிந்து போகும்

உண்மையாய் ஞான மென்பது தானப்பா
உறுதியுடன் பானத்தால் உதிக்கும் பாரு
நன்சித்தர் மறைத்து வைத்த மார்க்கம் மார்க்கம்
நானிலத்தோர் அறியார்கள் ஆதலாலே. 172

ஆதலால் பாவமென்று எண்ணி யானும்
அப்பனே புலத்தியனே வெளியில் விட்டேன்
சாதகத்தால் சத்திதனை போற்றி செய்து
தச தீக்ஷை தன்னாலே காயசித்தி
வீதமுடன் பெறவேணும் பெற்றால் கேளு
விளம்புகிறேன் ஆதியும் பரந்தனக்குத் தானும்
ஆதியிலே சித்தர்கள் தான் வைத்த பேரை
அப்பனே பிரித்து நன்றாய்ச் சொல்லக் கேளு. 173

சொல்லக் கேள் அண்டக்கல் என்றுதானும்
சுகமான ஆனைக்கல் என்றுதானும்
உல்லாச சல்லி வேரென்று தானும்
உத்தமனே கொல்லி வேரென்று தானும்
விள்ளக்கேள் விடக்கல்லு என்று தானும்
விருப்பமாய் குருக்கல்லு என்று தானும்
நல்லாய்க் கேள் கடல் நுரையாம் என்று தானும்
நாட்டுகின்றேன் கடலுப்பு என்றுதானே. 174

என்றுமே பூநீற்று உப்பு வென்றும்
ஏகாந்த கந்தமல மென்று தானும்
முன்னாளில் ஆதியந்தம் தனக்குத் தானும்
உறுதியுடன் இவ்வளவு பேருமிட்டார்
இன்னுமப்பா அநேகவித நாமமுண்டு
இதுவெல்லாம் ஆதியந்த காரத்துக்கு
நன்றாக பலபேர்கள் இதனைத் தானும்
நாட்டிவைத்தார் கருவதனை நாட்டிப்பாரே. 175

காயாபுரி பட்டணம்

பாரப்பா இன மறிந்தால் பெறலாம் பேறு
பதி காயாபுரி யென்ற பட்டிணத்தில்
வீரமுடன் இருக்கின்ற கன்னி வாலை
விருப்பமுடன் மதியமுர்தம் தந்தாளாகில்
தீரப்பா யிவ்விதம் மருந்தென்றுந் தான்
தீர்க்கமுடன் அறிந்து கொள்ளு புலத்தியனே ஐயா
சார்பத்து ஓராண்டு சென்றா லப்பா
சாற்றுகிறேன் சஞ்சீவி யாகுந் தானே. 176

ஆகவே அமுரி மாறி மாறித் தானும்
அப்பனே நித்தியமும் வாசி யூது
தாகமுடன் ஒரு நாளு மாகிலுந் தான்
தவறாமல் தேகமது சுத்தியாக
பாகமுடன் வரவரவே மாறுந்தேகம்
பாரப்பா சூரியன் தன் ஒளிபோல் வீசும்
சோகமின்றி வருஷ மொன்று மதிதான் மாற
சொல்லுகிறேன் பின் வேதை யாகுமப்பா. 177

அப்பனே கேள் புருஷனுடன் பெண்தான் கூடில்
அறைகிறேன் விந்ததுவும் தரித்துத்தானும்
ஒப்பாக பிள்ளையது ஜெனிக்குமாப் போல்
உற்றதொரு காரசார நாத விந்தால்
தப்பிதங்கள் இல்லாமல் ஜடந்தான் மாறி
சாற்றுகிறேன் புதிதாகப் பிள்ளை தானும்
அப்பா கேள் பானுபோல் ஜெனிக்கும் சொன்னேன்
அரிதான காயகற்ப மாகும் பாரே. 178

பாரப்பா வெகுபாடு அமுர்தத்தாட்டம்
பார்தனிலே கற்ப முண்ணச் சிலது பேர்கள்
கூடியே வாதமது செய்வதற்கு
கூறுகிறேன் வித்ததுவு மில்லாமற்றான்
நாடியே காரசார குருதான் தேடி
நாட்டமுடன் அலைந்தலைந்து அனித்யந் தன்னில்
காடப்பா சுடுகாடு போய்ச் சேர்ந்தார்கள்
காட்டுகிறேன் கார சாரம் இரண்டினாலே. 179

இரண்டினால் தன்னைத் தானறிய லாகும்
இன்பமுடன் சித்ததுவும் ஆடலாகும்
திறமுடனே நாலாண்டு கடந்த பின்பு
தீர்க்கமுடன் தான் ஜனித்தால் நோய்கள்தானும்
சரசமுடன் புலத்தியனே யிதற்கு முன்னே
சாற்றினதோர் அண்டச் சுண்ணம் தன்னைக் கொள்ளு
அறிவித்த அமுர்தம் உண்டால் ஜெயிக்கலாகும்
அப்பனே பதினெண்பேர் சித்தர்தானே. 180

பதினெண்பேர் ஒளித்து வைத்த பொருளை யெல்லாம்
பாரப்பா இன்னூலில் வெளியாய்ச் சொன்னேன்
சதிமோச மன்றிப் பரனருளால் அன்றோ
சாற்றுகிறேன் தசதீக்ஷை முடிய வேண்டும்
மதியினால் இறப்பு பிறப்பு மாற்றுதற்கு
மகிழ்ச்சி கொண்டு இக்கற்பம் சொன்னே னப்பா
பதம் பெறலாம் சாதித்தா லென்றுதானே
[illegible]ர்ந்தாரே எனது குரு யெந்தனக்கு. 181

அடியேனுக்கு எனது குரு சொன்னதைப் போல்
அப்பனே புலத்தியனே உனக்குச் சொன்னேன்
துடியினிமேல் கற்பமுண்டால் துன்பப் போக்கை
சொல்லுகிறேன் முதலாண்டில் அப்பா கேளு
சடுதியாய் முதல் மாதம் முதற்கொண்டுந் தான்
சாற்றுகிறேன் மூன்று திங்கள் வரைக்குந் தானும்
கெடுதியாய் வருகின்ற நோய்கள் அப்பா
கேளு நீ கால் அசரும் வகையைக் கேளு. 182

கையெரியும் கண்கூசும் வாயுங் கூசும்
கண்டமது பச்சைப்புண் நீதங் காணும்
பொய்யெல்லாங் கவிந்தாலும் தீண்டினால் போல்
மேலிருக்கும் அசதிகளும் தீபனந்தான்
அப்பனே புலத்தியனே அமுதங் காணும்
அறைகுவேன் நாலு திங்கள் முதல்தான் கொண்டு
பையவே ஐந்து திங்கள் வரைக்குத் தானும்
பாரப்பா வருகும் நோய் சொல்லக் கேளு. 183

சொல்லக்கேள் மயக்கம் வரும் பேதி காணும்
சொற்பெரிய மன மதுவும் தாளா தப்பா
அல்லற்று மனந்தானும் தாளவேணும்
அப்பனே நீ யந்தக் கற்பங் கொண்டு
எல்லையிலா இவ்வளவும் அவஸ்தை யென்று
தெரிந்து கொள்வாய் உள்ளிருந்த நோய்க ளெல்லாம்
உல்லாச மாகவே வெளி சுபாவங் காணும்
உத்தமனே உடம்பெல்லாம் புண்ணாய்ப் போமே. 184

புண்ணாக வெந்துமே நீறுமப்பா
புகழான வெள்ளிலை போல் மேனியெல்லாம்
நன்றாக கடுத்துமே காணும் பாரு
நலமான இந்திரியம் அடைந்து தானும்
தண்ணீராய் போய் விடும் புலத்தியா கேள்
சாற்றுகிறேன் கள்ளிப்பால் சுட்ட புண்போல்
திண்மையாய் நாபியது வெந்துபோகும்
தீர்க்கமுடன் அமுரி கொண்டால் அப்போ தானும். 185

அப்போது குமட்டுமப்பா கொள்ளொட்டாது
அப்பனே துள்ளி விழுந்தாடுந் தேகம்
ஒப்பிதமாய் கையெரியு மப்பா தேகம்
உண்மையுடன் சொல்லுகிறேன் சுருக்கென்றுந்தான்
அப்போது நீர்க் கடுப்பு தோணும் பாரு
அதுவுமின்றி தேகமெல்லாம் கருப்புத் தோணும்
தம்பிதமாய் நீர்த் தாரையுடனே புண்ணாம்
சாற்றுகிறேன் கலகலென நரம்பெல்லாந் தானே. 186

எல்லாந்தான் தளர்ந்துமே காணு மப்பா
அந்த அஞ்சு திங்களிலே படும்பாடு தன்னை
அல்லாந்தான் என்ன விதமென்று தானும்
அப்பனே புலத்தியனே உனக்கு உரைப்பேன்
பொல்லா இடிபோலே இடிகள் தானும்
புதுமையாய் இடியது போல் இருக்கும் பாரு
எல்லைதனில் அனேக மன்னர் கூடிதானும்
இன்பமுடன் மல்யுத்தம் செய்வதைப் போல். 187

போலவே தேக மப்பா இருக்கும் பாரு
புகலுகிறேன் தன்னுடம்பு தன்னுதல்ல
ஆலவிஷம் போல் விந்து தண்ணீர் போலே
அப்பனே புலத்தியனே வருகும் பாரு
கோலமாய் படும்பாடு மெத்த வப்பா
கூறுகிறேன் அமுரி யுண்டால் தெரியும் பாரு
சீலமாய் உடலுக்குள் தொண்ணூற் றறுவர்
சீறி அந்தக் காலத்தில் யுத்தம் செய்வார். 188

யுத்தமது செய்வார்கள் சித்ர வதையாம்
உத்தமனே இதை நீயும் அறிந்த பின்பு
புத்தியுடன் இருவப்பா பெண்களோடு
புகலுகிறேன் சேராதே கண்டால் கூட
சித்திபெறப் பேசாதே சொல்லி விட்டேன்
சிறுவனே பேசியது தாளா தப்பா
இத்தனை நாள் நரம்பு எலும்பு நாடி தன்னில்
இருந்ததொரு மச்சைகளும் ஏகிப்போகும். 189

போகுமப்பா அஸ்திகளும் தளர்ந்து தானும்
புகழாக கட்டு விட்டுவிடும் பாரு
ஆகுமப்பா சடலமது துரும்பாய்த் தானும்
அப்பனே செல்லதுவும் தூணைத்தானும்
பாகுபெற எரித்தது போல் காணும் காணும்
பாரப்பா அநேக வினை அக்காலத்தில்
தேகமதில் வருகும் பார் அப்போ நீயும்
தெரிவையர்கள் மயல் தனிலே சிக்கிடாதே. 190

சிக்காமல் இருப்பதற்கு இரண்டா மாண்டில்
சிறப்புடனே மாலைதனில் கொள்வதற்கு
சர்க்கரையாம் புளியதுவும் சந்தியில் தானும்
சாற்றுகிறேன் கிடக்கது பார் இதுகள் தன்னை
அக்கரையாய் முன்னமே சொல்லி விட்டேன்
அக்காமார் தான் துணைகள் இருந்தாலுந் தான்
பக்குவமாய் வரும் வினையை தீர்ப்பாரோ சொல்
பகருகிறேன் நாதப் பால் உண்மையின் பாதம். 191

உண்மையுடன் பாதமது தொழுது நின்று
உத்தமனே பின்னாலுந் திங்கள் தன்னில்
அமையுமே யிருக்கும் நோய் சொல்லக் கேளு
அசதிகளும் உறக்க மொடு மயக்கத் தோடு
தமதான தேக மெல்லாம் அனலேயாக
சாற்றுகிறேன் இருக்கும் பார் உடல் கூசும்
சுமையான தொண்ணூற்றாறு கருவி தானும்
சுகமான உடலை வெவ்வேறு கூர்தான் செய்யும். 192

செய்துமே வேதனை கொடுத்துத் தானும்
ஜெகந்தனிலே விகாரமாய் வைக்கும் பாரு
அய்துமே அதிக பசி கோபத் தோடு
அப்பனே அனல் வேகம் மெத்த காணும்
கொய்த இந்தக் கற்பத்தை யறிந்து தானும்
கூறுகிறேன் முறையிதுவும் தவறாமற்றான்
நய்சமே கொண்டாக்கால் நான் சொல் வண்ணம்
நானிலத்தில் தேகமிந்தக் கூறாய் காணும். 193

காணும் ஏழுதிங்கள் தனிலே கேளு
கருத்துகந்து யிது செல்ல மயக்கந் தானும்
பூணவே வருகும் பார் புலத்தியனே அய்யா
புகழான இப்பிரம்ம கற்பப் பேரு
ஊணவே யறிந்தோர்கள் மகான்க ளப்பா
உறுதியுடன் எட்டான திங்கள் தன்னில்
காணுமப்பா கொட்டாவி விட்டால் ஊரே போகும்
கருத்துகந்து பட்டாலோ தெரியும் பாரு. 194

தெரியும் பார் பாடுபட்டால் சொரூபம் சித்தி
தெரிந்ததுமே வருகுமப்போ விந்து விட்டால்
குறியும்பார் வந்தவுடனே வினை மீளாது
கூறுகிறேன் தேகமுமே அழிந்து போகும்
பரிந்து பார் இதன் பெருமை தெரியாமற்றான்
பாரப்பா இப்படியே கெட்டுப் போனார்
சரியாக ஒன்பாந் திங்கள் தன்னில்
சாற்றுகிறேன் பின்னுந்தான் உபாயமாக. 195

உபாயமதாய் தேறவே வேணு மப்பா
உறுதியுடன் இப்படியே தேறினாக்கால்
அபாயமதாய் வினையதுவும் போகு மப்பா
அன்பனே யோகத்தின் செயல்தான் காணும்
சிவாயமாய் என்போலே உடல் விளங்கும்
சாற்றுகிறேன் மாயத்தில் நீ சிக்காதே
உபாயமதாய் இவ்வண்ணம் ஐம் பூதந்தான்
உத்தமனே அறிந்தவர்கள் மாளார் கேளே. 196

கேளப்பா பத்தான திங்கள் தன்னில்
 கேண்மையுடன் படும்பாடு மெத்த உண்டு
வாளப்பா இக்கற்பங் கொண்டால் கேளு
 வாழலாம் யுகாந்தம் வரை காலனில்லை
தேறப்பா சொல்லுகிறேன் மெத்தப் பாடு
 தெகுட்டுகின்ற வேதனைகள் வெகுசரம் பாரு
கேளப்பா சடலமது கொஞ்சம் கூட
 கூறுகிறேன் வேதனைகள் பொறுக்கா தப்பா. 197

உறவின் முறை சுற்றத்தார் கூடாதென்பது

பொருக்காமல் இருக்கு தென்று விட்டிடாதே
 புலத்தியனே சாகாமல் இருப்பதைப் பார்
உறவின் முறை சுற்றத்தார் துணை கூடாது
 உத்தமனே இக்கற்பங் கொள்ளும் போது
சரசமுடன் இதுக்கன்றோ மருந்து தானும்
 சாற்றுகிறேன் எங்கெங்கும் யில்லை யப்பா
உறமுடனே தேகமது வலுத்துப் போகும்
 உத்தமனே முன் ஜென்ம பாதகம் தானே. 198

பாதகம் இருந்தாலும் பறந்து போகும்
 பாரப்பா பத்து திங்கள் சென்று தானும்
வீதமுடன் அவனிதனில் பாலன் தானும்
 விருப்பமுடன் பிறப்பதுபோல் கற்பத்தாலே
சாதகத்தால் தச திங்கள் போன பின்பு
 சாற்றுகிறேன் புதிதாக பாலன் தானும்
வாதையுடன் பிறந்தெழுவான் நித்தந்தானும்
 அருளுடனே பொருளைத்தான் போற்று போற்றே. 199

போற்றினால் மதி ரவியும் இரண்டுங் கூடி
 பூரணமாய் ஆண்டினிலே வசமதாகும்
பார்த்திபனே இனிக் காய சித்தி சொல்வேன்
 பத்து திங்கள் பூரணமாய் முடிந்தால் கேளு
சாற்றுகிறேன் காயமது வலுத்துப் போகும்
 சார்புடனே மாய்கையது மறைந்து போகும்
தேற்றுகிறேன் சகலமும் ஒழிந்து போகும்
 சிவனென்றும் இவனென்றும் பேதமில்லை. 200

பேதமில்லை புலத்தியனே காலன் மாள்வான்
 பெரிய தொரு கோடான கோடி நோயும்
உசிதமுடன் இறந்துபோம் தனக்குள்ளேயே
 ஈசனுமே தன்னையுந்தான் அறிவா ரப்பா

சாதகத்தில் நிததிரையும் பாசம் போகும்
சாற்றுகிறேன் உலகத்தோர் வசிய முண்டாம்
பாதையடாபெரும் பாதை சொன்னேன் நூலில்
பாரப்பா பூசை மந்திர ஜெபங்கள் எல்லாம். 201

வாமப்பால் மதியமுர்தம் அமுரி

எல்லாந்தான் சொக்கியுமே போகுமப்பா
இன்பம் வளர் தத்துவங்கள் தொண்ணூத்தாறும்
நலமாக பிரிந்துமே போகு மப்பா
நவில்கின்றேன் அமுரியது தேனே யாகும்
அகத்தினால் சுழியறிவுங் காணு மப்பா
அறிவான சிவகெங்கை அறிவாய் கண்டால்
விள்ளுகிறேன் வாமப்பால் கொண்டதாலே
விருப்பமுடன் தேகம் வஜ்ர காயமாச்சே. 202

ஆமப்பா மூலத்தின் உள்ளே தானும்
அப்பனே முப்பாழும் இழந்து போகும்
போகுமப்பா முன்னம் அன்னம் அமுர்தந் தானும்
பிரிந்தாலோ ஒரு யானை பலவானாவார் பாரு
ஆகுமப்பா ஓராண்டுக் குள்ளே தானும்
அப்பனே உடலதுவும் வேர் கூறாகும்
சாகுதலும் போகு மப்பா பிரணவத்துள்
சாற்றுகின்றேன் ஜீவனது உறவே யாகும். 203

உறவாகும் வாசி நிராமயமே யாகும்
உத்தமனே பிராணாய வாசி தானும்
திறமுடனே பின்னிட்டு யிழுக்காமற்றான்
தீர்க்கமுடன் மூலத்தில் வாயு பத்தும்
சரசமுடன் கூடியே ஒருமித்துத் தான்
சாற்றுகின்றேன் பாயு மப்பா நாடி தானும்
திருப்தியாய் திரிகாலந் தன்னில் தானும்
திறமுடனே நீ நித்தம் வாசி யூதே. 204

ஊதியே நின்றுமே சாதித்துப் பார்
உத்தமனே வாசியது நிலைக்கா விட்டால்
சோதனை பார் தேகமது மாண்டு போகும்
சொல்லுகின்றேன் இவ்வாசி யூதி தானும்
தீதகற்றி எத்தேச காலமும் தான்
திறமுடனே அனுக்கிரக நிலையில் நில்லு
சாதிப்பதற்கு நீ சாட்சி தானும்
சார்புடனே பரி பாஷை நூலைப் பாரே. 205

பாரதிலே சொன்னபடி யோகந் தானும்
பக்தியுடன் சாதித்து ஊழி மட்டும்
நேர்த்தியாய் வாழப்பா கட்டும் வாசி
நினைவுடனே ஈராறிலேறும் வண்ணம்
பார்த்துமே நீந்திடவே தெரியுஞ் சோதி
பாரப்பா தாரைதனை ஓயாமற்றான்
நேர்த்தியாய் ஊதிடவே வஜ்ர தேகம்
நீ. பாரு ஆகுமப்பா வாசியாலே. 206

வாசியினால் நீயேறு ஏறிப் பாரு
வருந்துகின்றேன் நிர்மலத்தின் சொரூப மாகும்
ஆசையுடன் நான்கு நான்கு வினாடி கொண்டு
அப்பனே தினந் தினமு மேறினாக்கால்
வீசியே யோக மப்பா வசமு மாகும்
விளம்புகின்றேன் ஒரு தீகை்ஷ முடிந்து தானால்
நாசமாய் ஜெகமாய் கை தொலைந்து போகும்
நான் சொன்னேன் உண்மையினை வெளியாய்த் தானே. 207

வெளியாகும் கல்மலை மண்செடி பூடெல்லாம்
விளம்புவேன் மேருபோல் தங்கமாகும்
விழி யிரண்டும் பட்ட இடமெல்லாந் தானும்
ஈசனது கயிலைபோல் விளங்கு மப்பா
சுளுவாக இரு வினைக்கும் அவிழ்தந் தானும்
சூட்டினேன் இக்கற்பம் நாட்டில் உளார்க்கு
வெளியாக ஞானமது வாய்க்கும் பாரு
விருப்பமுடன் பெரியோர்க்கும் தெய்வ மாவான். 208

ஆவான் பார் வெளி தோன்றும் இப்பேற் கொத்த
அந்தரங்க ரகசியத்தை யினுக் கினுக்காய்
நாமேதான் புலத்தியனே பிரித்துனக்கு
நன்றாகச் சொல்லி விட்டேன் இனிமேல் தானும்
சாவகற்றும் பூரணத்தின் முறையைச் சொல்வேன்
சார்ந்து பார் அரனுடைய கிருபை பெற்றால்
தோன்றும் பார் அன்பத்தோ ரக்ஷரத்தோடு
லிங்கமுடன் சடாக்ஷரமும் தோன்றும் பாரே. 209

பாரப்பா உலகத்தில் அனேகர் தாமும்
பகருகிறேன் திரிந்தலைந்து ஒன்று தானும்
நேரப்பா கிடையாமல் உருண்டு போனார்
நிச்சயமாய் நீயப்பா தேசமோடி
கூறுகின்றேன் திரிந்தலையாமற் றானும்
குறிப்புடனே தீகை்ஷகளும் செய்து தானும்
சாரப்பா வாசியினால் தாரை தன்னில்
சாற்றுகின்றேன் நேசித்து இருப்பாய் நீயே. 210

இருபதுமே யிரண்டாண்டில் காலை தன்னில்
இன்பமுடன் காரமது உண்டா லப்பா
அருந்தவத்தால் மாலைதனில் மதிதான் மாறி
அப்பனே ஈராண்டும் சென்று தானும்
உருவேற சுழிமுனையும் முத்தி யெய்தும்
உண்மையுடன் யீராண்டில் ரேசித்தாலே
அருந்தவத்தால் சத்தி சிவம் ஒருமித்துதான்
அப்பனே உடல்தனிலே நெஞ்சி நேரே. 211

நெஞ்சின் நேர் நடு மைய துவாரந் தன்னில்
நேர்மையுடன் நாடி நின்ற நாதனுந்தான்
கொஞ்சுகின்ற குழந்தை போல் ஆடுவார்பார்
கூறுகின்றேன் கற்பங்கள் கொண்டு தானும்
அஞ்சாமல் வருகின்ற காலை தன்னில்
அய்யனே கப மதுவும் கட்டினாக்கால்
நெஞ்சு தனை சுத்தி செய்வாய் சொல்லிவிட்டேன்
நேரத்தில் காரமது வாங்கிடாயே. 212

கபசுத்தி மூலசுத்தி செய்யும் முறை

காரமது வாராமல் போகு மாயின்
கருணையுடன் மூலமதைச் சுத்தி செய்வாய்
தீரமாய் இந்தமுறை புலத்தியனே ஐயா
தீர்க்கமுடன் பூரண சூத்திரத்தில் சொன்னேன்
வீரமுடன் அவ்வாறு செய்து தானும்
விளம்புகின்றேன் வழலைசுத்தி மூலசுத்தி

குணமுடனே செய்தாலோ நன்றாம் பாரே. 213

நன்றினிமேல் ரசக்குளிகை முறையைச் சொல்வேன்
நாட்டமுடன் ஓராண்டு அமுரி யுண்டு
அண்டருட தயவினால் பங்கமின்றி
அன்பனே சாதித்தால் இரண்டா மாண்டில்
செண்டு போல் விந்ததுவுங் குளிகையாக
சேர்ந்துமே திரண்டு போம் அன்னாள் கொண்டு
குன்றியே துரும்பான யிந்த தேகம்
கூறுவேன் தூணாகும் இன்னங் கேளு. 214

இன்னங்கேள் சொல்லுகிறேன் நான்கா மாண்டில்
இன்பமுள்ள கார சார மிரண்டினாலோ
நன்றாக சரக்கெல்லாம் கட்டும் கட்டும்
நாட்டமுடன் வாசிதனை யழைத்தால் சும்மா

கொண்டுமே வருகுமோ புலத்தியா சொல்
கூறுவேன் அமுரி யாண்டு உண்டா லப்பா
சொன்னபடி கேட்கு மப்பா இன்னுங் கேளு
சூட்சமுடன் இருதீகைஷ பசைந்த மண்ணே. 215

21600 சுவாச மடங்கிய விதம்

பசைந்த மண் நீர் இருதீகைஷ யுண்ட தோடு
பாரப்பா சொல்லுகிறேன் மூன்றா மாண்டில்
அசை யிருபத்தோறாயிரத்து அறுநூறென்ற
அசைவான சுவாச மெல்லாம் அடியில் சேர்ந்து
சுவாச மப்பா அடங்கியே வசமதாகும்
அப்படியே ஒறாயிரத்து அறுநூறென்ற
பசுபாசச் சுவாச மெல்லாம் மூலந் தன்னில்
பாரப்பா ஒடுங்கியே அடங்கிப்போமே. 216

அடங்கினால் உடலுயிரும் ஒன்றாய்ப் போகும்
அப்பனே ரவி மதியும் ஒருமித்துப் போம்
துடங்கி யந்த காலத்தில் தினங்கள் தோறும்
துரிதமுடன் வாசிதனை யூதித் தானும்
விஷமான அமிர்தத்தை யுண்ணல் வேண்டும்
விளம்புவேனிந்த சிவயோகந் தானும்
திடமுடனே யறிந்தாக்கால் ஞானியாகும்
தீபமது காணலாம் நித்தம் தானே. 217

நித்தியமும் கண்டவனே சித்தன் ஆவான்
நிச்சயமாய் இனிதிடங் கூறச் சொல்வேன்
புத்தியுடன் சதாகாலம் தன்னைத் தானும்
புலத்தியனே மறவாதே கண்கள் தானும்
சித்தமாய் சிவந்துமே போகு மப்பா
சிறப்புடனே அது தனையும் பார்த்தே நீ தான்
பத்தியுடன் தச திங்கள் தானுமானால்
பகருகிறேன் அமுர்தமாம் மதிப்பாய்க் கொள்ளே. 218

கொண்டாலோ வருகின்ற கஸ்தி தன்னை
கூறுகிறேன் பாராதே புலத்தியனே அய்யா
தொண்டனாய் சுழி அறிந்த பின்பு நீதான்
சொல்லுகிறேன் சித்தந்தான் யிந்த கர்மச்
சண்டாள துர்மலக் கூட்டைத் தானும்
சாற்றுகிறேன் நீ சுத்தப் படுத்து அப்பா
அன்புடனே மனமொத்து நீ தான் கொள்ளு
அன்பான பொருளே பின் கார சாரம். 219

ஒட்டியான பந்தம் ஆடுஞ்சன அங்குட்டி அறிய

பின் கார சாரமாம் சொல்லக் கேளு
புகழான அக்கார சாரத்துக்கு
நன்றான ஏழுலகும் நிகருமாமோ
நவிலுகிறேன் உந்தி தனில் வாசிபூட்டி
சென்றதின் மேல் அங்குட்டி மாட்டி தானும்
சிறப்புடனே யோகத்தி லிருப்பா யப்பா
கண்ட தொரு மகத்துகளும் விண்ட தில்லை
கருணையுடன் கற்பத்தின் கருத்தைத் தானே. 220

கருத்துதனை அறிந்தவர்கள் ஆருமில்லை
கருணையுடன் உலக மெல்லாம் ஆராய்ந்தாலும்
தெரிந்தவர்கள் கிடைப்பதுவே யரிதாம் பாரு
தென்கடல் சூழ் அகிலமெல்லாம் மாதர் மயலின்
சிறப்புடனே விழுந்து அரவங் கடித்து தானும்
சொல்லுகிறேன் மாண்டிடுவாய் அதையும் நீயும்
உறுதியுடன் விலக்கி விடு மாதர் பாம்பு
உல்லாசத்துடன் கடிக்க அதற்குத் தானே. 221

சித்தியாம் இக் கற்பம் அற்ப மென்றும்
சொல்லியே உலகுதனில் அலைவதாலே
முத்திக்கு யென்ன வதுவாய்க்கு மப்பா
உரைக்கிறேன் இன்னங்கேள் என்னவென்றால்
சத்தியமாய் இந்த வேதாந்த கற்பம்
சார்புடனே கொள்ளு மப்போ சுற்றத்தாரை
புத்தியுடன் தள்ளிவிடு பராபரத்தை
புகலுகிறேன் நினைத்துக் கொண்டிருப்பா யப்பா. 222

பருதி மதி யிரண்டுமே பழகினாக்கால்
பகருகிறேன் நெஞ்சு புண்ணாகு மப்பா
இருக்கின்ற மும்மலமும் துர் மலத்தை
இன்பமுடன் போக விடும் அடிமூலம் தான்
உறுதியாய் சத்தியாம் ஆனாலப்பா
உண்மையுடன் முத்தி சித்தி யெய்தும் பாரு
அருளான முனைதானும் ஞான மெய்தும்
அப்பனே காயமது சித்தியாமே. 223

இருக்கின்ற காலத்தில் மாதர் தன்னை
இயல்புடனே சொல்லுகிறேன் கண்ணில் கண்டால்
உறுதியுடன் பார்க்காதே புத்தி கற்பம்
ஓராண்டு கொண்டிட்டால் பிறகு தானும்

அருந்தவத்தால் வந்திருக்கும் ஞானகற்பம்
அப்பனே மூவாண்டு கொள்வதற்கு
பிரித்துமே முன்னமே சொல்லி விட்டேன்
பிரியமுடன் அந்தப்படி கொண்டிடாயே. 224

கொண்டு வந்தால் பிரம்மலபி தள்ளிப் போகும்
கூறுகிறேன் கருவியெல்லாம் மாண்டு போகும்
அண்டருட தயவினால் கசடுமற்று
அப்பனே ஊனும் பொன் மயமேயாகி
உன்னிதமாம் உதயமாம் சந்திரன் போலே
உண்மையுடன் தேகமது ஒளியே வீசும்
நன்றாகப் பத்தியத்தில் பழுது வந்தால்
நவிலுகிறேன் கனல் கொண்டு அஜீரணத்தாலே. 225

கற்ப லேகியம் (பேதி நிறுத்த)

அசீரணத்தால் பேதியது யெய்தும் பாரு
அஞ்சாண்டில் கார சாரம் யெய்தினாக்கால்
உசிதமுடன் பேதியா மதற்குத் தானும்
உத்தமனே கற்ப லேகியத்தைச் சொன்னேன்
சுசிகரமாய் அதைத் தின்றால் பேதி நிற்கும்
சொல்லுகிறேன் இனிகற்ப லேகியத்தை
சச்சிதானந்தன் கிருபையால் நன்றாய்க் கேளு
சார்புடனே பாண்டத்தை அடுப்பில் வையே. 226

அடுப்பில் வைத்து சுட்டபின் விந்து விட்டு(அமுரி)
அப்பனே கொதித்த பின்பு சொல்லக் கேளு
துடங்கிய ஆதியந்தம் சூரணித்து
துரிதமுடன் அதில் கொட்டிக் கிண்டித் தானும்
திடமுடன் பொன் நிறமாய் பதத்தில் தானே
தீர்க்கமுடன் லேகியம் போல் செய்து கொண்டு
உடனேதான் பேதியது ஆகும்போது
உறுதியுடன் உட்கொண்டால் பேதி நிற்கும். 227

அண்ட மெழுகு

நிற்கு மந்த லேகியத்தை அஞ்சாமாண்டு
நிச்சயமாம் முழுதுமே கொண்டா லப்பா
அற்புதமாய் தேகம் வஜ்ர காயமாகும்
அஞ்சாண்டில் பேதியது ஆகாவிட்டால்
உற்பனமாய் லேகியந்தான் செய்வதனை
உச்சிதமாய் தானிருத்தி சொல்லக் கேளு
சொற் பெரிய அண்டத்தில் சாரம் விட்டு
சுகம் பெறவே பிசைந்து நன்றாய் ரவியில் வையே. 228

ரவியில் வைத்தால் மெழுகாகும் அதிலே கேளு
நேர்மையுடன் அண்டச்சுண்ணம் கூட்டித் தானும்
புவிதனிலே பதினோறா மாண்டு மட்டும்
புகழுடனே கொள்ளவே வேண்டு மப்பா
தவிக்கவே அஞ்சாண்டில் பேதியானால்
தன்மையுடன் புலத்தியனே முன்னே சொன்ன
தவமாகும் கற்ப லேகியந்தான் செய்து
தாரகத்தில் மனம் நாட்டி சொல்லக் கேளே. 229

சொல்லக்கேள் ஐந்தாண்டு முழுதுங் கொள்ள
சுகமுடன் பேதி நின்று தேகந்தானும்
விள்ளக் கேள் வஜ்ரம் போல் பளபளக்கும்
விருப்பமுடன் ஆறாண்டு முதல்கொண்டு
நன்றாய்க் கேள் பதினொன்று வரைக்குத் தானும்
நாட்டமுடன் முன்சொன்ன அண்ட மெழுகை
தொல்லுலகில் செய்து கொண்டு சொல்லக் கேளு
துரிதமுடன் கொண்டாலும் கொள்ளலாமே. 230

ஆமேதான் இல்லாவிட்டால் முன்னே சொன்ன
அப்பனே கற்ப லேகியம் கொண்டாலும்
ஓமேதான் கொள்ளலாம் ஆனால் கேளு
உத்தமனே இருவகை தனிலே தானும்
நாமேதான் சொன்ன அண்டச்சுண்ணம் கூட்டி
நலமுடனே உட்கொள்ள வேண்டு மப்பா
ஆமேதான் நான்காண்டு முதல்தான் கொண்டு
அப்பனே குளிகை சித்தி வாத சித்தி. 231

வாத சித்தி மறைவு சித்தி பண்ணு பண்ணு
அருளுடனே யீரஞ்சேர் தீக்ஷை தானும்
சாதகத்தால் முடிந்த பின்பு தானும்
சாற்றுகிறேன் அன்னம்போல் கொள்வதனை
வீதமுடன் நிறுத்தி விட்டு கற்பவரைதான்
விருப்பமுடன் சமாதி தனில் இருந்து பாரு
ஜோதியிந்தக் கற்பத்தைக் கொள்ளும் போது
சொல்லுகிறேன் சமாதி கட்டும் வகையைக் கேளே. 232

சமாதிக்கு பூமிக்குள்ளிருந்து செபம்

வகையென்ற பூமிக்கீழ் அறை யொன்றாகும்
அப்பனே பூமி மேல் அறை ரெண்டாகும்
தகமையுடன் தான் கட்டி சாந்து பூசி
தன்மையுடன் சாம்பிராணி புகையும் போட்டு

வகையுடனே முதலாண்டு வரைக்குத் தானும்
வண்மையுடன் மேல் அறையில் இரு நீயப்பா
அகமகிழ அதன் பின்பு பூமிக் கீழே
அப்பனே இருக்கின்ற அறையிற் செல்லு. 233

அறைதனிலே ரெண்டாண்டு முதல் தான் கொண்டு
அப்பனே பதினொன்று வரைக்கும் தானும்
உரைக்கிறேன் யிருந்தாலும் பகல்கள் தன்னில்
உத்தமனே மேலறையில் இருக்க வேண்டும்
அரைகிறேன் ராத்திரியில் சொல்லக்கேளு
அப்பனே கீழறையில் இருக்க வேண்டும்
சரசமுடன் இப்படியே நீ யிருந்து
சார்புடனே கற்பமதை சாதிப்பாயே. 234

துரிசு சுண்ணம்

சாதித்தால் சித்தியாம் அப்பா கேளு
சாற்றுவேன் இனிவாத முறைகள் தன்னை
ஆதி தள்ளி ரெண்டு தள்ளி நாலாமாண்டில்
அப்பனே துரிசிதனை நாத நீரில்
வீதமுடன் தானூட்டி ரவியில் வைத்து
விருப்பமுடன் தான் பார்க்க ஜாமம் நாலில்
ஜோதியாய் களிம்பற்று சுண்ணமாகும்
சொல்லுகிறேன் சூதத்தைக் கட்டும் சுண்ணந்தானே. 235

சூதத்தால் நவலோகம் தங்கமாகும்
சொல்லுவேன் புலத்தியனே இந்தக் கற்பம்
அண்டர் பிரான் தயவினால் மூன்றாண்டு உண்டால்
அறுபத்து நால் சரக்கு எல்லாம் சாகும்
நன்னிதமாய் கற்ப சாதனை யில்லாமல்
நவிலுவேன் கனகமது செய்வாரில்லை
பண்டான காரத்தைவிட முத்தி தானும்
பாரப்பா உலகுதனில் ஏது சொல்வேன். 236

நாகமும் விந்தும் ஏமமாகும்

சொல்லுகிறேன் புலத்தியனே நன்றாய்க் கேளு
சுகமான ஆலவிஷந் தன்னைத் தானும்
நல்குவேன் ஆண்டொன்று உண்டா லப்பா
நலங் கெட்டு நமனுமே யிறந்து போவான்
தொல்லுலகில் வாத வித்தை யாவதென்ன
சொல்லுவேன் அமுர்தத்தால் உண்டாம் பாரு
விள்ளுவேன் நாதமும் விந்துங் கூடி
உலகுதனிலே நவலோகம் பொன்னதாமே. 237

பொன்னதாம் அவ்வண்ணம் ஆகுஞ்சோதி
புலத்தியனே யாரறிவார் இந்த மார்க்கம்
அன்னவனின் செயல்படிக்கு மூலகற்பம்
ஆண்டு பத்தும் சமாதிதனில் இருந்து தேறு
உன்னிதமாய் அஞ்சாண்டு கடந்து தானால்
உத்தமனே ஆறாண்டு முதல்தான் கொண்டு
நன்றாக ஆதாரம் தன்னிலே தான்
நவிலுவேன் பஞ்சகர்த்தாள் ஜோதி தானே. 238

ரசவாத மெழுகு

ஜோதி கேள் பஞ்சகர்த்தாள் கண்ணில் காண்பார்
ஜெகத்தோர்கள் காணாத காரந் தன்னை
வீதமுடன் வாலைதனில் தயிலம் வாங்கி
விருப்பமுடன் தைலத்தில் பானம் விட்டு
சாத்துறோம் மிக்கவே குழப்பிக் கேளு
சாற்றுவேன் முன் அண்டச் சுண்ணம் தன்னை
சேதி யப்பா இதில் போட்டு சொல்லக் கேளு
துரிதமுடன் சரக்குகளில் சுருக்குப் போடே. 239

குண்டலியின் மார்க்கம்

சரக்குகளை ரவியிலிட்டு சுருக்கு ஏற்ற
சாற்றுகிறேன் வாதமிதில் கோடி யாகும்
திறமுடனே சொல்லி விட்டேன் புலத்தியனே ஐயா
தீர்க்கமுடன் இனிஞான வெற்றி சொல்வேன்
உறுதியுடன் புத்தியது மயங்காமற்றான்
உத்தமனே நாத விந்தினாலே தானும்
அறியப்பா சித்தியாஞ் சித்தனாவாய்
அப்பனே குண்டலியாம் வாசி கொண்டே. 240

முதலாண்டில் கற்பம் கொள்ளும்போது சாதனை வேண்டாமென்பது

வாசிகொண்டு இரண்டாண்டு முதல்தான் நோக்கி
வன்மையுடன் சாதனைகள் செய்து வா நீ
ஆசையுடன் முதலாண்டில் சொல்லக் கேளு
அணுவேனும் சாதனைகள் செய்ய வேண்டாம்
பாசமுடன் புலத்திய னேகருத்தை மாத்திரம்
பாரப்பா பார்தனிலே செலுத்தி இருப்பாய்
பூசையாம் அம்பரம் வெளியில் நின்று
புகழாக சுக்கிலத்தின் சுரோணிதத்தால் நில்லே. 241

சுக்கிலத்தின் சுரோணிதத்தால் சொல்லக் கேளு
சுகமான தனஞ்செயனை செயித்துத் தானும்
பக்குவமாய் காமனையும் நீராய் ஆக்கி
பகருகிறேன் மாதருட வினைக்குத் தானும்
லக்கமுடன் அமுரியஸ்திரந்தான் கொண்டு
பக்குவத்தால் தான் வெட்டி சொல்லக் கேளு
முக்கியமாய் விழி மடவார் ஆசை தன்னை
முழுதுமே தான் துலைத்து உறவின் முறையை. 242

உறவின் முறை சுற்றத்தார் உலகிலுள்ளோர்
உத்தமனே உற்றார் பெற்றார் பெண்டிர் ஆசை
திறமுடனே இவை அனைத்தும் அகலத் தள்ளி
தீர்க்கமுடன் கார சாரத்தைத் தானே
சரசமுடன் நான் சொன்ன பிரகாரந் தான்
சங்கை தள்ளி பாகமாய் கொண்டா லப்பா
சிரமமெல்லாம் முதலாண்டில் தானே யுண்டாம்
சிறப்புடனே அது முடிந்தால் சொல்லக் கேளு. 243

சொல்லக் கேள் தச தீக்ஷை முடிந்த தென்று
சுகமுடனே நினையப்பா முதலாம் தீக்ஷை
அல்லலற்று அது தானும் முடிந்துதானால்
அப்பனே தேகமது சித்தியாகி
தொல்லையாம் தீவினைகள் ஒழிந்து போகும்
சூக்ஷமாய் அந்தரங்க தீக்ஷை தன்னை
நல்லாய்க் கேள் காப்பு முதல் கடை வரைக்கும்
நவிலுகிறேன் தான் பார்த்தால் தீக்ஷை போக்கை. 244

தீக்ஷை யொன்றே முறை போக்கும் சகல சித்தும்
தீர்க்கமுடன் தானெய்தும் நாள்கள் தோறும்
ஆக்ஷேபனை அகற்றி காய கற்பம்
அனுசரித்தால் நீடுழி வாழலாகும்
கோட்பாடில்லாமல் ஆண்டொன்றில் தான்
கூறுகிறேன் அமுரியால் தேகந் தானும்
சாட்சியாய் சுத்தியாய் பிரகாசிக்கும்
சந்திரனும் சூரியனும் என்னலாமே. 245

முப்பு சுருக்கம்

என்னலாம் புலத்தியனே யின்னங் கேளு
இதுதள்ளி இரண்டாண்டு முதல் தான் கொண்டு
அன்னவனின் செயல்படிக்கு கற்பம் சித்தி
அப்பனே முதல் தீக்ஷை முடிந்து தானால்

நன்றான பத்தரை மாத்துத் தங்கம் போலே
நவிலுகிறேன் தேகமடா மூன்றாமாண்டில்
பண்டான புளியினிலே பாணிதான் பட்டால்
பாரப்பா சொல்லுகிறேன் பூர்க்கும் முப்பே. 246

முப்பான முப்புவும் இதுதான் மைந்தா
உலகத்தோர் இதைவிட்டு பூநீர் வாரி
தப்பரையாய் பனியில் வைத்தால் பூர்க்குமோ சொல்
தண்மையுடன் பதினோறு ஆண்டிற்குள்தானும்
அப்பான கார சாரம் மாறிப் போகும்
அய்யனே வஜ்ஜிரமாய் தேகமாகும்
இப்படியே நடக்கின்ற மார்க்கந் தன்னை
இயம்புகிறேன் உலகுதனில் மவுனமாய் நில். 247

சட்டை கழலும் மார்க்கம்

மவுனமாய் நின்று கற்பம் சாதித்தாக்கால்
மகிழ்ச்சியுடன் சொல்லுகிறேன் முதலா மாண்டில்
தவத்தாலே யொரு சட்டை யுரியும் பாரு
தன்மையுடன் யிரண்டாண்டில் ஒன்று போகும்
அவையடக்க மூன்றி லொன்று கழண்டு போனால்
அப்பனே மூன்று சட்டை கழன்று போனால்
இவனுக்கு வயது சொல்ல முடியா தென்று
என் குருவும் எந்தனுக்கு உரைத்தார் தானே. 248

எட்டு ரெண்டு அறியவும்

உரைத்ததால் புலத்தியனே உனக்குச் சொன்னேன்
உண்மையுடன் எட்டு ரெண்டு மென்ற வார்த்தை
அரைகிறேன் தசதீக்ஷை யாகு மப்பா
அப்பனே யிதை யறியார்க் கென்ன வாய்க்கும்
உரைக்கிறேன் இந்த எட்டு ரெண்டு தன்னை
உத்தமனே நன்றாக யறிந்தா யானால்
அரைகிறேன் புலத்தியனே என்னைப் போலே
அந்தமாங் கோடியுகம் வாழலாமே. 249

வாழலாம் நீ யிந்தக் கற்பங் கொண்டால்
அரைகிறேன் கனகம் உன்னுள் விளையும் பாரு
வீழவே மாய்கைதனில் வேண்டா மென்று
விருப்பமுடன் இந்தப்படி எனக்குத் தானும்
வாழவே கோடியுகம் சடத்தி லப்பா
வாதமது ஆகு மென்று அரனுஞ் சொன்னார்
கோளதுவே வாராது நாத கற்பம்
கொண்டவர்கள் பரனெனவே பரனுஞ் சொன்னார். 250

சொன்னதால்யினி யோக ஜெபந்தான் சொல்வேன்
சுகமான வேதாந்த கற்பந்தன்னை
நன்னிதமாய் துரியத்து அதீதந் தன்னில்
நவிலுவேன் அறியலாம் புலத்தியனே அய்யா
சொன்ன இந்த யோக ஜெபம் ஆண்டுபோனால்
சுகமாக த்தான் வாய்க்கும் அப்பா கேளு
வன்னமுள்ள மூலமணி பூரகந்தான்
அப்பனே அனாகதமாம் விசுத்தியோடே. 251

விசுத்தி துறை ஆக்கினையின் சுடருந் தாண்டி
விளம்புவேன் மேல் வரையில் தாண்டி யப்பால்
அசுவமதாய் வியானனையும் பூட்டி யப்பா
அதில் கூர்மனென்றும் ஜீனிநன்றாய் மாட்டி
பசுவான தனஞ்செயனை அங்கு மடியாக்கி
பகருவேன் வாலைபதந் தொழுது தானும்
விசுவாக வாசிதனில் ஏறியப்பா
விருப்பமுடன் மதியமுர்தம் உண்ணு உண்ணே. 252

உண்டாலே யிந்தப்படி யோராண்டில் தான்
உத்தமனே தூல உடல் சூக்ஷமாகும்
நன்றான மேனி துய்ய நிறம தாகும்
நவிலுவேன் ஓராண்டில் நோய்கள் எய்தும்
சென்றாட்டம் சூடு கனல் தாப சோபம்
சொல்லுகிறேன் மெத்தமாம் காமந்தள்ளு
உண்டாகும் உறக்கமதை மாற்று மாற்று
உத்தமனே குமட்டியே கசக்கும் பாரு. 253

குமட்டி கசக்கின்றதுவே கற்கண்டாகும்
கூறுவேன் இக் கற்பம் சொற்ப மென்றும்
அசடாக எண்ணாமல் ஊணிக் கொண்டால்
அப்பனே வினைகள் தனை போக்கு மப்பா
சுமை யெனவே நினையாமல் பதனமாய் வாழ
சொல்லுவேன் மூவாண்டில் மூன்று மாதம்
தம்தேகம் தம தல்ல பேதி யெய்தும்
தண்மையுடன் நாலு போய் ஐந்திற் கேளே. 254

அஞ்சிலும் அடங்காது பேதி யப்பா
அரனுடன் நஞ்சுக்கு மேலாம் நஞ்சு
துஞ்சியே சொல்லுகிறேன் திங்கள் ஆறில்
துரிதமுடன் அரோசிகமும் சத்தி யெய்தும்
பஞ்சுபோல் ஆகுமப்பா திங்கள் ஏழில்
பகருவேன் பெரும்பாடு அதுபோல் தானும்
அஞ்சுவார் உதிரமது இறங்கு மப்பா
அறைகிறேன் எட்டான திங்கள் கேளே. 255

திங்கள் தனில் சீதளமும் காணு மப்பா
சொல்லுகிறேன் ஒன்பதாந் திங்கள் தன்னில்
அங்கமது வாடுமப்பா பேதியோடு
அப்பனே சீதசுரம் வாந்தி யெய்தி
சங்கட்ட நோய்களுட வேகங் காணும்
சாற்றுவேன் உருமாறிப் போகு மப்பா
பங்கமது வாராது நிஜம தாகும்
பகருவேன் அச்சமில்லை பயப்படாதே. 256

பயமகற்றி சுவாசத்தால் சொல்லக் கேளு
பகருவேன் நவவாசல் தன்னைக் கட்டி
தயவுடனே கம்பத்தின் நுனியி லேறி
தன்மையுடன் பரஞ்சுடரை போற்றித் தானும்
பக்குவமாய் கருவிகளை சுட்டறுத்து
மகா பஞ்சாக்ஷரமாம் பிரணவத்தை
வலவ நடு மூடிவிடு புலத்தியனே அப்பா
வரைகிறேன் மதியமுர்தம் அமுரியாமே. 257

சருகு தைலம்

அமுரியது சாரையாம் புளியைக் கேளு
அப்பனே மலரொத்தும் சவ்வாதாகும்
சமுதமாய்ப் புழுகாகும் உரமுமாகும்
சாற்றினேன் பேர்மாத்திரம் அறிந்து கொண்டு
அமுரியாம் கற்ப சாதனையின் போக்கு
அப்பனே மூன்றாண்டு சென்ற பின்பு
சமுதாவில் சருகெடுத்து உலர்த்தித் தானும்
சாற்றுவேன் தயிலமது வாங்கிடாயே. 258

வாங்கியே கெந்தகத்தைச் சூரணித்து
வைக்கவே தயிலமதில் குழைத்து உண்டால் தேகம்
சாங்கமாய் சூரியனின் ஒளிபோல் வீசும்
சார்ந்துபார் ஆனந்தம் கண்ணில் காட்டும்
பாங்கிந்த தயிலத்தில் சகல சித்தும்
பகருவேன் தானாகும் கெண்டாந் தன்னில்
தாங்கியே யூதி விடு வாசியாலே
தன்னில் அதுவே தாண்டியே பாயு மப்பா. 259

பாய்ந்தாலோ வொளி பிரகாசத்தின்
பரனுடைய தெரிசனமாம் அறியா வித்தை
ஆய்ந்துமே கருவாளி யானாலப்பா
அன்புடனே மனமதுவும் ஒருமித்தே தான்

சார்ந்துமே வைராக்யத்துடனே தானும்
சாதிக்க சிலம் பொலியின் ஓசை காணும்
கூர்ந்துமே பார்த்தாலோ பராபரந் தான்
குறிப்புடனே காட்சியது கொடுக்கும் பாரு. 260

இருபத் தோராயிரத்து அறுநூறின் குறிப்பு

பாரப்பா இருபத் தோராயிரத்து அறுநூறு என்ற
பாழாகும் சுவாச மெல்லாம் மூலம் தன்னில்
நேரப்பா இருத்தி ஓங்காரம் நாடி
நிலைவாசி விடுவதும் வாங்கும் மார்க்கம்
சாரப்பா உள்ளே தான் சாதித்துப் பார்
சத்தி சிவரூப மங்கே காணுஞ் சொன்னேன்
நேரப்பா இதுவேதான் பரமதாகும்
ஜெகந்தனிலே வெள்ளாட்டி பயல்களாமே. 261

எல்லோரும் இன்னூலைக் கண்டா லப்பா
இகழ்ச்சி செய்வார் குருடரப்பா இதன் கருத்தை
எள்ளளவுங் காணவே மாட்டார் மாட்டார்
இன்னூலைச் சிவ யோகி கண்டால் கேளு
சொல்லுவேன் உயிர் போல பார்ப்பா னப்பா
சுகம் பெறவே பழுத்தன்றோ வருகா வண்ணம்
தொல்லலற தசதீக்ஷை மார்க்கந் தன்னை
சொல்லுவேன் உலகுதன்னில் பழிப்பாராகில். 262

பழித்தாலோ ஜீவனது இருக்கு மட்டும்
பாரப்பா வினைகள் வந்து சூழ்ந்து காணும்
அழிந்து எழுநரகில் விழுவா ரப்பா
அன்பனே உலகத்தில் ஆசை தன்னில்
உழன்றிடுவார்க் கெய்தாது ஒன்றுமப்பா
உண்மையுட நகை நகைத்து மினு மினுக்கி
விழி சிமிட்டி மோகமது பண்ணுகின்ற
விழி மடவார் மாயத்தில் விழுந்தாராகில். 263

வேதாந்திக்கு சாக்ஷி

விழுந்துமே மிகவேதான் திரிந்தாராகில்
விளம்புவேன் ஒன்றுதான் வராமல் தான்
ஒழிந்துமே வியாதியினில் சவமாய்ப் போவார்
உத்தமனே அனித்தியமாம் உலக வாழ்க்கை
முழுதுமே நம்பாதே சொல்லிவிட்டேன்
முக்கியமா யின்னூலில் சொன்ன வார்த்தை
அழும்பெனவே யென்றும் நீ எண்ண வேண்டாம்
அப்பனே வேத மென்றே விரும்பிப் பாரே. 264

கார சாரத்தின் அளவு

விரும்பிப்பார் இந்த நூல் தனிலே தானும்
விளம்பி நின்ற பாடல்களும் எந்த விதமாய்
இருந்தாலும் பாராதே கருத்தைப் பாரு
எந்நாளும் இருப்பதற்கு வழிதான் சொல்லும்
உறுதியுடன் இனிமுப்பு முடிந்தால் சொல்வேன்
உத்தமனே குரு மூன்றாண்டும் கடந்த பின்பு
அருந்தவத்தால் வந்ததொரு மதி நாலுக்கு
அப்பனே வொன்றுதான் காரஞ் சேரு. 265

முப்பூ (ஆதி-அந்தம் சேர்ந்தது)

சேர்த்து தான் கரைத்து மூன்று நாள்தான்
சென்ற பின்பு தெளி விறுத்தி காய்ச்சி யப்பா
பார்த்துமே கொஞ்ச ஜலம் கொண்டிறக்கி
பகருகிறேன் பீங்கானில் வழித்து வைத்து
நேர்த்தியாய் ஒருவாரம் ரவியில் வைத்தால்
நீறாமற் காயுமடா காயக் காய
பார்த்துமே கத்தி கொண்டு கீறி விட்டால்
பகருகிறேன் கானலிலே பூத்துக் காயுமே. 266

காய்ந்துமே முப்புவாம் இதற்குத் தானும்
கனிவுடனே பேர் மாத்திரம் சொல்லக் கேளு
ஆய்ந்துமே அட்டுப்பு என்று தானும்
அப்பனே ஒட்டுப்பு என்று தானும்
கூர்ந்து பார் கம்பி உப்பு என்று தானும்
கூறுகிறேன் பாறையுப்பு என்று தானும்
சேர்ந்துமே சித்தர்களும் கூடித் தானும்
சிறப்புடனே பேர் மாத்திரம் வைத்தார் தானே. 267

உப்புச் சுண்ணம்

வைத்து அந்த உப்பு சந்திரனொளிக்கு மேலாம்
அப்பனே ஆதி அந்த உப்புவுக்கு
பக்தியுடன் சமன் வீரம் கூட்டித் தானும்
பகருகிறேன் அமுர்தத்தால் அரைத்துத் தானும்
புத்தியுடன் வில்லைதட்டிக் காயவைத்து
புகழாக அகலில் வைத்து மூடித்தானும்
சித்திபெறச் சீலை மண் செய்துலர்த்தி
செப்புகிறேன் புடம் போடச் சுண்ணமாகும். 268

சுண்ணமாம் இது வல்லோ முப்புச் சுண்ணம்
சுகமான இச்சுண்ணம் விட்டுத்தானும்
உன்னிதமாய் முப்புவுந் தேடித் தேடி
உலகமதில் அலைந்தலைந் துயிர் துறந்தோர் தானும்

உண்மையாய் கோடான கோடி யப்பா
உத்தமனே முப்புவின் சுண்ணத்தாலே
அண்டருட தயவினால் தொந்தங் கேளு
அப்பனே முப்பு யிடை சூதஞ் சேரே. 269

ரச சுண்ணம்

சேர்த்துமே அமுர்தமது விட்டு ஆட்டி
சிறப்பாக வில்லை செய்து காய்ந்த பின்பு
பார்த்துமே அகலில் வைத்து மேலும் மூடி
பகருகிறேன் சீலை மண் செய்து தானும்
நேர்த்தியாய் முழப்புடத்தில் போடச் சுண்ணம்
நினைவாக சுன்னத்தில் கழஞ்சி தூக்கி
பூர்த்தியாய் பானத்தால் மத்தித்தப்பா
புகழாக துரிசிக்குப் பூசிடாயே. 270

துருசு சுண்ணம்

பூசியே யதற்கு மேல் காரத்தாலே
புக்லுகிறேன் கவசமது செய்து தானும்
ஆசித்து மூன்று மண் சீலை செய்து
அப்பனே புடம் போட துரிசுச் சுண்ணம்
வாசித்த சுண்ணத்தால் சரக் கெல்லாந்தான்
அன்பனே சுண்ணமாஞ் சுண்ணத்தாலே
வீசினால் தொந்தமது கோடி கோடி
விளம்புகிறேன் துறை கோடி கோடிதானே. 271

கோடி யென்றால் எத்தனையோ கோடி காணும்
கருதுகிறேன் அதிலந்தப் பரிச வேதை
ஆடினால் அதைத் தொட்டுக் கோடா கோடி
அப்பனே புலத்தியனே யாடும் ஆட்டை
பாடிவிட்டேன் ரெண்டாயிரத்தில் பாரு
பார்க்க வென்றால் அதைக் குறுக்கி பாரீர் காப்பு
சூடியே சொன்ன சாஸ்திரங்கள் கேளு
சுகமான சகல கலைக்கியான மொன்றே. 272

ஒன்றான சௌமிய சாகரந்தா னொன்று
உத்தமனே பெருநூல் பூரணந்தா னொன்று
நன்றானயோக பூரணந்தா னொன்று
நாட்டினேன் பூரண சூத்திரந்தா னொன்று
பண்டான காவியத்தில் நாலுஞ் சொன்னேன்
பாரப்பா ஐயாயிர மாயிரமும் சொன்னேன்
அண்டருட தயவினால் எண்ணூறு ஒன்று
அப்பனே இவ்வளவு குறுக்கித் தானே. 273

குறுக்கியே பனிரெண் டாயிரத்தைத் தானும்
குறிப்புடனே முன்னமே யீராறு காப்பும்
சுருக்கமாய் பாடி வைத்தேன் அதுகள் தன்னில்
சொன்னதொரு வித்தையெல்லாம் யின்னூல் தன்னில்
உருக்கமுடன் முன் சொன்ன முப்பூவாலே
உத்தமனே ஆடிடுவாய் தொழில்க ளெல்லாம்
திறமுடனே பனிரெண்டு காப்புதானும்
தீர்க்கமுடன் கிடைக்காவிட்டால் கிடைத்த மட்டும்பாரே.274

கிடைத்த மட்டும் அதில் சொன்ன தொழில்கள் பார்த்தால்
கோடான கோடி தொந்தம் ஆடலாகும்
அடக்கியப்பா அதிலதிலே முப்பு மார்க்கம்
அன்பனே மறைத்து வைத்தேன் ஆகையாலே
படபடப் பாகவே யின்னூல் தன்னில்
பதறிவிட்டேன் பாவமென்றே யெண்ணி யானும்
கிடைப்பதும் இன்னூல் தான் அருமையாகும்
கிடைத்தாலோ புலத்தியனே சித்தனாவான் பாரே. 275

வாசி யோகம் ராஜாங்க யோகம்

சித்தனா யாவதற்கு கண்ட மதனில்
சிறப்புடனே வங் கென்று வினாடி யெட்டு
புத்தியுடன் ஊதிவிட்டு மூலம்விட்டு
புகழாக மேல் வரையில் வாசி யோட்டி
புத்தியுடன் சிங் கென்று வினாடி யெட்டு
பாரப்பா ஊத நவத்துவார மெல்லாம்
கொத்தோடே தானடங்கும் சுழினைதானும்
கூறு மூலாக்கினைகள் தன்னில் கேளுகேளே. 276

கேளப்பா கணைகளொரு வழியே பாயும்
கேண்மையுடன் இப்படியே தேறு தேறு
கேளப்பா நாத விந்து ஊறி நின்ற
கெடியான காயத்தில் சிவமுஞ் சத்தி
வாழ்ந்திருப்பார் இக் கற்பம் கொண்டோர்க்கு
அருளுகிறேன் சாயுச்ய பதவி யெய்தும்
கேளப்பா ஆண்டிலொரு விந்தினுமே
கிருபையுடன் ஒத்தாளில் அமுதங் கொண்டே. 277

கொண்டால் கேள் ஜெகத் குருவு மிவனே யாவான்
கூறுகிறேன் இந்த பொக்கிஷத்தைத் தானும்
விண்டுமே வெளிவிட்டால் சொல்லக் கேளு
விளம்பினேன் சாபமது என்ன வென்றால்

அண்டயிடி விழுந்து தலை தெறித்துப் போகும்
அப்பனே முதலாண்டில் காயந் தன்னில்
புண்டுபோல் அநேக கோடி நோய்கள் தானும்
புழுப்போலே துளைத்துமே கனலாய் வீசும். 278

வீசுவதும் போதாமல் குறடு கொண்டு
வெடுக்கெனவே பிடுங்குவது போலாம் தேகம்
நீச சொறி குட்டம் போல் காணும் பாரு
நீயப்பா அஞ்சாமல் அதையே பாரு
பாசமது ஞானமதை கண்டால் போலும்
பானுகண்ட பனிபோலும் பறக்கும் நோய்கள்
ஆசையுடன் முன் ஜெனன பலத்தினாலே
அப்பனே இக்கற்பம் கிடைக்க வேணும். 279

கிடைத்தாலே மனதுதான் ஒருமை பண்ணி
கிருபையுடன் ஓராண்டு அமுரியுண்டு
உடலதுவும் புலத்தியனே வேற் கூறான்னால்
உண்மையுடன் தசதீக்ஷை முடியும் பாரு
ஜெடலமது சித்தியாம் யோகவானாம்
சிறப்புடனே மூவாண்டு கழிந்துதானால்
திடமுடனே யுகமது; யிறங்கும் பாரு
தீர்க்கமுடன் உடலுக்கு அழிவோ யில்லை. 280

அழிவில்லை ஜடம் வஜ்ஜிர காயமாகும்
அப்பனே சித்தர்களில் இவனொருத்தன்
அழிவில்லை சாகாமல் இருக்கலாகும்
அப்பனே வினையில்லை தீக்ஷையாலே
அழிவில்லை சாவதும் வாராதப்பா
அப்பனே கார சாரத்தினாலே
சுழலுகின்ற சரக்கு அறுபத்தி நாலும்
சொல்லுகிறேன் நவலோகம் இன்னங் கேளே. 281

இன்னங்கேள் நவரத்தின முதலாயுள்ள
அனேககோடி இனங்களெல்லாம் வெண்ணீறாகும்
நன்னிதமாய் செந்தூரம் மெழுகு கூட
நவிலுகிறேன் காரசாரந் தன்னாலாகும்
பன்னதொரு சித்தருட ஆட்ட மெல்லாம்
பாரப்பா காரசார ஆட்டமாகும்
வின்னமாய் நூல்களிலே மறைத்த தெல்லாம்
விளம்பினேன் புலத்தியனே வெளியாய்த் தானே. 282

வெளியான பானத்தை யுண்பீர் தானும்
விருப்பமுடன் உலகுதனில் உண்டோ வப்பா
வெளியான காரத்தை யுண்ண உண்ண
விளம்புகிறேன் முப்புரத்தைச் சுட்டுப் போடும்

வெளியாகச் சொல்லுகிறேன் காலனில்லை
விள்ளுகிறேன் ஆதியந்த அமுர்தத்திற்கு
வெளியான மதனப்பால் என்றும் பேரு
வீரமுள்ள அலகை யென்றும் பேரேயாமே. 283

என்றுமே யமுரி யுண்டால் அநேக நோய்கள்
என் மகனே புலத்தியனே வீரிட்டோடும்
அண்டருட தயவினால் இக்கற்பத்தை
அன்பனே உனக்காக வெளியில் விட்டேன்
நன்றான வாலையாம் பருவம் தன்னில்
நாட்டினால் கற்பமது வசமதாகும்
பண்டான வயது சென்றால் வசமாகாது
பகருகிறேன் அண்டமெல்லாம் சுத்திப்பாரே. 284

சொரூப குளிகை

பார்க்கவே குளிகை சொல்வேன் பின்னாலப்பா
பாரினிலே திராவகத்தின் போக்கைக் கேளு
நேர்த்தியாய் நவச்சாரம் மேனி பூனீர்
நெடுங் கம்பி உப்போடு வெங்காரந் தான்
சீர்படிகம் பாறையுடன் யுருவி பண்ணை
சிறப்பான பச்சைக் கற்பூரத்தோடு
ஓர்பத்து உப்பதுவும் வகைக்குத் தானும்
உத்தமனே சொல்லுகிறேன் பலந்தான் அஞ்சே. 285

அஞ்சாமல் சொல்லுகிறேன் அமுர்தந் தானும்
அப்பனே நாலுபத்துப் படியில் தானும்
அஞ்சாமல் காரத்தை சூரணந்தான் செய்து
அன்பனே படியதுவும் அதிலே கொட்டி
அஞ்சாமல் கரைத்துமே சொல்லக் கேளு
அப்பனே மூன்று நாள் வைத்துத் தானும்
அஞ்சாமல் தெளிவிறுத்துச் சாலில் வார்த்து
அரிதாரம் வீரமுடன் கௌரி வெள்ளையாமே. 286

வெள்ளையுடன் பூரம் லிங்கம் சிலையினோடு
வெண்மை சிங்கி ரசம் கெந்தி துரிசி யோடே
விள்ளுகிறேன் வகைக்கு பலமெடுத்து ஒன்றாய்
விருப்பமுடன் சீலைதன்னில் கிளியா யப்பா
நல்லாய் கேள் பொட்டணமாய் கட்டிதானும்
நவிலுகிறேன் முன்சாலில் தொங்க விட்டு
சள்ளையில்லா சாலுதனை அடுப்பில் வைத்து
சாற்றுகிறேன் கமலாக்கினியாய் வன்னி போடே. 287

வன்னியிட்டு புகைய துவும் வாராமல் முன்
வருகின்ற நுரையகற்றி பொங்கா வண்ணம்
நன்னிதமாய் சரக்கதுவும் கரையாமற்றான்
நலமுடனே கணக்கு சென்று தீயை யாத்தி
உண்மையுடன் இறக்கியே கனல் மட்டிட்டால்
உறுதியுடன் எடுத்துப் பார் சரக்கெல்லாந் தான்
வண்மையுடன் கட்டி யிருக்கும் பாரு
வகையுடனே யதுகளெல்லாம் பீங்கான் தன்னில். 288

பீங்கானில் இட்டுமே ரவியில் வைத்து
பிலமாக காய்ந்த பின்பு சரக்கு தன்னை
ஆங்கானும் சூரணமாய் செய்து தானும்
அப்பனே முன்பத்து உப்பு தன்னை
சாங்கமாய் சூரணித்து சொல்லக் கேளு
சாற்றுகிறேன் இருவகையும் தொந்தம் பண்ணி
பாங்கு பெற வாலை குடம் தன்னிலிட்டு
பகருகிறேன் செம்பாலே செய்த வாலையாமே. 289

செய்ததொரு வாலை குடம் மேலே மூடி
செப்புகிறேன் உளுந்துமா கொண்டு வந்து
உய்தமுடன் வெண் கருவால் அரைத்துத் தானும்
உத்தமனே சீலைதனில் தடவி நீயும்
அய்யனே புலத்தியனே கவசம் செய்து
அன்புடனே வாலுகையை அடுப்பிலேத்தி
ஒய்யார மாகவே வன்னி மூட்டி
உறுதியுடன் எரித்திடுவாய் உகந்து கேளு. 290

உகந்துமே வாலையதின் வாயில் தானும்
உத்தமனே குப்பிதனை சாய்த்து வைத்தால்
ஜெகமகிழ திராவகந்தான் இறங்கும் பாரு
செப்புகிறேன் ரத்தவர்ணம் போலிருக்கும்
அகமகிழ கமலாக்கினியால் எரிக்க
அப்பனே தசனாழி சுருக்கு ஏத்து
புகலுகிறேன் சூதமது கட்டிப் போகும்
புகழான காரத்தில் சாரம் விட்டே. 291

விட்டரைத்து சூதமணி தனக்குத் தானும்
விருப்பமுடன் கவசமது செய்து அப்பா
இட்ட புடம் ஓரெருவில் முதல் புடந்தான்
இன்பமுடன் மறுபடியும் இரண்டு தன்னில்
சட்டமாய் பிறகு மூன்று எருவிலப்பா
சாற்றுகிறேன் மறுபடியும் நாலுவாகும்
திட்டமுடன் பிறகு ஐந்தெருவி லப்பா
தீரும் இந்தப்படியே தான் காரத்தாலே. 292

காரத்தால் கவசமது செய்து தானும்
காட்டுகிறேன் புடத்திற்கு புடந்தான் மைந்தா
தீரமுடன் எருவேத்தி புடந்தான் ஐந்து
தீர்த்தாலோ குளிகைக்கு பஞ்ச தீக்ஷை
வீரமுடன் செய்ததினால் இதன் வேகத்தை
விளம்ப அது என்ன சொல்வேன் வாசி தன்னை
தீரமுடன் தானிழுத்து குளிகை தன்னை
தீர்க்கமுடன் வாயிலிட்டால் ஜடத்தைத் தூக்கும். 293

தூக்குமிந்த முறை பதினெண் பேர் கருத்துத் தானும்
துரிதமுடன் பரீட்சித்தேன் புலத்தியனே அய்யா
நோக்கி இந்த திராவகத்தால் நவலோகங்கள்
நொடிக்கு முன்னே தான் பழுக்கும் நவ ரத்தினங்கள்
வாக்கு மனம் கொள்ளாத சத்துமாகும்
வாய்த்த தொரு திராவகத்தை பதனம் பண்ணு
தாக்கினால் சவங்கள்கூட எழுந்திருக்கும்
தன்மையற்று ஜெடஞ் சாத்யமானால் தானே. 294

ஆனால் கூடெழுந்திருக்கும் யிதுதானன்றி
அப்பனே உலகத்தில் சித்து முண்டோ
மாணாகேள் தாம்பரந்தான் பத்துக் கொன்று
மாட்டினால் தைலமது மாத்துப் பத்தாம்
வீணே தான் திரியாமல் இந்த வண்ணம்
இத்தயிலம் நவலோகம் நன்னிலமாய்
ஆமேதான் மாத்து பத்தரையே காணும்
அன்பனே நீ இந்தப்படியே பாரே. 295

சொரூப குளிகை

பாரப்பா சொல்லுகிறேன் இன்னங் கேளு
வாலை ரசம் ஓட்டில். விட்டு அடுப்பில் வைத்து
நேரப்பா ஒரு மரத்தின் கொம்பால் தீ தான்
நிச்சயமாய் போட்டுமே கடிகை வைத்து
பாரப்பா திராவகந்தான் சுருக்கு ஏத்த
பகருகிறேன் நன்றாகக் கட்டிப் போகும்
நேரப்பா காரமென்ற கவசந் தானும்
நிச்சயமாய் சொல்லுகிறேன் அஞ்சுஞ் சுட்டே. 296

சுட்டியே முன்போலே புடந்தான் அஞ்சு
சொல்லுகிறேன் போட்டெடுக்க ஜெடத்தைத் தூக்கும்
நாட்டமுடன் இப்படியே புடந்தனக்கு
நவிலுகிறேன் ஒவ்வொன்றாய் விராட்டி யேத்தி

சூட்டிடுவாய் நூறுதரம் சாரணைதான் தீர்த்து
சுகமாக வங்கமது சேருருக்கி
போட்டிடவேயக் குளிகை நீர்தான் வாங்கும்
புகலுகிறேன் அந்த வங்கம் பத்து மாத்தாம். 297

மாற்றான இக் குளிகை பாலிலிட்டால்
மளமளென நீரெல்லாம் குடித்துப் போடும்
போற்றியே இதை நாவில் அடக்கம் பண்ணி
புகழாக அங் என்று வாசி தன்னை
பார்த்திபனே தானிழுத்து சாதித்தாக் கால்
பகருகிறேன் ஒரு நொடியில் அண்ட மெல்லாம்
காத்து போல் தான் சுற்றி வரலாம் மைந்தா
காணப்பா இது சொரூப குளிகைதானே. 298

தானென்ற இரும்பதனை நன்றாய்க் காய்ச்சி
தப்பாமல் திராவகத்தில் அணுவு குத்த
பானென்ற செம்பாகும் குடவன் தன்னில்
பாச்சடா நூத்துக்கு ஒன்று தானும்
கோனென்ற வங்கத்தில் நூத்துக் கொன்று
கொடுத்துப் பார் வயது ஈரஞ்சாம் பாரு
தேனென்ற திராவகத்தில் குன்றி மாத்திரம்
அமுரியில் தான் ஊட்டி இரண்டு வேளைதானே. 299

இரு வேளை மண்டலந்தான் கொண்டா யானால்
இன்பமுடன் நரை திரைகள் அத்துப் போகும்
நரம்புகளும் இறுகி நன்றாய்க் கட்டும் கட்டும்
நவிலுகிறேன் திராவகத்தால் ஆகும் வேதை
கரையில்லை துறையில்லை தொந்தம் கோடி
கருணையுடன் நாலாண்டில் குளிகை தன்னை
உறுதியுடன் முடித்துக் கொண்டு சொல்லக் கேளு
உத்தமனே நினைத்த இடம்நீ போய்ப் பாரே. 300

பஞ்ச குண தீக்ஷை போதுமென்பது

பாரப்பா தசதீக்ஷை முடித்தால் நன்று
பாலகனே யில்லா விட்டால் சொல்லக் கேளு
நேரப்பா பஞ்ச கண தீக்ஷை போதும்
நிச்சயமாய் இந்த கற்பம் கொள்ளும் போது
சாரப்பா பத்தியந்தான் சொல்லக் கேளு
சாற்றுகிறேன் ஆவின் பால் அன்னமாகும்
பேரான காரமதில் சாரம் விட்டு
புலத்தியனே கரைத்துமே தெளிந்த பின்பே. 301

தெளிந்த நீர் தனிலே சரக்கை யெல்லாம்
திறமுடனே தோளேந்திரம் கட்டித்தானும்
வெளிதனிலே நீ நாழி யெரித்திட்டாக்கால்
விதமுடனே கட்டியே சித்தி யாகும்
வெளியாக அந்தரங்க சத்தி பூஜை
விளம்பினேன் உனக்கு அப்பா உல்கு தன்னில்
தெளிந்து பார் ஒருவருந்தான் காணார் காணார்
தீர்க்கமுடன் தச வருஷம் நீ தானப்பா. 302

அப்பனே கற்பத்தை சாதிப்பாய் நீ
அரைகிறேன் அங்கமதில் காரசாரம்
தப்பிதங்கள் இல்லாமல் கண்டாலப்பா
சாற்றுகிறேன் இயமன் இறந்து போவான் பாரு
ஒப்பாக சண்டனையும் செயிப்பதற்கு
உத்தமனே அமுரிதனை யன்றித்தானும்
செப்புதற்கு அகிலமதில் வேறொன்று உண்டோ
சித்தர்களும் உரைத்த விதி முப்புத் தானே. 303

முப்பூவால் வைத்த நூல்கள் எல்லாம்
மோசமது வராது இன்ன விதமென்று
அப்பூவை அறியாமல் மாந்த ரெல்லாம்
அப்பனே புலத்தியனே மாண்டு போனார்
முப்புவே சத்தி நாத விந்தாம்
உரைக்கிறேன் காரசார மதுவே யாகும்
ஒப்பாக மேல் கீழுமா யிருக்கும்
உண்மைதனை சித்தரெல்லாம் மறைத்து உரைத்தார். 304

மறைத்து வைத்த செய்திதனை பிரித்து உனக்கு
மன மகிழ்ந்து சொல்லுகிறேன் இன்னங்கேளு
துரியத்தை தான் கடந்து துரியா தீதம்
துரிதமுடன் தான் ஏறி அங்கென்றுந் தான்
உரைக்கிறேன் வாசிதனை ரேசித்து அப்பா
உண்மையுடன் நாசிதனில் வாசிதானும்
பரவியே நடவாமல் ஊதி யப்பா
பகருகிறேன் மதி கொண்டு தானும். 305

கொண்டுமே மூன்றாண்டில் அரன் பாதத்தை
குறிப்புடனே தெரிசித்து வாசி தன்னை
நன்றாக சுழிமுனையில் சொல்லக் கேளு
நாட்டமுடன் கும்பித்து ரேசித்தப்பா
அண்டருட தயவினால் பூரகத்தில்
அன்பமனே விளக்கேற்றி தெரிசித்தப்பா
சண்டனையும் ஜெயிப்பதற்கு முதலாண்டில் தான்
சார்ந்திருந்த கற்பத்தை சர்திப்பாயே. 306

சாதித்து திங்கள் ஐந்து சென்றாலப்பா
சாற்றுகிறேன் அரவமது தீண்டினாக்கால்
ஆதியாய் அதுக்கு உன் விஷந்தான் ஏறி
அன்பனே மாண்டு போம் மேலும் கேளு
சாதித்து வரும்போது உந்தன் சாயல்
சாற்றுகிறேன் அரவத்தின் மேல் பட்டாக்கால்
தீதான சர்ப்பமது சாகுஞ் சொன்னேன்
திருவான உன் நிழல் தான் முதலாண்டப்பா. 307

முதலாண்டில் மாத்திரந்தான் இருக்கும் ஞாயம்
முக்கியமாய் இரண்டு முதல் தூரப் போகும்
விதமுடனே ஐந்து திங்கள் போன பின்பு
விளம்புகிறேன் கார்கோடன் ஆகிலுந்தான்
முதலாண்டில் தான் கடித்தால் அதுதான் சாகும்
முக்கியமாய் இக்கற்பம் சாதித்து அப்பால்
விதமுடனே நாபி நஞ்சு பாஷாணங்கள்
விளம்புகிறேன் உண்டாலும் ஒன்றுமில்லை. 308

ஒன்றுமில்லை சங்கடங்கள் வாராதப்பா
உறுதியுடன் எந்த விதமாகிலுந் தான்
நன்றாக ஓர் தீகைஷ பெற்ற பின்பு
நான் சொன்னபடி யெல்லாம் சாட்சி பாரு
விண்டதொரு என் மொழியை உலகந் தன்னில்
வீணாகப் பழித்தாலோ சொல்லக் கேளு
அண்டயிடி விழுந்து தலைதெரித்துச் சாவார்
அம்புவியில் அவர்க்கு வினை அதிக மாகும். 309

உண்மை வெளியிட்டவர்களுக்கு சாபம் கூறல்

அதிகமாய் வருமப்பா இன்னங் கேளு
அரைகிறேன் நாத விந்தை வெளியிட்டோர்கள்
அதிகமாய் எழுபிறப்பும் கழுதையாகி
அப்பனே எழு நரகம் சேர்வார் பாரு
விதமுடன் இந்த கற்பம் கொள்ளுதற்கு
விளம்புகிறேன் காட்டிலென்ன மலையிலென்ன
வீடப்பா எவ்விடத்தி லிருந்தாலுந் தான்
விருப்பமுடன் சாதித்தால் தலைவனாமே. 310

தலைவனாய் ஆனபின்பு சமாதி மூட்டு
தண்மையுடன் சகலசித்து ஆண்டு சென்று
பலமுடனே தான் வருகும் எல்லாந் தன்னுள்
பகருவேன் இருந்துபார் அறிவார் பாரு

தலைமையாய் இன்னூலின் வரலாறு சொல்வேன்
　　தன்மையுடன் நான் சொன்ன காப்பில் லக்ஷம்
பலமான கோடி சூத்திரமும் பார்த்து
　　பாரப்பா நாதாந்த ரகசியத்தைப் பாரே. 311

அகத்தியர் கோபத்தால் ஏடுகளைத் தூவிவிட்டது

ரகசியத்தை இன்னூலின் சத்தியமாக
　　அனைவோரும் தானறிய வெளியாய்ச் சொன்னேன்
அகமகிழ சொன்னதினால் சித்தரெல்லாம்
　　அப்பனே திரளாகக் கூட்டங் கூடி
பகை கொண்டு எந்தன்மேல் கோபித்தப்பா
　　பாரெல்லாம் தான் நடுங்க பொதிகை வந்து
ரகசியமாய் எங்கள் நூல் கோளைச் சொல்ல
　　அய்யனே பண்பிதுவோ வென்று கேட்டார். 312

கேட்டவுடன் எந்தனுக்கு கோபம் வந்து
　　கிருபையுடன் பாடி வைத்த இந்த நூலை
நாட்டமுடன் நானெடுத்து யுருவி யன்றோ
　　நானிலத்தில் காற்றதனில் தூவி விட்டேன்
நாட்டமுடன் அவர்களதைச் சேர்த் தெடுத்து
　　நன்றாக தான் பார்க்கும் போதிலே தான்
போட்டதொரு ஏடெல்லாம் பின் முன்னாக
　　போய்விடவே கலந்தப்பா பிறகுதானே. 313

பிறகு எந்தனிடம் கொண்டு தானும்
　　பிரியமுடன் தாள் பணிந்து கொடுக்க அன்றோ
திறமுடனே பாதை யந்தப்படியே தானும்
　　தீர்க்கமுடன் புத்தகமாய் சேர்த்து கட்டி
உறுதியுடன் கண்டு நான் நேர் படுத்தி
　　உத்தமனே பார்க்கும் வழியெல்லாம் சொல்லி
திறமான சித்தர்களை போய்வா வென்று
　　தீர்க்கமுடன் உத்தாரம் தந்திட்டேனே. 314

தந்திட்டேன் ஆதலால் இந்த நூலை
　　தன்மையுடன் கடையில் ஒரு முடிவிருக்கும்
விந்தையாய் முடியிலொரு முடிவிருக்கும்
　　வித விதமா யிடையிலுமே முடிவிருக்கும்
இந்த விதம் பல விதமாயிருக்கு மப்பா
　　இந்த நூல் உலகத்தில் கிடைத்தாலுந்தான்
சந்தயமோ பலனதுவுந் தெரியா தப்பா
　　சற்குருவால் வகை சொல்ல வேண்டுந் தானே. 315

வேண்டுமென்றால் உலகில் இன்னூல் கிடையாதப்பா
விதியினுட பயனாலே கிடைத்தாலுந் தான்
பூண்டு நான் சொல்லுகிறேன் கோடி தன்னில்
புகழாக ஒருவனிடம் இருக்கு மப்பா
மீண்டுமே இருந்தாலும் கொடார்கள் சொன்னேன்
முக்கியமாய் பெருநூலின் அதை யெல்லாம்
பூண்டுமே யின்னூலில் காணலாகும்
புலத்தியனே நான் சொன்ன ஆறு லக்ஷமாமே. 316

ஆறு லக்ஷம் குறுக்கியே பாதி சொன்னேன்
அப்பனே அதைக் குறுக்கியே பொதிகை தன்னில்
தீரமுடன் இருகாண்டம் சொல்லி வைத்தேன்
தீர்க்கமுடன் அதைக் குறுக்கியே புலத்தியனே கேள்
வீரமுடன் பனிரெண்டாயிரம் தான் சொன்னேன்
விபரமுடன் அதைக் குறுக்கி சொன்னதைக் கேள்
சாரமுள்ள சௌமிய சாகரத்தினோடு
சாற்றுகிறேன் அமுர்த கலைக்யானந் தானே. 317

தன்னோடு பூரணமும் மதி வெண்பாவும்
சாற்றுகிறேன் பத்தியாய் பூரணத்தினோடு
உன்னிதமாய் பரிபாஷை பெரு நூல் ஞானம்
உத்தமனே தீக்ஷை விதி தசமாங் காண்டம்
நன்னிதமாய் பூரண சூத்திரத்தி னோடு
நவின்ற தொரு சாஸ்திரங்கள் சொல்லி வைத்தேன்
பண்டு போல் இதையெல்லாம பார்த்துப் பார்த்து
பண்புடனே ஒவ்வொன்றாய் பாடல் தானே. 318

பாடல் தான் ஒவ்வொன்றாய் பார்த்துப் பார்த்து
பகருகிறேன் இந்த அந்தரங்க தீக்ஷை
பாடல் சிலதிலே யிருந்த வண்ணம்
பார்த் தெடுத்துக் கோர்த்து வைத்தேன் இதைப்போல்தானும்
நாடதனில் ஒரு நூலும் சொல்லா தப்பா
ஆனாலும் பிரம்ம குல வள்ளுவன் தான்
நாடதனில் இதைப் பார்த்து பார்த்துத் தேடி
நாடினான் ஞான மென்ற பாதை யொன்றே. 319

பாதையிலும் சிலது மொழி மறைவாய்ச் சொன்னேன்
பகருகிறேன் சித்தரெல்லாம் யிந்த நூலை
சீதையென்றும் தங்களுடைய ஜீவனைப் போல்
சிறப்புடனே குகையில் வைத்து அடக்கம் பண்ணால்
போதமிந்த சாஸ்திரந்தான் கொடுக்கப் போனால்
புலத்தியனே எவ் வண்ணம் சித்தி செய்வார்
ஜோதிமேல் ஆணையப்பா சகல நூலில்
சொல்லியே மறைத்த தெல்லாம் வெளியாய்ச் சொன்னேன். 320

பிண்ட வரலாறு

சொன்னேனே யினி பிண்ட வரலாறு கேளு
சுகமுடன் சகல சாஸ்திரங்கள் தன்னில்
நன்றாக பிண்ட மொன்றே சொன்னதைக் கேள்
நாட்டமுடன் இரண்டான ஆண்டுதன்னில்
சென்று ஐந்தாம் திங்கள் தனில் வரும் புளிக்கு
சிறப்புடனே முதற் பிண்டமென்று பேராம்
உன்னிதமா யிருக்கும் இரண்டாம் பிண்டம்
உத்தமனே ஏழுக்கும் மூன்றாம் பிண்டமாமே. 321

பிண்டமது எட்டுக்கு நாலாம் பிண்டம்
பிரித்துரைப்பேன் ஒன்பதுக்கும் ஐந்தாம் பிண்டம்
நன்றாக பத்துக்கு ஆறாம் பிண்டம்
நாட்டுகிறேன் ஆறஞ்சிக் கேழாம் பிண்டம்
விண்டாலே ஈறாருக்கு எட்டாம் பிண்டம்
விருப்பமுடன் ஏழாறுக் கொன்பதாகும்
அண்டருட தயவினால் ஏழே ழுக்கு
அப்பனே பத்தான பிண்ட மொன்றே. 322

என்றுமே நூல்களிலே சொன்னவாறு
இயம்பி விட்டேன் இது பிண்ட வரலாறு மாகும்
நன்றான பிண்டத்துக்கு அண்ட மென்றும்
நவின்றதொரு அண்டமே பிண்ட மென்றும்
விண்டார்கள் கால் தலையாய் தலையே காலாய்
இருப்பதால் சாகாத தலை தானென்றும்
உண்மையுட வேகாத கால் தானென்றும்
உத்தமனே வேகாத தலை தானென்றே. 323

ஒன்றுமே சாகாக்கால் என்று பேராம்
என் மகனே பாஷையெல்லாம் சித்தரெல்லாம்
நன்றாக மறைத்து வைத்தார் சொல்லிவிட்டேன்
நாட்டுவேன் இனி யோக நிலையைக் கேளே
என்றுமே வயநமசிவங் கென்றுந்தான்
என் பிள்ளாய் புலத்தியனே ஊதித் தானும்
குன்றிலுறை திருவடியைத் தெரிசனம் பார்
கூறுகிறேன் சிங் கென சாதனை தான் செய்யே. 324

சாதனை

தானதனில் தினமூதி நாசி நுனி மேல்
தன்மையுடன் நடன மென்றே சார்வை காணூர்
தானேதான் அதிலுங் கேள் உள்ளுக்குள்ளே
தனதாக ரேசித்துக் கும்பித் தூது

தானதனில் ஆதியாய் சோதி காணும்
அப்போது அகண்ட வெளிதனிலே சேர்க்கும்
தானதனில் இருபத் தோறாயிரத்து அறுநூறென்ற
தகுவான சுவாசத்திலே சொல்லக் கேளே. 325

சொல்லக் கேள் ஒவ்வொரு கலையாய் வாங்கி
சுகமுடனே தேய்பிறை தானில்லா வண்ணம்
நல்லாக் கட்டினால் காணும் காட்சி
நவிலுவேன் அதன் பெருமை அநேகமுண்டாம்
விள்ளுவேன் வாசிதனைக் கொண்டு தானும்
விருப்பமுடன் சிவயநம வென்று மைந்தா
உல்லாச மாகவே நாடி பத்து
உறுதியுடன் நாசி நுனி பணிந்திடாயே. 326

பணிந்துமே நமசிவய வென்று தானும்
பற்றுகின்ற நாட்டத்தில் மனந்தான் கொண்டு
அணுகினால் அவ்வும்.உவ்வும் சித்தியாகும்
அப்பனே தாரைதனில் வாசி கொண்டு
கனிந்தூதி ரேசித்து பூரித்தன்றோ
கருணையுடன் கும்பித்து நின்றிட்டாக்கால்
துணை யிருப்பார் பரமப்போதே கோடி
துரிதமுடன் ஓங்காரம் கொண்டுதானே. 327

கொண்டுமே வாசியது கீழே பாய
கூறுகிறேன் ஆதாரந் தன்னில் தானும்
நன்றானதே அதனை பேசுவார்கள்
நவிலுவேன் காயசித்தி வீட்டிலுந்தான்
செண்டு போல் வாசி கொண்டு ஊதினாக்கால்
சிறப்புடனே குருநாதன் நீயுந் தானும்
இன்பமுடன் இருவராய் இருப்பா யப்பா
இன்பம் வளர் அமுரியினால் ஆண்டுக்குள்ளே. 328

ஆண்டுக்குள் தூல உடல் சூக்ஷமாகும்
அப்பனே துவாத சாந்த வெளியுங் காணும்
பூண்டுமே வாலிபத்தில் கற்பங் கொண்டால்
புகலுகிறேன் மேனி வஜ்ஜிர காயமாகும்
வேண்டினால் பூஜையது கார சாரம்
விருப்பமுடன் ஞானமது வேண்டினாக்கால்
ஆண்டுமே பான முண்டு பழகிலன்றோ
அப்பனே உறக்கமது அற்றுப் போமே. 329

அற்றுமே உறக்கமது போனால் அப்பா
அன்புடனே நீயப்பா எக் காலத்தும்
பத்தியுடன் யோகத்தில் இருக்க வேண்டும்
புகலுகிறேன் யோகத்தின் விதியைக் கேளு

பக்தியுடன் உடலுயிரும் பிலக்கத் தானும்
பானத்தை ஆண்டு உண்டால் சாக்காடில்லை
முத்தி பெற பான மோர் ஆண்டு உண்டு
முக்கியமாய் ஜடலமதை வலுக்கச் செய்யே. 330

செய்துமே காரமும் இரண்டு ஆண்டிற்றான்
ஜெயத்தோடு காலையோடு மாலை யுண்டு
மெய்யாக வருடமது மூன்றும் போனால்
மேன்மையாய் உதகமது பாயும் பாயும்
உய்யவே வகாரமும் ஆகு மப்பா
உறுதியுடன் தீக்ஷை பெற்ற யோகிகட்கு
மெய்யாக சொல்லுகிறேன் எக்காலத்தும்
மேன்மை பெற்ற புலத்தியனே அழிவே யில்லை. 331

அழிவில்லை சரிகை யது முதலாம் தீக்ஷை
அப்பனே கிரிகை யது இரண்டாம் தீக்ஷை
அழிவில்லை யோகமது மூன்றாம் தீக்ஷை
அப்பனே ஞான மது நாலாம் தீக்ஷை
சுழி காணும் நாலு தீக்ஷை முடிந்தாலப்பா
சிவன் இவனாம் பேதமில்லை சொரூப சித்தி
உழலாதே யோனி யுட ஆசைத் தீயில்
விழுவதை நீ மறந்துவிடு உறுதியாக. 332

உறுதியாய் தாரை கொண்டு ஊதினாக்கால்
யோக சாதனை யப்பா நிலைத்துப் போகும்
திறமதாய் ஆண்டப்பா முப் பாழுந்தான்
தீர்க்கமுடன் பாழதாம் பானங் கொள்ளு
வரவரவே கைப்பதுவும் மாறிப் போகும்
அப்பனே நாளுக்கு நாள் தேகந் தானும்
உரைக்கிறேன் காந்தியாம் உலகந் தன்னில்
முக்கியமாய் தசதீக்ஷை தன்னில் தானும். 333

கற்பம் துவக்குங் காலம்

தசதீக்ஷை தன்னிலொரு தீக்ஷை யென்றால்
சாக்காடு தவறிப் போம் கற்பந் தானும்
துகங் கட்டி துவக்கவன்றோ வேண்டுமானால்
சொல்லுகிறேன் துலாமாதம் துவக்க வேண்டும்
உசிதமுடன் பின்னெந்த மாதந்தானும்
உத்தமனே கூடாது உப்புனாலே
நசுக்கியே சுட்டு விட்டு கருவிதன்னை
நசுவதுவும் பிரியாமல் தினமுந்தானே. 334

தினம் தினமும் வாசிதனைக் கட்டு அப்பா
தீர்க்கமுடன் ஆண்டொன்றில் வாசி யெல்லாம்
தனதாக அடங்கிப் போம் சுழினை மாத்திரம்
தன்னுக்குள் நடக்குமடா வெளி வராது
சினந்தனக்கு இன்னமது அடிக்கடிக்கி
சொல்லுகிறேன் ஆகாது மூன்றா மாண்டில்
இனமாக வாசி கொண்டு உள்ளே ஊத
இன்பமுடன் கீழிருந்து மேலும் பாயும். 335

மேலும் பாயும் கீழும் பாயும் சொல்லிவிட்டேன்
மேன்மையாய் முதலாண்டில் கற்பமுண்ண
தேர்வாசி அடங்கிப் போம் அடங்கடங்க
தேகமது சுத்தியாம் சொல்லி விட்டேன்
பான நவ துவாரக் குழி தன்னில் தானும்
பகருகிறேன் சுவாசமது ஓடாதப்பா
நீள் புவியில் ஆதி பொருள் வீட்டுக்குள்ளே
நிகழ்த்துகின்ற அழுக்கெல்லாம் முறியுந்தானே. 336

முறிந்துமே எண்ணெயதாம் கழன்று போகும்
முதலாண்டில் முழு வயிரத் தேகமாகும்
அறிந்து பார் ரெண்டாண்டில் வயிர முக்கால்
அப்பனே மூவாண்டில் காரம் பாரு
உறுதியுடன் மூவாண்டு முடிந்தா லப்பா
உரைக்கிறேன் தேவரெனப் பெயரு மாகும்
திறமுடனே கற்பமது முடியு மட்டும்
தீர்க்கமுடன் அரைவயிறு சாதமாமே. 337

ஆமப்பா அதற்கு மேல் ஆகாது சொன்னேன்
அப்பனே அதுவு மொரு வேளையாகும்
போமப்பா உந்தனுட மலங்க ளெல்லாம்
போனாலோ முதலாண்டில் வர்ண மற்று
ஆமப்பா உனது ஜடம் ஆதித்தன் தான்
அப்பனே தங்கமய மாகியன்றோ
போமப்பா உறக்கமது அற்றுப் போகும்
புகழான அமுரியினால் சொல்லக் கேளே. 338

சொல்லக்கேள் கருவு தொண்ணூத்தாரைச் சுட்டால்
சுகமாக தேகமதில் இருக்கா நின்ற
நல்லான சுவாசங்கள் ஒன்பதுந்தான்
நவிலுவேன் ஒளித்துப் போய் சுழினை மாத்திரம்
விள்ளக் கேள் நடக்கு மப்பா இவ் வண்ணந்தான்
விளம்பு வேன் வெந்தணலால் சித்தியான
இத்தேகம் அனலுக்கும் நீருக்குந் தான்
அசையாது மூட்டினால் கற்பம் வரைதான். 339

கற்ப வரை சமாதியாஞ் சொல்லி விட்டேன்
கருதி ரெண்டு உருவாகும் போலேதானும்
உற்பனமாம் ஓராண்டில் புலத்தியனே அய்யா
உரைக்கிறேன் இருபத் தோராயிரத்து அறுநூறென்ற
சிற்றருக்கும் சுவாச மெல்லாம் ஒன்றாமாக்கி
சுழினைதான் உள்ளுக்குள் நடக்கும் பாரு
மற்றினிமேல் அஞ்சனத்தின் முறையைக் கேளு
பாரப்பா பூரண சூத்திரத்தில் சொன்னேன். 340

அஞ்சனம்

சொன்ன தொரு மைதனிலே சொல்லக் கேளு
சுகமான காரமது தைலம் வாங்கி
வின்னங்கள் இல்லாமல் அதிலே விட்டு
விளம்புவேன் மத்தித்து கையில் போட்டால்
அன்னவனின் செயல்படிக்குச் சொல்லக்கேளு
அப்பனே கோடி லக்ஷும் காதம் ஓடும்
சொன்ன தொரு இத்தயிலம் சேராவிட்டால்
துரிதமுடன் அந்த அஞ்சன மோடாதே. 341

மறைப்பு மை

ஓடாது புலத்தியனே யினிமேல் தானும்
உண்மையுடன் மறைவு மை சொல்லக் கேளு
நாடதனில் பெருநூல் பூரணத்தி லப்பா
நான் சொல்லி வைத்த தொரு மறைவு மையில்
ஆடவே சித்து அப்பா சொல்லக் கேளு
அரைகிறேன் இரண்டாண்டில் ஐந்தாம் பிண்டம்
நாடதனில் தானெடுத்து தயிலம் வாங்கி
நாட்டமுடன் தான் விட்டு மத்தித்தப்பா. 342

மத்தித்து திலதமிட தேகந்தன்னை
மகிமையாய் மூன்றுலகும் காணாதப்பா
சித்தி பெற வேணு மென்றால் இந்நூல் தன்னில்
செப்பின தோர் மறைவு மையும் குளிகை பண்ணு
புத்தியுடன் அதின் மேலே சொல்லக் கேளு
புகழான அஞ்சனமும் வகாரம் பண்ணி
எத்திக்குந்தான் எதிராய் சித்தன் என்றே
ஏதுபோ வென்று விட்டால் பிறப்பாய் நீயே. 343

பிராணாயாம உண்மை

இறவாமல் இனி சொல்வேன் பிராணாயாமம்
எல்லோரும் சொன்ன மொழி தப்போ யில்லை
மறவாமல் நீ கேளு புலத்தியனே அய்யா
மகத்தான யோகமடா வாசி யோகம்

திறக்கவே யாருக்கும் வெளியாய்ச் சொல்வேன்
ஜெகத்தில் இதையறிந்தால் சித்தனாவான்
பிறவாதே பிறப்பிக்கும் பூரணத்தி னுள்ளே
பேரான பிராணாய பெருமை கேளே. 344

கேளப்பா சித்தருட சாஸ்திரங்கள் எல்லாம்
கெடியான வாசியினால் பிராணாய மென்பர்
நீறப்பா சில பேர்கள் மூலத் தீயில்
நின்று நின்றூது பிராணாய மென்பர்
தாளப்பா சில பேர்கள் சக்கரத்தில்
தாக்கியல்லோ வைத்த தொரு பிராணாய மென்பர்
நானப்பா யிது வெல்லாம் நாடி சித்தி
நலமான காயசித்தி யாகா வாறே. 345

வாறான பிராணாய வாசி கேளு
வகையான பூரகமே முப்பத்தி ரெண்டு
ஆறான கும்பகமே அறுபத்தினாலு
அடவான ரேசகமோ பதினாறப்பா
கூறாத மாத்திரையின் வகைக ளெல்லாம்
குறிப்பாக அறிந்து கொள்ளு மாத்திரையைச் சொல்வேன்
தாரான தலை சுத்தி நொடிப்ப தப்பா
சமுசயங்கள் ஒன்றுமில்லை மாத்திரையு மொன்றே. 346

ஒன்றான கடிகைக்கு மாத்திரையைக் கேளு
உத்தமனே முந்நூத்தி அறுபதாச்சு
நன்றான பிராணாய மூன்றுஞ் செய்தால்
நலமான கடிகையே ஆச்சுதப்பா
கன்றான பிராணாயம் சந்திரனில் வாங்கு
கலக்குமடா நரம்பெல்லாம் இறுகும் சித்தி
நன்றான பிராணாயம் சித்தியாக
நாட்டினேன் முன்னமே தீக்ஷை பாரே. 347

பாரப்பா பிராணாய வகையைக் கேளு
பரிவாக சிவ தீக்ஷை பதினொன்றுந் தான்
நேரப்பா லட்சியத்தை நிறுத்து வாங்கு
நேராகக் காலையிலே செய்வார் செய்வார்
காரப்பா மாலையிலே சத்தி தீக்ஷை
கலந்து பத்தும் லட்சியத்தில் கலக்கச் செய்வார்
ஊரப்பா இருந்தாலென் காட்டில் வாழ்ந்தா லென்ன
உத்தமனே சிவயோகி உரைத்துத் தேடே. 348

தேடியவர் பதம் போற்றி பிராணாயாமம்
செய்யுமென்று அடி தொழுது செப்பக் கேட்டு
நாடியவர் சுசதீக்ஷை பிராணாயாமம்
நாட்டி வைத்தால் அவனுக்கு பிராணாயாமம் சித்தி

நீடி இதை விட்டு விட்டு உலகத்தோர்கள்
நேரான பிராணாயாமம் செய்து செத்தார்
கூடியிவை யறிந்தவனே ராஜ் யோகி
குருவறியான் பிராணாயங் குருடுதானே. 349

குருடாகப் போகாமல் தீகைஷக்குள்ளே
கூடியல்லோ பிராணாயாமம் செய்யும் போது
அருளான அருள் வந்து தன்னைத் தூக்கும்
அப்பவல்லோ காயசித்தி யாகும் தேகம்
மருளான மருளனைப் போல் தீகைஷ விட்டால்
மண்ணாச்சு பிராணாயம் ஒன்றுமில்லை
திருவான இப்பாடல் சித்த ரெல்லாம்
திருட்டு வித்தை பிராணாயம் செப்பினாரே. 350

செப்புகிறேன் பிராணாயம் சித்தியாக
சிவன் சொன்ன கற்ப முன்னே தின்றிட்டால் சித்தி
ஒப்புடனே கற்பத்தை விட்டு நீயும்
யுகம் வரைக்கும் பிராணாயம் பண்ணினாலும்
தப்புகிறேன் என்றல்லோ சீவன்தப்பிப் போகும்
சாதகமாய் கற்ப முண்டால் பலந்தான் கேளு
முப்புகிறேன் முன்னூற்றி யறுபத்தி ரெண்டு
மூதண்ட ருத்திரர் போலிருக்கும் பாரே. 351

ராசி வகை காண

பாரப்பா துலா மென்ற ராசியோர்க்கு
பருவாகச் சித்திக்கும் தீகைஷ யெல்லாம்
தேரப்பா கன்னி யென்ற ராசி யோர்க்கு
நேராக மன முரைத்தால் சித்தியாகும்
சீரப்பா பத்துரைத்த ராசிக் கெல்லாம்
சித்தியாம் மனமுரைக்க மாட்டார் மாட்டார்
காரப்பா தச தீகைஷ வந்தோர் பாதம்
காராட்டால் ஒன்றுமில்லை கண்டுதேறே. 352

தேறவே பிராணாய கருவைச் சொல்வேன்
சதாசிவன் தான் எந்தனுக்கு உபதேசித்தார்
ஆரவே முந்தி முந்தி அப்பியாசிக்க
அடி தொடுத்து சொல்லுகிறேன் அப்பா கேளு
கூறவே மூலத்தில் வாசி கொண்டு
கோழி முட்டை போலிருந்து முக்கோணத்தில்
மாறவே யிடை பின்னாய் ரெண்டும் ஓடும்
மற்றொன்று சுழிமுனைதான் மகிழ்ந்து கேளே. 353

கேளிந்த இடைகலையில் சிங் கென்று வாங்கி
கெடியாக வங் கென்று கும்பித்து நில்லு
நாளிந்தப்படி நீ தான் பழக்கம் பண்ணு
நலமான மூலத்தின் மேலே சாடி
தாளிந்த தாது வெல்லாம் சாந்தியாமே
சாதகமாய் யிரண் டொன்றில் தானே தானும்
ஆளிந்த வாசிக்கு அவ்வளவே சித்தி
அப்பியாச மார்க்கத்துக்கு கடிகை பண்ணு. 354

பண்ணவே பிராணாய பலத்தைக் கேளு
பார்க்கவே ரோம மெல்லாம் வேர்வையாகும்
அண்மையிலே சிவ தீகைஷ ரெண்டிலூதி
—அதற்குள்ளே பிராணாயம் பண்ணும் போது
கண்ணயிலே ஜெடத்திலுள்ள தோஷமெல்லாம்
கக்குமடா நெய் போலே கண்டு பாரு
தண்ணியிலே மூன்றில் நின்று வருத்தம் தானும்
சதாசிவன் போல் பிராணாயம் பண்ணித் தேறே. 355

கேளப்பா சட்டை யொன்று கழண்டு போகும்
கெடியான சிவதீகைஷ நாலில் நின்று
நீரப்பா ஜடத்தினுள்ளே நேர்ந்து நின்றால்
நிலையற்ற நோயெல்லாம் நீராய்ப் போகும்
ஆளப்பா சிவ தீகைஷ அஞ்சினுள்ளே
அடுத்து நின்ற பிராணாயம் பண்ணப் பண்ண
நாளப்பா சட்டை தள்ளிப் போகும் போகும்
நலமான தேகமது சிகப்பு மாமே. 356

சிகப்பாகும் கண்கள் ரெண்டும் இறுக்கும் தேகம்
சிவசிவா சக்கரங்கள் ஆறுங் காணும்
உகப்பாகும் பஞ்சகர்த்தாள் ஐவருந்தான் வந்து
உதவுவார் கேட்ட தெல்லாம் உதவி செய்வார்
தவப்பாகும் நிறுவாணி யேவல் கேட்பாள்
சகல முதல் வாத மெல்லாம் தானே சித்தி
ஒகப்பாகும் குளிகை யிட்டால் ஓடும் வேகம்
ஓங்கி நின்ற அஞ்சு வித தீகைஷ யிட்டே. 357

ஆட்டான சிவ தீகைஷ ஆறில் நின்று
அப்பனே பிராணாயம் பண்ணு வோர்க்கு
மூட்டான தாது விர்த்தி யெல்லாங் காணும்
மூதண்ட ஜடத்தி லொரு சட்டை போகும்
கூட்டான வினைகளெல்லாம் கழன்று போகும்
கூர்ந்து பார் சுழி முனையோ வெளியாய்க் காணும்
பூட்டான ஜெடமெல்லாம் தெறித்துப் போகும்
பொற் பதுமை போலவுந்தான் இருந்து பாரே. 358

பாரப்பா சிவ தீக்ஷை ஏழினுள்ளே
பாடுவேன் பிராணாயம் செய்யும் போது
நேரப்பா சட்டை யொன்று வெளுப்பாய் தள்ளும்
நிர்மலமாய் தீயினுட காந்தி தானும்
சேரப்பா என் மகனே வாவா என்பாள்
ஜெடமல்லோ விண்டது போல் துறந்து காணும்
ஆரப்பா யிது வரைக்கும் தீக்ஷை சொல்வார்
அவரவர்கள் செய்த தவத்தால் எய்துங் காணே. 359

எய்து மென்ற சிவ தீக்ஷை யெட்டினுள்ளே நின்று
இதமாக பிராணாயம் செய்வோர்க் கய்யா
நய்யு மென்ற ஜெடந்தானும் நினைத்தபடி யப்பா
நலமாக கூடு விட்டுக் கூடு பாயும்
கையுமென்று அறிந்தவர்க்குப் பான்மாகும்
கண் திறக்க வொட்டாமல் லகிரி மீறும்
கொய்யுமென்ற பூவேது வாம கேது
கூடினார் நாதாந்தக் குறியில் தானே. 360

தானென்ற சிவ தீக்ஷை ஒன்பதிலே நின்று
சாதித்துப் பிராணாயம் செய்வோர்க்கு அய்யா
கோனென்ற ரவி போலே தேகமாகும்
கூப்பிட்டால் தேவரெல்லாம் வணங்கி நிற்பார்
பூனென்ற ஜெடம் போச்சு கயிலாய தேகம்
உந்தனுக்கு ஆச்சுடா மைந்தா பாரு
வானென்ற வெளி யெல்லாம் நீயாய்க் காணும்
வார்த்தையினால் அஷ்டமா சித்தியாமே. 361

சித்தியாம் சிவ தீக்ஷை பத்தில் நின்று
செய்வதற்குப் பிராணயம் என்ன சொல்வேன்
பக்தியாம் தீபம் போல் ஜடமே காணும்
பாங்கான கத்தியுமே நடுவே யோடும்
அத்தியாம் கூட சிவனாக நிற்பார்
அப்பனே யிதுவல்லோ சொரூப சித்தி
முத்தியாம் இது வரைக்கும் சித்தனாட்டு
முழுமோசம் குளிகை யென்று யேச்சிட்டாரே. 362

மௌனமென்ற ஏக தீக்ஷை கேசரி மார்க்கம்

ஏச்சிட்டார் சிவ தீக்ஷை பத்தையுந் தான்
இதமாக மறைத் தல்லோ வாசி யென்றும் சொன்னார்
மாச்சிட்டு குளிகை யென்றார் காய சித்தி யென்றார்
மாய்கை போல் ஒளித்தல்லோ மாயஞ் செய்தார்

ஓச்சிட்ட நூல்களிலே தீக்ஷை இல்லை
உத்தமனே ரசவித்தை பாடினார்கள்
வாச்சிட்ட தச தீக்ஷை பெற்ற பின்பு
மௌன மென்ற தீக்ஷையைத்தான் மருவிக் கேளே. 363

கேளப்பா அகண்டத்தில் மௌன தீக்ஷை
கெடியான கேசரியால் காணும் காணும்
நாளப்பா மந்திரங்கள் ஒன்றுமில்லை
நாளில்லை பாவில்லை நானென்ப தில்லை
சூளப்பா அகண்ட வெளி கோடி பானு
சுடர் கோடி காந்தியைப் போல தோற்றும் தோற்றும்
வாளப்பா யிதுவல்லோ மௌன தீக்ஷை
மகத்தான இந்நூலே மாட்டும் பாரே. 364

மாட்டினால் கண்டத்தில் லகித்துப் போச்சு
மைந்தனே தானதுவும் அதுதான் ஆகும்
மூட்டினால் கற்பவரை சமாதி யாக்கும்
மூதண்ட ரிஷிகளுக்கு அடுத்தவாறு
கூட்டினால் மனம் வேறே பிரியொட்டாது
கூடிப்போய் பூரணத்தில் கூர்ந்து நிற்கும்
பூட்டினால் மௌன மென்ற தீக்ஷை யாச்சு
உத்தமனே பதினொன்று முடிந்தவாறே. 365

வாறான வுலகத்தில் விட்டகுறை யோர்க்கு
வந்துதென்றால் தச தீக்ஷை மைந்தா கேளு
மாறான சிவ சத்தி பூசை தன்னை
மெச்சியல்லோ அர்ச்சித்துச் சித்தி செய்து
கூறான வாத சித்தி பார்த்துக் கொண்டிருப்பாய்
கூறினால் பதினொன்றுங் கூறார் பாரே
மாறான பாபங்கள் ஒன்றுஞ் சொல்லார்
வந்தபேர் உலகத்தில் வாய் பேசாரே. 366

பேசாதே யிருந்து கொண்டு சமாதி பார்த்து
பிரிவான லட்சியத்தை தொட்டு தொட்டு
பேசாத பிராணாயம் ஒத்தி யேத்தி
இழுத்திழுத்து விடுவார்கள் மறவாமல் தான்
ஓயாதே கற்ப முண்டு பிராணாயத்தை
உணர்ந்து பார் நன்றாக புலத்தியனே ஐயா
வாயாதே தீக்ஷை வந்தோர் வாழ்ந்திருந்த வூரில்
வருகாது வருகாது வினைகள்தானே. 367

வினையில்லை அவரை நித்தம் தரிசனமே செய்யில்
வேதாந்த சாரத்தே மனமும் தேறும்
இணையில்லை யவர் மதத்தைப் போற்றி நிற்க
வேண்டியவர் மனது வந்து திரும்பு மட்டும்
வினையில்லை யுண்மையதே தசதீக்ஷை செய்யும்
வேதாந்த சிரோன்மணியே யுன்னைப் பார்த்தால்
வினையில்லை என்னுடைய உடல் பொருளும் ஆவி
விளங்கியதோர் உதகத்தில் தாரையூதே. 368

ஊதியவர் பதம் போற்றி தீக்ஷை கேட்டு
ஊதி நின்ற லட்சியங்கள் நன்றாய்க் கேட்டு
வாதியந்த லட்சியத்தில் பிராணாயம் வைத்து
வாங்கிய தோர் தீக்ஷை விதி தன்னிலேறி
போற்றி யொன்று பிராணாய தீக்ஷையொன்று
பொருத்தி இருப்பார் ஆண்டொன்றில் இதுதான் சித்தி
போற்றியிது பத்தாண்டும் தீக்ஷை பத்தும்
புகழாக செய்தவனே அரூபி யாமே. 369

ஆமப்பா தசவருடம் ஆர்தான் செய்வார்
ஆச்சரியம் ரிஷிசெய்வார் சித்தர் செய்வார்
ஓமப்பா உலகத்தோர் செய்வார்
உத்தமனே சொல்லி விட்டேன் இன்னங் கேளு
சோமப் பாலுண்டு ரெண்டாம் ஆண்டில்
சுகமான காரத்தை யந்தி சந்தி
நாமப்பா சொல்லுகிறோம் கொண்ட பின்பு
நாட்டமுடன் மூன்றாண்டில் சிவமாங் கேளே. 370

செய்துமே கேளப்பா இந்த வண்ணம்
சிறப்புடனே கொண்டாலோ தாளா தப்பா
உய்துமே அதனாலே முன்னே தானும்
உபாய மதாய் படிப்படியாய் ஏறத்தானும்
முய்துமே பதினொன்றாம் தீக்ஷை மட்டும்
முக்கியமாய்ச் சொல்லி வைத்தேன் அந்த வண்ணம்
எய்துமே கொண்டாலும் கொள்ள லாகும்
இவ்வண்ணம் கொண்டாலுங் கொள்ளலாமே. 371

கொண்டுமே வருவதற்கு இந்த நூலில்
குறிப்புடனே யிணுக்கு இணுக்காய்ப் பிரித்து யானும்
அண்டர் பிரான் தயவினால் சொல்லி வைத்தேன்
அப்பனே யிந்த நூல் கிடைத்தா லப்பா
நன்றாகத் தீக்ஷைக்கு வழியும் காட்டும்
நலமான பிராணாயம் வழியும் காட்டும்
பண்டுடனே அதில் சொன்ன மார்க்க மெல்லாம்
பாரப்பா நாட்டத்தில் இருந்து பாரே. 372

நாட்டமென்ற பூரணத்தைக் காண வென்றால்
நன்மையுள்ள சற்குருவால் காண வேண்டும்
ஓட்டமென்ற ஓட்ட மெல்லாம் ஓடாதே நீ
ஒரு மனதாய்ச் சுழி முனையில் உகந்து நில்லு
ஆட்ட மென்ற திரு நடனம் அங்கே யுண்டாம்
அன்பத்தோ ரெழுத்து முதல் எல்லா முண்டு
பாட்டை மிகப் பார்த்ததினால் என்ன உண்டு
பக்தி முத்தி வைராக்யமாய் பாரே. 373

பாரப்பா உலகத்தில் ஞான மென்பார்
பரத்தின் இருப்பிடத்தைப் பாரார் பாரார்
சாரப்பா உலகத்தில் யோகம் செய்வார்
சார்ந்திருக்கும் பரஞ் சோதி தன்னைக் காணார்
ஊரப்பா குளிகை யென்றே உழலுவார்கள்
உத்தமனே உள்ளுயிரை அறிய மாட்டார்
நேரப்பா சரிதை யென்பார் தன்னுக்குள்ளே
நெருப்பாறும் திருக் கோயில் கண்டிலாரே. 374

நெருப்பாறும் மயிர்ப் பாலம் கடந்தப்பாலே
நிலையாத கங்கையடா நிறுத்திப் போகா
இருப்பார்கள் அதுமயமாய் ஆடி யாடி
இன்ப நலம் பற்றுகிறார் ஆடி யோடி
குறிப்பாக கண்டவர்க்கே தெரியும் மார்க்கம்
கோடி ரவி சுடர் காந்தி கொண்ட வாட்டம்
வெறிப்பாகப் பூரணத்தை யறிவாய்ப் பார்க்க
வெட்ட வெளி யாகுமடா மனத்தைத் தேற்றே. 375

மனமான பூரணத்தை யார் தான் காண்பார்
மகத்தான குரு சொல்ல அறிய வேண்டும்
இனமான வாசியைத் தான் யார் தான் காண்பார்
இயல்பான யோகி சொல்ல அறிய வேண்டும்
குணமான குண்டலியைக் கண்டால் மைந்தா
குருவான பதிதலத்தில் கூடலாகும்
கனமான கண்டத்தில் அங் கென்றெட்டு
கருத்துறவே குறியை மெள்ளக் கருதிப்பாரே. 376

பார்க்க வென்றால் தீப ஒளி பளிச் சென்றே தான்
பண்பாகக் காணுமப்போ கண்தான் கூசும்
மார்க்கமுடன் கண் கடுத்துக் கூசிற்றானால்
மருட் கொள்ள வுருட்டியே குறியிலேறு
ஏற்கை யினி யப்படியே பழக்கமானால்
என்ன சொல்வேன் நந்தி பிரகாச மப்பா
சேர்க்கையுடன் அகாரம் உகாரம் ரெண்டும்
தினம் தோறும் செபித்தாலே சித்தனாமே. 377

சித்தனாய் இருப்பதற்கு அகார தீக்ஷை
ஜெபித்திடுவாய் ஆண்டொன்று தவறாமல் தான்
முத்தரையும் தினந்தோறும் பழக்கமானால்
மூலத்தின் அக்கினிதான் முயன்று காணும்
வித்தை தப்பி விடாதபடி நின்றாயானால்
பாலகனே மூலவன்னி அகன்று போகும்
அற்றுதடா அசதி எல்லாம் கழன்று போகும்
அறுசுவையின் வீறெல்லாம் அகன்று போமே. 378

போனபின்பு உகாரமதை மருவி யேறு
புத்தியுடன் ஆண்டொன்று அதன் மேல் தானும்
ஆனபின்பு நீர்கடுத்து வெட்டை மீறும்
ஆசனத்தில் வாய்வு நின்று பித்தம் மீறும்
ஊண் சுவையில் மனம் வெறுத்து திகைத்துக் காட்டும்
உத்தமனே யிப்படித்தான் இருக்கு தென்று
கோனருளைப் புலத்தியனே விட்டிடாதே
கொண்டு மெள்ள ஏத்திவிடு வினை நில்லாதே. 379

வினையான பீடையது பலத்த தானால்
வேண்டபடி காந்தத்தை விரும்பிப் பூட்டு
சுனையான சுனையெல்லாம் ஓடிப்போகும்
சுந்தரன் போல் உன் தேகம் துலங்கும் பாரு
முனையான சுழினை மேல் வாசி யேற்று
மூவுலகும் காணுதற்கு முனைமேல் நில்லு
துணையான என்நூலை தொழுது போற்று
தொழுது கைவிட்டு தொழுதாக்கால் மனம் பேயாமே. 380

பேய் பிடித்து சாஸ்திரத்தை உலகத்தோர்கள்
பேணியே படித்திடுவார் பொருளைக் காணார்
வாய் புழுத்து நாய் போலே உலகத்துள்ளோர்
வழிகள் நெறி யறியாமல் மாண்டு போனார்
நோய்பிடித்த சித்தர்தான் அனந்த முண்டு
நோக்கியே யவர்களிடம் பேச வேண்டாம்
தாயறியாப் பிள்ளையிடம் பேச வேண்டாம்
தண்மையுடன் பூரணத்தைக் காணலாமே. 381

காணப்பா ஆதியந்தம் பொருளைத் தானும்
கருவாகத் தானறிந்து கருவைப் பற்றி
பூணப்பா ஒரு மனதாய்ப் பூணு பூணு
புத்தியுடன் ஆண்டதிலே பொறிகள் தோன்றும்
தானப்பா தன்மையாய் நின்ற பொறிகள் தன்னில்
சக்கரமும் அட்சரமும் தானே தோன்றும்
தோணுமப்பா அமிர்தமென்ற அமிழ்தந் தோன்றும்
தெளிவான அமிர்தம் உண்டு தெளிந்து பாரே. 382

பார்க்கிலே அண்ட பகிரண்ட மெல்லாம்
பண்பாக பூரணத்தில் உதித்தவாறு
கார்க்கையிலே பூரணத்தில் அருவி பாய்ந்து
கலப்புற்று தாபரங்கள் பதிந்தாற் போலே
சேர்க்கையிலே மதிதானும் தெளிவாய் மைந்தா
சூரியனில் ஆரறியப் போறார் காண்பார்
ஏற்கையுடன் அகாரமதில் உகாரம் தோன்றில்
இன்பமுடன் மகார மொடு விந்து நாலே. 383

நாலான விந்து விலே யறந்தான் சோமன்
நாட்டிப்பார் நிரோதி யொடு நாதந்தான்
மேலான உகாரமதில் சத்தி யோடு
வியாபினியும் சமனை முதல் உன் மனதில் ஊணிப்பாரு
சேலான கருணை தரும் வாம ரூபி
சேர்க்கையுள்ள அந்தம் முதல் அனாதியோடு
காலான அநாதி யொடு நாதந்தான்
கண்டு பார் சிவகலையை காட்டினோமே. 384

ஆமப்பா சோடசத்தின் கலையுள்ளாகி
அருள் தீபம் நோக்குதற்கு திறவுகோல் தான்
ஓமப்பா உகாரந்தான் மின் போல் மின்ன
உறு மூல நாடியிலே முழங்கி நிற்கும்
நாமப்பா அகாரந்தான் ஹிருதயத் துள்ளே
நாடியே அக்கினி போல் பிறையே வீசும்
தாமப்பா மகாரந்தான் கண்டத்துள்ளே
தயவான மதி கோடி காந்தியாமே. 385

காந்தியாம் விந்துவப்பா மின்போல் வீசி
கண்ட மேல் அங்குலம் போல் கடந்து காணும்
காந்தியாம் புருவநடு சார்ந்த காலம்
சந்திரன் போல் வீசும் சம்புங் காணும்
பாந்தமாய்த் தினந்தோறும் பழக்கமானால்
பார் மகனே கற்பூர தேகமாகும்
சேர்ந்து பார் இதற்கு மேல் அங்குலம் மூன்றால்
செப்புகிறேன் சோடசத்தின் கலைதானாமே. 386

ஆமப்பா புகைபோலே ரூபமாகும்
அதினோடு சேர்ந்தாக்கால் உந்தன் தேகம்
போமப்பா கத்தி நடு அதற்கு மேலே
புகழாக மூன்று விரல் கடந்தா யானால்
நாமப்பா நாற் கலை மாணிக்கம் போல
ஒளி வீசும் கால் மாறி ஊணிப் பாரு
ஆமப்பா நாதாந்த உச்சி மீது
நாடுவாய் மின் கோடி ஒளியே யாமே. 387

ஒளியாகும் மாத்திரைதான் அரைக்கால் வைத்து
ஊணிப்பார் பிடித்த விடம் பொய்யாய்ப் போகும்
அழியாத பேரின்ப மோட்ச வீடு
அது கடந்து அங்குலம் கால் அப்பால் செல்ல
கழியாத கத்திக் கலை ரவி போல் மின்னி
காணுமடா மாகாணி மாத்திரை தான் வைக்க
தளிர் வாய்ந்த கூர் போலே உந்தன் தேகம்
தானாகும் சத்தி, யடிமருவிக் காணே. 388

மருவியே அங்குலம் நால் கடந்து பார்த்தால்
மைந்தனே விடாமலே யுன் கலை தானின்று
அருவியே ஆதித்தனொளி போல் வீசும்
அரைக் காணி மாத்திரை தான் அங்கே நீயும்
மருவியே தோத்திரஞ் செய் மௌனத்தாலே
மகத்தான சித்தி முத்தி வருகுந் தானே
வருகுமடா சித்தி முத்தி பிராணாயத்தால்
வாசியென்ற பிராணாயம் அறிந்தவனே சித்தன். 389

அமுரியின் அளவு

தானான உச்சி வெளி கடந்தப் பாலே
சமன் காண தழதழத்து ரவிபோல் மின்னும்
மானான மாத்திரைதான் கால்மாகாணி
மனக் கண்ணால் தன் கண்ணை மருவிப்பாரு
தேனான தேகமப்பா ஒளி போல் காணும்
திறமாக உன்மனையே மருவிப்பாரு
கோனான ரவி கோடி ஒளிபோல் வீசும்
குணமாக அரைக் காணி மாத்திரை தான் ஓதே. 390

ஓதப்பா வொளிபோலே உந்தன் தேகம்
ஒன்றுமில்லை பிடித்த விடம் பொய்யாய்ப் போகும்
நாதப்பா அண்ட பகிரண்ட மெல்லாம்
நாடலாம் ஓடலாம் அனேகஞ் சித்தி
நீதப்பா ஆதாரம் ஆறில் நின்றால்
நிலைத் தப்பா தேகமது கல் போல் காணும்
வாதப்பா ரகசியமாய் வாசி யோகம்
வரைந்தாக்கால் சமாதிக்குள் வழியுமாச்சு. 391

ஆச்சப்பா இதிலொன்று தவறிவிட்டால்
அரகரா எடுத்த சித்து பொய்யாய்ப் போகும்
மாச்சப்பா போகாதே மைந்தா சொன்னேன்
மந்திரந்தான் ஆரறிவார் மைந்தா கேளு

மூச்சப்பா ஓங்காரம் அதனுள் விந்து
முட்டினால் திரி கோண முனையுங் காணும்
காச்சப்பா மணிக்குளிகை முடிப்பிக்கும்
கசடறவே ஆண்டொன்றில் அதுவுஞ் சித்தே. 392

சித்திக்கும் குரு முனியைச் சொல்லக் கேளு
சிவயநம அவ்வோடே உவ்வுங் கூட்டி
முத்திக்கும் பாதையிது மைந்தா சொன்னேன்
முனை நடுவாய் சுழினையிலே முத்தி கண்டேன்
சத்திக்கு சவ்வுண்டு சித்தியாகி
சதாசிவமாய் யவ்வுண்டு அமைந்த தப்பா
புத்திக்கு மொழி போலே ஒன்றாய்க் காணும்
பாங்கு பெற அஞ்செழுத்தும் பணிந்திடாயே. 393

பணிந்திட்ட அஞ்செழுத்தால் மூன்றெழுத்தைப் பாரு
பாங்கான எட்டெழுத்தும் வாலையாச்சு
கனிந்திட்ட எட்டெழுத்தாய் மனதைப்பாரு
கருவான சுயம்பு லிங்கம் கண்ணில் காணும்
தணிந் திட்ட அஞ்செழுத்தைப் பிடித்து வாங்கி
தலையான ஓரெழுத்தைத் தாக்கிப் பார்த்தால்
அணிந்திட்ட அஞ்செழுத்துக்கு உயிரே யொன்று
அரகரா ஓரெழுத்தை யார் காண்பாரே. 394

காணாத எவராலும் மூல சூக்ஷும்
காண்பவரே சிவ யோகி ஜீவன் முத்தர்
பூணாத வுலகத்தில் மாண்பர் கையால்
போக்கோடே யேறுதற்கு பொருளைக் காணு
தோணவே எவராலும் காணப் போமோ
சுழி திறந்து மேலாகும் சுடர் விட்டாப் போல்
பேணரிது என் மகனே மனம் பேயாகும்
பின்னறிந்து முன்னறிந்து குருவைக் காணே. 395

காரப்பா களங்கமின்றி சுழினைக்குள்ளே
கற்பூர தீபத்தில் கருத்தோ டொத்து
ஏறப்பா வாசி கொண்டு கனலைத் தூண்டி
என்மக்காள் நிராதாரம் கலைந்தப்பாலே
சேரப்பா சுழினை பற்றி விட்டகாலைச்
சேர்ந்தே தான் பாகம் விட்டு பார்த்துக் கொள்வாய்
நேரப்பா மனந்தனையும் நேரொட்டாது
நிலைத்தவனே சிவயோகி நீ தான் பாரே. 396

பாரப்பா வசிய வென்றும் வசி யென்றும்
பண்பாக சிவய வென்றும் மூன்று திறமாற
நேரப்பா பிராணாயம் ஒன்ற தாச்சு
நேர்ந்தேதான் இரண்டு தான் நீர்த்தாயானால்

ஆரப்பா உன் திரேகம் பொன்னிறம் போல் காணும்
அரகரா அமிர்தமது கசிந்து பாயும்
கூறப்பா பிராணாயம் நேமம் யேமம்
கூடியே யோகத்தில் குறிகண் நாட்டே. 397

நாட்டியே யோகத்தில் குறிகள் நாட்டு
நலமாக கும்பமென்ற நாதத்துள்ளே
கூட்டவே ஓம்-ஆம்-ஊம் என்றே யோது
குறிப்பாக உம்-அம்-ஓம் என்றே யோது
ஆட்டவே அஷ்ட சித்தி எழுத்து இதாச்சு
அஞ்செழுத்து இதனோடே அப்பா மாறு
நீட்டவே எட்டெட்டு தொழிலு மாகும்
நீ நினைத்துக் கேட்ட தெல்லாம் தருகுந்தானே. 398

தருகுமப்பா சிவவாலை எழுத்துக் கூட்டி
தாக்கினால் அஷ்டகர்மந் தானே யாகும்
வருகுமப்பா வாத சித்தி காய சித்தி
அரிதான யோக சித்தி ஞான மெய்தும்
உருகுமப்பா ஓங்கார மதனிற் பூட்ட
ஒரு கோடி நூல்களிலே தெளிந்தார் சித்தர்
பருகுமப்பா சிவவாலை எழுத்து மாறி
பாடினார் சாஸ்திரங்கள் பார்த்துத் தேறே. 399

அமிர்த சஞ்சீவி கற்பம்

தேறவே சத்தி சிவம் இன்னூல் காட்டும்
ஜெகத்திலே இன்னூல் போல் செப்பாதப்பா
நேரவே ஆயிரத் தெண் மலருக்குள்ளே
நிற்குமடா அமிர்த மங்கே நீதான் கொள்ளு
கூறவென்றால் நாவேது பாவங்கேது
கூடினால் வாசி சென்று வெளிபோல் காணும்
ஆறவே சொல்லி வைத்தேன் அஷ்ட சித்தும்
அய்யனே சொன்னதைத் தான் அருந்திப் பாரே. 400

குரு முடிக்க
இடம் பொருள் ஏவல் வேண்டு மென்பது

பாரப்பா குரு முறையைக் காண வென்றால்
பாடு மெத்தப் பாடு மெத்த மைந்தா மைந்தா
ஆரப்பா அறிவார்கள் குருமுறை தானப்பா
அதற்குமொரு இடம் பொருள் ஏவல் வேண்டும்
நேரப்பா பொருளதுவும் கிட்டித்தானால்
நேர்மையுடன் அடக்கமதா நீ யிருந்து
தேறப்பா உலகத்தில் இருந்து தேறு
ஜெகத்தோர் காணாத முறை அறிவாய் தானே. 401

தானென்ற நாத முறை அறிய வென்றால்
தப்பாதே வெகு பாடு பாடு மெத்த
கோனென்ற சற்குருவால் காட்ட வேண்டும்
குறிப்பாக கைமுறையாய் அறிய வேண்டும்
தேனென்ற இடம் வேண்டும் பொருள் தான் வேண்டும்
சித்தம் மனது ஒன்றான சிஷ்யன் வேண்டும்
மானென்ற மனதுறுதிப் பழக்கத்தாலே
மகத்தான நாமத்தை யறியலாமே. 402

ஆமப்பா நாத விந்து செய்து காணார்
அரகரா குரு விடத்தில் காணலாகும்
நாமப்பா விந்துவை நாத மென்றும்
தயவான நாதத்தை போத மென்றும்
நாமப்பா வென்று சொல்ல நாதம் நாதம்
நாட்டினேன் இன்னூலால் நாத வாழ்வு
ஓமப்பா சொல்வது போல் ஒரு நூல் சொல்லா
ஒழுக்க மென்ற இன்னூல்தான் அந்தரங்கம். 403

இந்த நூல் அந்தரங்க தீக்ஷைக்குள்ளே
இயம்பாத பொரு ளொன்று இல்லை யப்பா
சுந்தரமே பரிபாஷை தன்னைப்பாரு
சூட்டி வைத்த கருவெல்லாம் ஆதியந்தம்
சந்தயங்கள் தானேது சாட்சிதானும்
சாத்தி வைத்த இந் நூலால் பாரு பாரு
அந்தரங்க தீக்ஷையடா அதிக சூக்ஷம்
அரிதரிது விளம்புவது கண்டு பாரே. 404

பார்ப்பது தான் பருதியது சத்தியாகும்
பரிவான மதியதுவும் சிவமதாகும்
தீர்ப்புடனே சொல்லுகிறேன் சுடர்தான் அந்தம்
சிவ சிவா இம் மூன்றும் தெளிந்து கேளு
மூர்ப்புடைய சல்லியென்றும் சன்னாசி யென்றும்
மொழிந்தார்கள் பெரியோர்கள் சித்த ரப்பா
கார்ப்புடைய சத்தியது பூமி நாதம்
குறியான சிவவிந்ததுதான் ரவிக்குள்ளாச்சே. 405

ஆச்சப்பா நாத விந்து கூடி யொன்றாய்
அணுகி நின்ற இடமது தான் சடந்தானப்பா
மூச்சப்பா தானடங்கி தியானம் செய்ய
முறைமையொன்று சொல்லுகிறேன் கற்பக்கூடு

நீச்சப்பா நிலையாக விந்து தன்னில்
நிசமாகக் காலை சிவ பூசை பண்ணி
பேச்சப்பா பேசாதநாத உப்பு
பெலமான சத்தி உப்பை பேணிக் கொள்ளே. 406

கொள்ளடா மாலையிலே பூசை பண்ணி
கொண்ட பின்னர் குருபதத்தில் கூர்மையாக
நில்லடா நினைவு கொண்ட சுடர்தான் அண்டம்
நிஜமான பிண்டமடா பிரத்தியாகாரம்
அல்லடா அக்காரம் கொண்டு வந்து
அதினோடே அமிர்த மென்ற பானஞ் சேர்த்து
உண்ணடா உறவாக உறவு பண்ணி
உத்தமனே அறிவில் நின்று பூசை பண்ணே. 407

பூசை பண்ண பூசை நாளை நானுனக்கு
பூரணமாய் முன்னரே சொல்லி விட்டேன்
நேசம் வைத்து அப்படியே நீ சாதித்தால்
நிஜமாகக் கோடி யுகம் பூரணமே யாகும்
வாசமாம் ஞான முறும் எல்லாம் சித்தி
அப்பனே பூரணத்தில் ஏறிப் பாரு
நாதமது உகாரமாம் புளியுமாகும்
நாட்டினதை உலக மதில் அறிவார் தானே. 408

அரிதாக இதனை நான் மறைத்த தெல்லாம்
அன்பனே மதுரசம் போல் பொழிந்தேன் நூலில்
குறியாகப் பாடி வைத்தேன் யிந்த நூலில்
கூறினேன் சகலமும் வெளியாய்ச் சொன்னேன்
பெரிதாக பரவி விட்டு யிந்த நூல்
பேரின்ப முத்திதனைப் பெறுவாய்ப் பாடி.
சிறிதாக வெளி யரங்கம் பண்ணாதே நீ
தேசத்தில் வையடா யிந்த நூலை. 409

நூலைக் காட்ட வேண்டாமென்பது

இல்லை யென்று சொல்லி விடு இந்நூல் கேட்டால்
எம் மகனே புலத்தியனே நீ தானப்பா
புல்லென்ன புல்லரிடம் நூல் காட்டாதே
பூரணத்தைப் பற்றி மன தறிவில் நின்று
கல்லென்ற மனதாக உறுதி கொண்டு
கருவாக கருக்கள் எல்லாம் எடுத்து ஆடு
தொல்லை வரும் வெளியரங்கம் பண்ணினாக்கால்
சுகமாக மனதடங்கி அறிவில் சேரே. 410

அறிவாக மன தடங்கி மௌனமாக
அப்பனே நூலெடுத்துப் பாரு பாரு
குறியான குறிதனிலே குணமாய் நின்று
குணமில்லாதார் இடம் கூடவேண்டாம்
பரி''ான தங்கமடா பரப்பிரம்ம மாச்சு
பாலகனே தங்க மென்றால் பூரணமே தங்கம்
நெறியான பூரணத்தைத் தினமும் நோக்கு
நேரான பராபரத்தில் சார்வாய் முற்றே. 411

முற்றான புலத்தியனே மா ரிஷியே கேளு
முச்சுடரும் ஆதியந்தம் நன்றாய்ப் பாரு
சித்தான அந்தரங்க தீக்ஷை யிதுவப்பா
தேசத்தில் கிடையாது திறமாய்க் கேளு
பத்தான பதிதனக்கும் பத்தும் பூசி
பரிவான வாசியது சித்தி யாகும்
வித்தான வினை யறுக்கும் ஞான சித்தி
வேதாந்த அந்தரங்க தீக்ஷை முற்றே. 412

அந்தரங்க தீக்ஷை முற்றிற்று

புதிய வெளியீடுகள்

திருவள்ளுவர் ஞானவெட்டியான்	ரூ.100.00
பதினெண் சித்தர்கள் நாடிசாஸ்திரம்	ரூ. 80.00
" " வாதக்கோவை	ரூ. 40.00
புலிப்பாணி சிதம்பரம் 25 மந்திரவிஞ்சை	ரூ. 30.00
" வைத்தியம் 500 உரையுடன்	ரூ. 50.00
" ஜாலத்திரட்டு உரையுடன்	ரூ. 40.00
சட்டைமுனி ஞானம்- கொங்கணவர் வாலைக்கும்மி	ரூ. 30.00
ஔவைக்குறள் ஔவையார் அகவல் உரையுடன்	ரூ. 30.00
போகர் மலை வாகடம் ஓலைச் சுவடியிலிருந்து	ரூ. 35.00
திருமூலர் திட்சா விதிமுதலிய நூல்கள் ஓலைச் சுவடியிலிருந்து	ரூ. 50.00
அகஸ்தியர் ஆறெழுத்தந்தாதி அந்தரங்க தீட்சாவிதி	ரூ. 35.00
சித்தர்கள் வரலாறு. எஸ்.பி. இராமச்சந்திரன்	ரூ.100.00
இராஜவைத்திய போதினி	ரூ. 40.00
போகர் நிகண்டு 1200 (கருத்துரையுடன்)	ரூ. 125.00
போகர் கருக்கிடை நிகண்டு 500 (கருத்துரையுடன்)	ரூ. 70.00
காகபுசுண்டர் பெருநூல் காவியம் 1000	ரூ. 75.00
அகஸ்தியர் ஆயுள் வேதம் மூலமும்உரையும்	ரூ. 90.00
கோஷாயி அனுபோக வைத்திய பிரம்மரகசியம் 1-2-3-4 பாகங்கள் அடங்கிய முதல்பாகம்	ரூ.100.00
கோஷாயி அனுபோக வைத்திய பிரம்மரகசியம் 5-6-7-8- பாகங்கள் அடங்கிய இரண்டாம் பாகம்	ரூ.100.00
அகஸ்தியர் ஆயுள் வேதம் 1200மூலமும் உரையும்	ரூ. 90.00
அகஸ்தியர் 12000 என்னும் பெருநூல் காவியம் ஐந்து காண்டங்கள்:	
முதல் காண்டம்	ரூ. 45.00
இரண்டாம் காண்டம்	ரூ. 45.00
மூன்றாம் காண்டம்	ரூ. 65.00
நான்காம் காண்டம்	ரூ. 65.00
ஐந்தாம் காண்டம்	ரூ. 45.00
அகஸ்தியர் பரிபூரணம் 400 (உரையுடன்)	ரூ. 50.00
அகஸ்தியர் வாத காவியம் 1000	ரூ. 80.00
ரெக்ஸின்	ரூ.100.00
அகஸ்தியர் ஞான காவியம்	ரூ. 80.00
அகஸ்தியர் வைத்திய காவியம் 1500	ரூ. 50.00
அகஸ்தியர் மாந்திரிக காவியம் 1000	ரூ. 45.00
அகஸ்தியர் அமுத கலை ஞானம் 1200	ரூ. 55.00
அகஸ்திரியர் வாத சௌமியம் 1200	ரூ. 45.00

அகஸ்தியர் பூஜாவிதி முதலிய ஏழு நூல்கள் : பூஜாவிதி 200, ஞான சைதன்யம் 51, தீட்சாவிதி200, துறையறி விளக்கம், பூரண

தாமரை
நூலகம்